**ம.அ.9 ந.க.எண்.இ1/2170/2013**
**முதன்மைச் செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 14.06.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.426/2013 **பொருள் எண்.01**

**பொது கழிப்பிடம் இடிக்க அனுமதி**

| வரிசை எண் | வார்டு எண்.113 | மண்டலம்–9 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–9, பகுதி–26, வார்டு–113ல் தர்மாபுரம் பிரதான தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடக் கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | சென்னை மாநகராட்சி– 1978. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 33.10 ச.மீ (356.30 ச.அடி) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 33.10 ச.மீ (356.30 ச.அடி) |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 1,14,170.50 ஆகும். |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 7 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் பயன்பாட்டிற்கு ஏதுவாக இல்லாத நிலையில் உள்ளதால் இப்பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடிக்க வேண்டியுள்ளது. |
| 8 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | பல்நோக்கு கூடம் கட்டும் பணி |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–9 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 9 – வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 9/2013, நாள். 10.01.2013. |

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, பகுதி–26, வார்டு–113 ல் தர்மாபுரம் பிரதான தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடக் கட்டிடத்தை இடிக்க நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“15.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.65/2013, நாள்.15.07.2013ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 260/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>சு.ஜெ.ந.வே.தி.ந.க.எண் எஸ்1/252/2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.427/2013 **பொருள் எண்.02**

**<u>சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் சென்னை மாநகராட்சி எல்லலைக்குட்பட்ட ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் **634+1=635** முதியோர்கள், **351** விதவைகள் மற்றும் **72** மாற்றுத் திறனாளிகள் ஆக மொத்தம் **1058** பயனாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் வறுமை நிலையை கண்டறிந்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மூலமாக மத்திய அரசின் இந்திரா காந்தி தேசிய முதியோர் மற்றும் விதவை ஓய்வூதிய திட்ட நிதியிலிருந்து **1058** பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

<u>ஐந்து வட்டாட்சியர் அவர்களால் ஏப்ரல்– 2013 மாதத்தில் கண்டறியப்பட்ட பயனாளிகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.</u>

| வ. எண் | வட்டாட்சியர்அலுவலகப் பெயர் | முதியோர் ஓய்வூதியம் | விதவை ஓய்வூதியம் | மாற்றுத் திறனாளி ஓய்வூதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | எழும்பூர்–நுங்கம்பாக்கம் | 146 | 101 | 13 | 260 |
| 2 | கோட்டை–தண்டையார்பேட்டை | 108 | 51 | 18 | 177 |
| 3 | மாம்பலம்–கிண்டி | 70 | 60 | – | 130 |
| 4 | மைலாப்பூர்–திருவல்லிக்கேணி | 01 | – | – | 01 |
| 5 | புரசைவாக்கம்–பெரம்பூர் | 310 | 139 | 41 | 490 |
| | மொத்தம் | 635 | 351 | 72 | 1058 |

இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இதுவரை **2,35,150**பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேலே குறிப்பிட்டுள்ள **1058** பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் **2,35,151** முதல் **2,36,208** வரை வறுமைக்கோட்டு எண் வழங்கப்பட வேண்டும்.

மேலும், தமிழக முதலமைச்சரின் ‘‘அம்மா திட்டம்’’ மூலம் பயனாளிகள் விண்ணப்பித்திருப்பதால் அவசியம், அவசரம் கருதி மேற்குறிப்பிட்டுள்ள **635** முதியோர்கள், **351** விதவைகள் மற்றும் **72** மாற்றுத் திறனாளிகளுக்குமாக ஆக மொத்தம் **1058** பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் **2,35,151** முதல் **2,36,208** வரை வறுமைக்கோட்டு எண் வழங்கியதற்கு, நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.27/2013, நாள் 17.07.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**சு.ஜெ.ந.வே.தி.ந.க.எண் எஸ்1/245 & 248 /2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.428/2013 **பொருள் எண்.03**

**ஆலந்தூர் வட்டாட்சியர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்களுக்கு ஒய்வூதியம் வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

ஆலந்தூர் வட்டத்திற்குட்பட்ட 354 பயனாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் வறுமை நிலையை கண்டறிந்து அவர்களுக்கு ஒய்வூதியம் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் சமூக பாதுகாப்புத் திட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட ஆலந்தூர் வட்டாட்சியர் அவர்கள் மூலமாக மத்திய அரசின் இந்திரா காந்தி தேசிய முதியோர், விதவை மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதிய திட்ட நிதியிலிருந்து 354 பயனாளிகளுக்கு ஒய்வூதியம் வழங்க கீர்கண்டவாறு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட ஆலந்தூர் வட்டாட்சியர் அவர்களால் கண்டறியப்பட்ட பயனாளிகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | முதியோர் ஒய்வூதியம் |
|---|---|---|
| 1 | ஆலந்தூர் | 279 |
| 2 | மீனம்பாக்கம் | 25 |
| 3 | நந்தம்பாக்கம் | 50 |
| | மொத்தம் | 354 |

இந்திரா காந்தி தேசிய முதியோர் ஒய்வூதிய திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு இதுவரை 1206 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேலே குறிப்பிட்டுள்ள 354 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் 1207 முதல் 1560 வரை வறுமைக்கோட்டு எண் வழங்கப்பட வேண்டும்.

மேலும், ‘‘மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அம்மா திட்டம்’’ மூலம் பயனாளிகள் விண்ணப்பித்திருப்பதால் அவசியம், அவசரம் கருதி மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 354 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் 1207 முதல் 1560 வரை வறுமைக்கோட்டு எண் வழங்கியதற்கு, நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.28/2013, நாள் 17.07.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/2542/2013**
**ஆணையாளர் (பொ) அவர்களின் 13.7.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.429/2013 **பொருள் எண்.04**

**நியாயவிலை கடைக்கு இட ஒதுக்கீடு செய்ய அனுமதி**

**7.06.2013** நாளிட்ட இணைப்பதிவாளரின் கடிதத்தில் வ.உ.சிதம்பரனார் கூட்டுறவு பண்டகசாலை தற்பொழுது எண்.**30/127** வரதா முத்தியப்பன் தெரு, சென்னை–**1** என்ற முகவரியில் இயங்கி வருவதாகவும், இப்பண்டக சாலையின் கிளையை சென்னை–12 , புளியந்தோப்பு, கேசவ பிள்ளைபூங்கா குடிசை மாற்று வாரிய குடியிருப்புப் பகுதியில் திறக்க உள்ளதாகவும், இந்தப் பண்டகசாலையின் நியாய விலைக்கடை தற்போது பேருந்து போக்குவரத்து கனரக வாகனங்கள் அதிகமாக செல்லும் சாலையில் அமைந்துள்ளதெனவும், அதனால் பொதுமக்கள் அடிக்கடி விபத்துக்கு உள்ளாகின்றனர் எனவும், தற்காலிகமாக கேசவ பிள்ளை பூங்கா நகர் திட்டப்பகுதியில் **1000** சதுரஅடி கொண்ட உடற்பயிற்சி கூடம் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் உள்ளதாகவும் இந்த உடற்பயிற்சி கூடத்தை மேற்படி பண்டகசாலைக்கு ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கோரியுள்ளார்.

**24.06.2013** நாளிட்ட **6**வது மண்டல அலுவலரின் குறிப்புரையில் மேற்கண்ட உடற்பயிற்சி கட்டிடத்தை வ.உ. சிதம்பரனார் கூட்டுறவு பண்டகசாலைக்கு மண்டலம் **–6**, வார்டு **–77**, பகுதி **17**ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயனற்ற நிலையில் உள்ள உடற்பயிற்சி கூடத்தை நியாய விலை கடையாக மாற்றி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய **6–**வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.**22/2013** இல் (நாள்–**14.06.2013**) பரிந்துரைத்துள்ளது.

எனவே, மண்டலம் **–6**, வார்டு–**77**–ல் கேசவப்பிள்ளை பூங்கா நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான**258.72** ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள உடற்பயிற்சிக்கூடத்தின் பரப்பளவு **123.12** சதுர மீட்டர் ஆகும். மன்றம் பின்னர் நிர்ணயிக்கும் மாத வாடகையும் **12** மாத வாடகை முன்பணமும் செலுத்த வேண்டும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யயிருப்பின் சென்னை மாநகராட்சி முன் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் ஆகிய நிபந்தனைகளுடன் வ.உ.சிதம்பரனார் கூட்டுறவு பண்டகசாலைக்கு நியாய விலைக்கடை நடத்துவதற்காக ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**19.07.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். **309/2013** நாள் **19.07.2013–**ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"பொது மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக நியாய விலை கடைகளுக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.**5.00** என்று நிர்ணயம் செய்யலாம் என்று **22.05.2013** அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் தீர்மான எண்.**312/2013** ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்த வ.உ.சிதம்பரனார் கூட்டுறவு பண்டக சாலைக்கு சதுர அடிக்கு ரூ.**5.00** என்று நிர்ணயம் செய்யவும், இனிவரும் காலங்களில் அரசு நிறுவன நியாய விலை கடைக்கு இட ஒதுக்கீடு கோரும் அனைத்து நிகழ்விலும் சதுர அடிக்கு ரூ.**5.00** என்றே நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''.

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ6/5350/2013**
**ஆணையாளர் (பொ) அவர்களின் 13.7.13 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.430/2013 **பொருள் எண்.05**

**பல்நோக்கு மைய கட்டிடம் மின்துறை மற்றும் தபால் துறைக்கு இட ஒதுக்கீடு**

**10.12.2012** நாளிட்ட வார்டு குழு தீர்மானத்தில் மண்டலம்–14, பகுதி–41, வார்டு–185ல் பாலவாக்கம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள வார்டு அலுவலக வளாகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் 2011–2012 ஆம் ஆண்டு நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தில் தரைத் தளம் முழுவதும் இரண்டு பிரிவுகளாக (ஏ) பிரிவு தபால் அலுவலகத்திற்கும்,(பி) பிரிவு தமிழ்நாடு மின்வாரியம் அலுவலகத்திற்கும் பிரித்து இரண்டு துறைக்கும் ஒப்படைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**08.05.2013** நாளிட்ட 14–வது வார்டு குழு தீர்மானத்தில் மேற்படி இடத்தில் அமைந்துள்ள பல்நோக்கு மைய கட்டிடம் இன்றைய சந்தை நிலவரப்படி வாடகை நிர்ணயம் செய்து தபால் துறை மற்றும் மின்துறைக்கு சதுர அடிக்கு ரூ.35/– வீதம் மாத வாடகைக்க விடுவதற்கு பரிந்துரைத்துள்ளது.

**16.11.2011** நாளிட்ட முதன்மை கண்காணிப்பாளர் தபால் நிலையம் அவர்களின் கடிதத்தில் மேற்படி புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தில், முன்பகுதியினை மாத வாடகை அடிப்படையில் தபால் துறைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், 24.12.2012 நாளிட்ட 14–வது மண்டல அலுவலரின் குறிப்பில் மாநில அரசின் கீழ் செயல்படும் மின்சார துறை அலுவலகம் அமைக்க பாலவாக்கத்தில் உள்ள உதவி பொறியாளர் (தமிழ்நாடு மின்சார வாரியம்) சென்னை மாநகராட்சி நிர்ணயம் செய்யும் வாடகையை தருவதாக நேரில் தெரிவித்துள்ளார் என்று இக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், மின்துறையின் கேட்புக் கடிதம் ஏதும் இல்லை. மின்துறையின் கேட்பு கடிதம் பெற்று அனுப்புமாறு 13.06.2013–இல் இவ்வலுவலக குறிப்பு மூலம் கோரப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–14, பகுதி–14, வார்டு–185 புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தில் தரைத் தளம் முழுவதும் இரண்டு பிரிவுகளாக பிரித்து அதில் ஒரு பிரிவு ஏ பிரிவு 1141 சதுர அடி கொண்ட கட்டிடத்தை சதுர அடிக்கு ரூ.35/– என வாடகை நிர்ணயம் செய்தும், 12 மாத வாடகை முன்பணம் செலுத்த வேண்டும் என்றும், இக்கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்ய இருப்பின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் தபால் துறைக்கு மட்டும் ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 310/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/ 3413 /2012**
**ஆணையாளர் (பொ) அவர்களின் 13.7.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.431/2013 **பொருள் எண்.06**

**வணிக வளாகம்**

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகள் 3 வருட உரிமம் அடிப்படையில் ஒதுக்கீடு வழங்கிட ஒப்பந்தம் / ஏலம் முறையில் ஒப்பந்த புள்ளகள் வரவேற்கப்பட்டு வருகிறது.

அதன்படி 21.09.2012 அன்று நடைபெற்ற ஏலத்திற்கு மண்டலம்–1 முதல் 10 வரையில் உள்ள வணிக வளாகங்களின் காலி கடைகளுக்கு ஒப்பந்தம் / ஏலம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஏலத்தில் கலந்து கொள்ள ஒப்பந்தபுள்ளி படிவங்கள் 62 நபர்களால் பெறப்பட்டது.

இவற்றில் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மட்டுமே ஏலத்தில் கொண்டு உரிமம் கோரியதனை தொடர்ந்து ஒதுக்கீடு வழங்கப்பட்டது விவரம் பின்வருமாறு.

| வ. எ ண் | மண்டலம் / வார்டு எண். | வணிக வளாக்த்தின் பெயர் | கடை எண் / தளம் / ச.அடி / கோரிய தொகை ரூ. | ஒதுக்கீடுதாரரின் பெயர் | வைப்புத் தொகை 25% முன்பணத் தொகை செலுத்தியது ரூ. | மீதி 75% முன் பணத் தொகை செலுத்தியது ரூ. | 12 மாத முன் பணத் தொகை செலுத்தியது | ஒதுக்கீடு ஆணை வழங்கிய நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 1/த/த 49.50 ரூ.44/– | எம். விஸ்வநாதன் | 6660/– | 19,800/– | 26,400/– | 25.10.12 |
| 2 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 4/த/த 49.50 ரூ.24/– | எம். விஸ்வநாதன் | 3600/– | 10,800/– | 14,400/– | 25.10.12 |
| 3 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 5/த/த 49.50 ரூ.23/– | எம். விஸ்வநாதன் | 3450/– | 10,350/– | 13,800/– | 25.10.12 |
| 4 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 8/த/த 49.50 ரூ.24/– | எம். விஸ்வநாதன் | 3600/– | 10,800/– | 14,400/– | 25.10.12 |
| 5 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 9/த/த 49.50 ரூ.42/– | எம். விஸ்வநாதன் | 6300/– | 18,900/– | 25,200/– | 25.10.12 |
| 6 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 12/த/த 49.50 ரூ.24/– | எம். விஸ்வநாதன் | 3600/– | 10,800/– | 14,400/– | 25.10.12 |
| 7 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 13/த/த 49.50 ரூ.23/– | ஆர். ராஜேஷ் | 3450/– | 10,350/– | 13,800/– | 25.10.12 |
| 8 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 2/த/த 47.50 ரூ.25/– | ஆர். ராஜேஷ் | 3600/– | 10,800/– | 14,400/– | 25.10.12 |
| 9 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 3/த/த 47.50 ரூ.24/– | ஆர். ராஜேஷ் | 3456/– | 10,368/– | 13,824/– | 25.10.12 |
| 10 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 6/த/த 47.50 ரூ.26/– | ஆர். ராஜேஷ் | 3744/– | 11,232,/– | 14,976/– | 25.10.12 |
| 11 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 7/த/த 47.50 ரூ.25/– | என். பார்த்தசாரதி | 3600/– | 10,800/– | 14,400/– | 25.10.12 |
| 12 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 10/த/த 47.50 ரூ.28/– | ஜே. கோபி | 4032/– | 12,096/– | 16,128/– | 25.10.12 |
| 13 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 11/த/த 47.50 ரூ.26/– | ஜே. கோபி | 3744/– | 11,232/– | 14,976/– | 25.10.12 |
| 14 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 14/த/த 47.50 ரூ.25/– | ஆர். ராஜேஷ் | 3600/– | 10,800/– | 14,400/– | 25.10.12 |
| 15 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 15/த/த 57.85 ரூ.26/– | ஜே. கோபி | 4524/– | 13,572/– | 18,096/– | 25.10.12 |
| 16 | 4/48 | பார்த்தசாரதி நகர் | 16/த/த 64.50 ரூ.26/– | ஜே. கோபி | 5070/– | 15,210/– | 20,280/– | 25.10.12 |
| 17 | 4/45 | இளங்கோ நகர் | 4/த/த 45 ச.அ ரூ.28/– | எம். பொன்னையன் | 3780/– | 11,340/– | 15,120/– | 25.10.12 |
| 18 | 4/45 | இளங்கோ நகர் | 20/த/த 45 ச.அ ரூ.30/– | ஆர். அப்பன்ராஜ் | 4050/– | 12,150/– | 16,200/– | 25.10.12 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | 5/63 | குருவப்ப தெரு | 13/மு/த 120 ச.அ ரூ.20/– | ஏ. ராஜ்குமார் | ஒற்றை ஏலதாரர் | | | நிராகரிக்கப் பட்டது |
| 20 | 6/77 | 5, டிமெல்லாஸ் சாலை | 3மு/த 176 ச.அ ரூ.23/– | பி.கே. இளமாறன் | ஒற்றை ஏலதாரர் | | | நிராகரிக்கப் பட்டது |

மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 18 நபர்களுக்கு உரிய ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டது.

மேலும், குருவப்ப தெரு, மண்டலம்–5, வார்டு–63 மற்றும் 5 டிமெல்லாஸ் சாலை மற்றும் மண்டலம்–6, வார்டு–77 ஆகிய 2 கடைகளுக்கு ஒற்றை ஏலதாரர்கள் மட்டுமே கலந்து கொண்டதால் இவர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

மேலும் விண்ணப்படிவம் பெற்றிருந்தும் 6 நபர்கள் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகளை 21.09.2012 அன்று ஏலம் விடப்பட்டு மீதமுள்ள கடைகளை மறு ஏலத்தில் கொண்டுவரப்பட்டது.

மேற்கண்ட விவரங்கள் நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 311/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.அ1/ 7991 /2013**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.432/2013 **பொருள் எண்.07**

**சென்னை உயர்/மேல்நிலை மற்றும் மண்டல மைய பள்ளிகளுக்கு கணினி உதவியாளர் நியமிக்க அனுமதி**

சென்னை மாநகராட்சி வரவு செலவுத்திட்ட அறிவிப்புகள் 2013–2014 வரிசை எண்.6ல் சென்னை உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மண்டல மையப்பள்ளிகளில் சம்பளம் பட்டியல் தயாரிக்கவும், கடிதங்களுக்கு பதில் அளிக்கவும் அலுவலர்களுக்கு உடனுக்குடன் தகவல் அளிக்கவும் அலுவலகப்பணித்திறனை மேம்படுத்த தலைமை ஆசிரியருக்கு உதவியாக கணினிக் கல்வியில் திறன்மிக்க ஒருவர் நியமிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 38 சென்னை உயர்நிலைப்பள்ளிகள் 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகள், மண்டல மைய பள்ளிகள் 10 ஆக (32+38+10=80) 80 பள்ளிகளில் கல்வித்தகுதி வாய்ந்த 80 கணினி உதவியாளர்கள் நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கணினி உதவியாளர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவர். இவர்களுக்கு 1 மாதத்திற்கு ரூ.7000/– என நிர்ணயித்து 80 கணினி உதவியாளர்களுக்கு 5,60,000 X 11 மாதத்திற்கு = ரூ.61,60,000/– ஊதியம் வழங்கப்படும். இவர்களின் கல்வித்தகுதி B.Sc., Computer Science or B.C.A., தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே தகுதியானவர்களாக கருதப்படுவர்.

கணினி உதவியாளர்களுக்கு மாதா மாதம் வழங்கப்படும் ஊதியம் கல்வித்துறையில் கணக்கு குறியீட்டு எண்.F4 80–82–07, 230–11–02–02 என்ற தலைப்பில் பெறப்பட்டு அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடமிருந்து ஒப்புகை சீட்டு (Voucher) பெறப்பட்டு தலைமை ஆசிரியர் மூலம் ஊதியம் வழங்கப்படும்.

எனவே,

1. சென்னை உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு 1 கணினி உதவியாளர் என 70 பள்ளிகளுக்கு 70 கணினி உதவியாளர்களும், ஒரு மண்டல மைய பள்ளிக்கு 1 கணினி உதவியாளர் என 10 மண்டல மைய பள்ளிகளுக்கு 10 கணினி உதவியாளர்கள் என மொத்தம் 80 கணினி உதவியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யவும்,
2. இதற்கான செலவினத்தொகை ரூ.61,60,000/– (ரூபாய் அறுபத்து ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) கல்விச்செலவினம் F4 80–82–07, 230–11–02–02 என்ற தலைப்பில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.25/2013, நாள் 17.07.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 304/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.அ1/4278/2013**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.433/2013 பொருள் எண்.08

**2013–2014–ம் கல்வியாண்டில் சென்னை பள்ளிகளில் பாதுகாப்பு பணி மேற்கொள்ள செக்யூரிட்டி காவலர்கள் நியமிக்க ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தை இரத்து செய்து புதிய ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய அனுமதி.**

சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் இயங்கி வரும் மேல்நிலைப்பள்ளிகளின் பாதுகாப்பு நலன் கருதி காவலர் பணிக்கு திறந்தவெளி ஒப்பந்தம் மூலம் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை ஒவ்வொரு கல்வி ஆண்டும் மண்டல அலுவலக மூலம் நியமனம் செய்து வந்தன.

தனியர் இரவு காவலர் பாதுகாப்பு பணியில் தோய்மை, மற்றும் முதிர்வு வயதுள்ள பணியாளர்கள் மற்றும் அலட்சியம் போன்றவைகளால் பள்ளிகளில் பாதுகாப்பு மற்றும் மாணவ/மாணவியரின் பாதுகாப்பு குறைபாடு குறைந்து விலை மதிப்புள்ள கணினி மற்றும் மேஜைகள் திருட்டு போகின்றன.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஏற்கெனவே உள்ள ஒப்பந்தந்தை இரத்து செய்து, ஒப்ப விதிகளுடன் சென்னை உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் பாதுகாப்பு பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் தகுந்த நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி கோரப்பட்டு புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். சென்னை உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு மூவர் என 70 பள்ளிகளுக்கு (70 X 3) 210 காவலர்களும், சென்னை உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் ஒரே வளாகத்தில் இரண்டு வளாகங்களாக பத்து பள்ளிகள் இயங்கி வருகின்றன. அப்பள்ளிகளில் ஒரு வளாகத்திற்கு மூவர் என 10 பள்ளிகளுக்கு (10 X 3) 30 காவலர்கள் என ஆக மொத்தம் (70 + 10) X 3 = 240 காவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

மேலும் காவலர் ஒருவருக்கு மாத ஊதியம் ரூ.10,,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அடிப்படையில் தரம் வாய்ந்த நிறுவனங்களின் மூலம் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, அதில் சிறந்த நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமனம் செய்யப்படவுள்ளது. இப்பணிக்கு கீழ்கண்டவாறு நிபந்தனைகள் அடிப்படையில் ஒப்பம் கோரலாம் என கருதப்படுகிறது.

- Should be DGR, SSI/NSIC Registered / Govt sponsored agency.
- Company should have obtained Licence from competent Authorities (Police) for Private Security Agency from Tamil Nadu.
- Should have registered with ESI, EPF and Service Tax Authorities and proof of the same to be enclosed.
- Should have a minimum turn over of 1 crore each during the last three years and proof of the same is to be attached.
- Single contract value of 40 lakh in a year is a must.
- Last three years IT returns.
- Proof of employing a minimum of 100 workers – proof to be submitted
- Should have their Registered / Branch Office at Chennai ( Proof of the same to be enclosed)
- Should have adhere to T.N.Minimum Wages Act and statuary requirements like ESI, EPF etc.,
- Proof adhering to be statutory requirements.

எனவே,

1. 2013–2014–ம் கல்வியாண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் தரம் வாய்ந்த நிறுவனங்களின் மூலம் ஒப்பந்தப்புள்ளி (Tender) அடிப்படையில் காவலர்களை கல்வி துறையின் மூலம் பணி நியமனம் செய்வதற்கு அனுமதியும்,
2. ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தை இரத்து செய்யவும் மற்றும் சென்னை உயர்/மேல்நிலை பள்ளிகளின் பாதுகாப்பு பணியினை காலை 6.00 மணிமுதல் மதியம் 2.00 மணி வரை, மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மற்றும் இரவு 10.00 முதல் அடுத்த நாள் காலை 6.00 மணி வரை 8 மணி நேரத்திற்கு ஒரு காவலர் வீதம் ஒரு வளாகத்திற்கு 3 காவலர் என 80 வளாகங்களுக்கு 240 காவலர்கள் நியமனம் செய்ய அனுமதியும்,

3. இதற்கான செலவீனம் ஒரு இரவு காவலருக்கு மாத ஊதியம் ரூ.10,000 என 240 பேருக்கு 240 X 10,000 X 12 = ரூ.2,88,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி எட்டு இலட்சம் மட்டும்) ஆகும். இச்செலவினத்தை கல்வித்துறை கணக்கு குறியீடு எண். 80–82–01 220–11–03–12 கல்வித்துறையின் காவலருக்கான நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.26/2013, நாள் 17.07.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற லைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 305/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>வ.து.ச.கூ.ந.க.எண்.எம்3/4015/2013</u>**
**<u>ஆணையாளர் (பொ) அவர்களின் 12.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.434/2013 **பொருள் எண்.09**

**<u>சமுதாய நலக்கூடங்களைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் கண்காணிக்கும் பணி மேற்கொள்வதற்கு தேவைப்படும் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி</u>**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 52 சமுதாய நலக் கூடங்கள் மற்றும் 2 கலையரங்கங்கள் பொது மக்களின் நிகழ்ச்சிக்காக வருவாய் துறை தலைமையிடத்தில் முன்பதிவு செய்யப்படுகிறது. டாக்டர் அம்பேத்கார் சாலை சமுதாய நலக் கூடம் மற்றும் 2 கலையரங்கங்கள் தவிர அனைத்து சமுதாய நலக் கூடங்களுக்குத் தேவையான மேசை நாற்காலிகள் மற்றும் சமையல் பாத்திரங்கள் ஆகிய தளவாடப் பொருட்கள் வட்டார அலுவலகங்களின் மூலம் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. 2 கலையரங்கங்கள், 52 சமுதாய நலக் கூடங்கள், தளவாடப் பொருட்கள் ஆகியவற்றைப் பாரமரிக்கவும் கண்காணிக்கவும் தூய்மையாக வைத்திருக்கப் பணியாளர்கள் தேவைப்படுவதால் 54 கேர்டேக்கர்கள், 162 பாதுகாவலர்கள் 54 சுத்தம் செய்பவர்கள் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் மூலம் பணி நியமனம் செய்வதற்கு முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் உத்தரவு பெற்று 30.5.2013 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

பொது மேலாளர், தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்தின் 17.6.2013 நாளிட்ட கடிதத்தில் அரசாணைகளில் குறிப்பிட்டுள்ளவாறு பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் மற்றும் சில நிபந்தனைகள் ஆகியவை கீழ்கண்டுள்ளவாறு குறிப்பிட்டுள்ளனர். மேலும் முன்னாள் இராணுவப் படை வீரர் இனத்தில் கிளீனர் கிடையாததால் அளிக்க இயலாது எனவும் மேலும் கீழ்க்கண்டுள்ளபடி கடிதம்/சான்றிதழ் வழங்கும்படி தெரிவித்துள்ளனர்.

| வ. எண் | பணியாளர்களின் வகைப்பாடு | தொகை/ஒரு மாதத்திற்கு (ஒரு நாள் / 8 மணி நேரப் பணி) விடுப்பு உட்பட ரூ. | மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை | மொத்த தொகை ஒரு மாதத்திற்கு (ஒரு நாள் / 8 மணி நேரப் பணி) விடுப்பு உட்பட ரூ. |
|---|---|---|---|---|
| 1. | கேர் டேக்கர் | ரூ.11,294 | 54 | 609,876.00 |
| 2. | அலுவலக உதவியாளர் | ரூ. 9,958 | 162 | 16,13,196.00 |
| 3. | மொத்தம் | | | 22,23,072.00 |
| 4. | சுர்வீஸ் சார்ஜஸ் 12 சதவீதம் | | | 2,66,768.64 |
| 5. | மொத்தம் | (1) + (2) | | 24,89,840.64 |
| 6. | சேவை வரி 12.36 சதவீதம் | | | 3,07,744 . 30 |
| 7 | மொத்தம் (5) + (6) | | | 27,97,584.94 |
| | | | மொத்தம் | 27,97,585.00 |

1. நிதி ஆதார சான்றிதழ்.
2. தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் கேட்கும் நடப்பு மாத ஊதியத்திற்குண்டான பட்டிக்கான தொகையை அடுத்து வரும் மாதத்தில் 15 நாட்களுக்குள் வழங்கப்படும் என்பதற்கான உறுதிமொழி கடிதம் அளிக்க வேண்டும்.
3. பட்டியை ஒரு மாதத்திற்குள் வழங்கப்படவில்லை என்றால், தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் பணியாளர்களை திரும்பப் பெற்றுக் கொள்ள ஒப்புதல் கடிதம் வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்தின் கடிதத்தில் குறிப்பிட்ட கோர்டேக்கர் **54** நபர்கள் அலுவலக உதவியாளர் (வாட்சுமேன்) **162** நபர்கள் ஆகியவைகளுக்குண்டான மாத ஊதியம் ரூ.**27,97,585/–** என குறிப்பிட்டும் சில நிபந்தனைகள் குறிப்பிட்டு கடிதம் வேண்டியும் கேட்டுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் குறிப்பிட்டுள்ள தொகையை நிதி ஆலோசகர் மூலம் ஒதுக்கீடு செய்யவும் வட்டார அலுவலகங்களில் (வடக்கு, மத்திய, தெற்கு) ஆகியவற்றில் உள்ள சமுதாய நலக் கூடங்களுக்கு தேவையான கோர்டேக்கர், வாட்சுமேன் ஆகியவர்களை தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்தின் மூலம் பெற்று அவர்களுக்குண்டான மாத ஊதியத்தை சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகங்கள் மூலம் வழங்குவதற்கும் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்தின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களை வழங்குவதற்கும்,

1. தமிழ்நாடு முன்னாள் இராணுவப் படை வீரர் கழகம் மூலம் வழங்கப்படவுள்ள **(54)** கோர்டேக்கர்கள், அலுவலக உதவியாளர்கள் **(162)** மற்றும் இதர செலவினம் சேர்த்து பிரதி மாத ஊதியம் ரூ.**27,97,585/–** மற்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதற்கும்
2. **52** சமுதாய நலக் கூடங்கள் மற்றும் **2** கலையரங்கங்களுக்கு தேவைப்படும் **54** கோர்டேக்கர்கள் **162** பாதுகாவலர்கள் (காலை, பகல் மற்றும் இரவு) ஆகியோர்களை தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் மூலம் (Texco) மூலம் பணி நியமனம் செய்வதற்கும்
3. இப்பணியாளர்களுக்குச் சம்பளம் மற்றும் இதர பயன்கள் வழங்குவதற்கும்
4. இப்பணியாளர்களின் பணியினை கண்காணிக்கவும்
5. இப்பணியாளர்களின் பணி நியமன, சம்பளம் மற்றும் இதர பயன்களை ஆணை வழங்கப் பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்கு தொடர்ந்து வழங்குவதற்கும்,
6. இனம் **2**முதல் **5** வரையிலான பணியினை சம்மந்தப்பட்ட வட்டார அலுவலகம் மூலம் மேற்கொள்வதற்கும்
7. சுத்தம் செய்பவர்கள் (Cleaner) அந்தந்த வட்டார அலுவலகம் மூலம் பணியமர்த்துவதற்கும்
8. மேற்காணும் பணிக்காகத் தேவைப்படும் நிதியினை நிதி ஆலோசகர் மூலம் ஒதுக்கீடு செய்வதற்கும் ஆணை வேண்டப்படுகிறது.

மேற்கண்ட **1** முதல் **8** வரையிலுள்ள இனங்களுக்கு நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**19.07.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். **312/2013** நாள் **19.07.2013–**ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.8.ந.க.எண்.பி2/3909/2013**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 9.7.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.435/2013 **பொருள் எண்.10**

**2013–14 – பணி ஒப்பம் – மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு திட்டமாக வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவிப்பின்படி மண்டலம்–6,8,9 மற்றும் 10 வரை உள்ள 31 சமுதாய நலகூடத்திற்கு தேவையான தளவாடப்பொருட்களை தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு அனுமதி.**

| வ. எ | மண்டலம் | பணி/ சாலையின் பெயர் | பணியின் விவரம் | சமுதாய நலக் கூடம் | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 6,8,9 மற்றும் 10 | மண்டலம்– 6,8,9 மற்றும் 10வரை உள்ள 31 சமுதாயநல கூடத்திற்கு தேவையான தளவாடப் பொருட்களை தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யும் பணிக்கு. | 31–சமுதாய நலகூடத்திற்கு தேவையான தளவாடப் பொருட்களை தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யும் பணிக்கு. | 31 | ––– | 1,12,00,000/– |

02. மதிப்பீட்டின் எண். குழுவின் /மன்றத்தின் தீர்மான எண். : 9 வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண் பின்னர்பெறப்படும்

03. திட்ட குறியீட்டு எண் : பின்னர் பெறப்படும்

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : 2012 - 13

அ) பணியின் செலவினம் : ரூ. –––––

ஆ) மேற்பார்வை செலவு : ரூ. –––––

இ) சில்லரை மேற்பார்வை செலவு : ரூ. –––––

ஈ) மற்ற எதிர்பாரா செலவு : ரூ. –––––

உ) தரக்கட்டுப்பாடு : ரூ. –––––

மொத்தம் : ரூ.

05. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டதுநாள் : சென்னை மாநகராட்சி செய்தி வெளியீடு நாள். 25.04.2013 நாள். 26.04.13 நாளிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு மற்றும் மக்கள் குரல்

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள். : 08.05.2013

07. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான : 10.05.2013 கடைசி நாள்.

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். :

09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ? : 4

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன : 4

11. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ.எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ) | 2012 – 13 ஆண்டு விலை அலுவலக விலை மற்றும் ஒப்பந்ததாரர் நிர்ணியித்த விலைக்கு சதவீதம் ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | எ.ஆர்.வி இன்ஜினியரிங் இந்தியா லிமிடெட் | ரூ.23,42,716.00 | ரூ.23,06,247.00 | (–) 1.56% |
| 2 | சாந்தி மெட்டல் மார்ட் | ரூ.40,94,882,00 | ரூ.33,27,076.50 | (–) 18.75% |
| 3 | கோயம்புத்தூர் ரூரல் இண்டஸ்டீரீஸ் டெவலப்மெண்ட் சொசைடி | ரூ.1,05,36,087.23 | ரூ.1,16,27,705.00 | ஒப்பந்ததாரர் குறிப்பிடவில்லை |
| 4 | ஆர்.மதுசூதனன் | ரூ.42,84,524.23 | ரூ.36,24,582.00 | (–) 15.40% |
| **(செல்லாத ஒப்பம் இருப்பின் செல்லாத ஒப்பந்ததாரரின் விவரமும் அதற்கான காரணம் குறிப்பிட வேண்டும்).** | | | | |

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் ஏனில் நடத்தப்பட்ட நாள் : இல்லை மேலும் விலைகுறைப்பு கொடுக்க இயலாது. 03.06.2013 மற்றும் 04.06.2013

13. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் :

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள் : தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம்.

15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம்: ---

அ) கேட்பு காசோலை எண். நாள் . வங்கியின் பெயர் : ––

16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா? : ஆம்

அ) வரவு செலவுத் திட்ட தலைப்பு : வருவாய்துறை/மண்டலம்–9

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 09.08.2013.

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட நான்கு ஒப்பங்களில் திருவாளர்கள். சாந்திமெட்டல் மார்ட், எ.ஆர்.வி இன்ஜினியரிங்,ஆர்.மதுசூதனன் மற்றும் கோயம்புத்தூர் ரூரல் இண்டஸ்டீரீஸ் டெவலப்மெண்ட் சொசைடி ஆகிய நான்கு பேரில் திரு. கோயம்புத்தூர் ரூரல் இண்டஸ்டீரீஸ் டெவலப்மெண்ட் சொசைடி அவர்கள் ஒவ்வொரு எண்ணிக்யைிலும் விலைகுறைப்பு செய்யமால் குறிப்பிட்டிருந்ததால் அவருடைய பெயரை நீக்கம் செய்து மேலே குறிப்பிட்டுள்ள மூன்று நபர்கள் மேலும் பேச்சுவார்த்தைக்குப் பின்னும் விலைக்குறைப்பு குறைக்க இயலாது என கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் எனவே அவர்கள் அளித்த ஒப்ப விழுக்ககாடு அலுவலக விலையையும் மற்றும் ஒப்பந்ததரார் குறிப்பிட்டிருந்து விலையையும் சதவீதத்திற்கு ஒப்பிடுகையில் திரு.எ.ஆர்.வி இன்ஜினியரிங் இந்தியா லிமிடெட் அவர்களுக்கு (–) 1.88%ம் அவர் குறிப்பிட்டுள்ள தளவாட பொருட்களின் எண்ணிக்கை–27க்கு அவருக்கு நிர்ணியிக்கப்பட்ட தொகை ரூ.22,11,692/–, சாந்தி மெட்டல் மார்ட் அவர்களுக்கு (–) 18.79%ம் அவர் குறிப்பிட்டுள்ள தளவாட பொருட்களின் எண்ணிக்கை 29 க்கு அவருக்கு நிர்ணியிக்கப்பட்ட தொகை ரூ.33,19,851.50 மற்றும் ஆர்.மதுசூதனன் (–) 15.89%ம் அவர் குறிப்பிட்டுள்ள தளவாட பொருட்களின் எண்ணிக்கை 28 க்கு அவருக்கு நிர்ணியிக்கப்பட்ட தொகை ரூ.35,28,357/– ஆகும். எனவே, மேயர் அவர்களின் அறிவிப்பின்படியும் பணியின் அவசரம் அவசியம் கருதியும் உடனடியாக31–சமுதாய நலக்கூடத்திற்கு தளவாடங்கள் மேற்குறிப்பிட்டுள்ள மூன்று ஒப்பந்ததாரர் அவர்களிடம் இருந்து கொள்முதல் பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

மன்றத் தீர்மானத்தின் படி, (தீர்மான எண்.512 / 2007 நாள்.25.09.2007),

1) அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலைப் விவரப்பட்டியல் தயாரிப்பதற்கும், (source-Builders Association of India –South Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.

2) அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு, ஒப்பங்கள் பெறப்படும் பொழுது,ஒப்பீடு (Comparison) செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,

3) மேலும், சந்தை விலைகளில் மாற்றங்கள் நிகழும் பொழுது,அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும்,மன்றம் அனுமதிஅளித்துள்ளது.

இப்பணிக்கு சந்தை விலை ஏதும் இல்லை.

| | |
|---|---|
| பணியின் அலுவலக மதிப்பு | : ரூ.1,05,36,087.23 |
| பணியின் சந்தை விலைப்படி மதிப்பு | : ரூ. ------- |
| ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | : ரூ.22,11,692(எ.ஆர்.வி இன்ஜினியரிங்) |
| | ரூ.33,19,851.50(சாந்தி மெட்டல் மார்ட்) |
| | மற்றும் ரூ.35,28,357 (ஆர்.மதுசூதனன்) |

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். சாந்திமெட்டல் மார்ட் அவர்களுக்கு ஒப்பத் தொகைரூ.33,19,851.50, எ.ஆர்.வி இன்ஜினியரிங் அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.22,11,692/– மற்றும் ஆர்.மதுசூதணன் அவர்களுக்கு ஒப்பத்தொகை ரூ.35,28,357/–மதிப்புள்ள பணிகள் வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டம் 1998 பிரிவு 7 (1) & (2) ன் படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 262 / 2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 296/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.9.ந.க.எண்.எச்1/5897/2013**

**முதன்மைச் செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 19.06.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.436/2013 **பொருள் எண்.11**

**மண்டலம்–9, பகுதி–24 முதல் 27, வார்டு–109 முதல் 126 – தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி அடிப்படையில் 104 பணியாளர்களைக் கொண்டு கொசுத்தடுப்பு கட்டுப்பாடு, நோய் கட்டுப்படுத்துதல், நீர்வழி ஆதாரங்களில் உள்ள ஆகாயத் தாமரைச் செடிகளை நீக்குதல் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை தூர்வாரும் பணிக்கான ஒப்பத்தை திருவாளர். ஜே.கே. டிரான்ஸ் அவர்களுக்கு வழங்க அனுமதி.**

| வ. எ | வார்டு எண் | பணி/ சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு மீ. | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 109 முதல் 126 வரை | மண்டலம்– 9, பகுதி – 24 முதல் 27, வார்டு – 109 முதல் 126 வரையில் உள்ள பல்வேறு சாலைகள்/தெருக்கள் மற்றும் நீர்வழித்தடங்கள். | தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் 104 பணியாளர்களைக் கொண்டு கொசுத்தடுப்பு கட்டுப்பாடு, நோய் கட்டுப்படுத்துதல், நீர்வழி ஆதாரங்களில் உள்ள ஆகாயத் தாமரைச் செடிகளை நீக்குதல் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை தூர்வாரும் பணி. | --- | --- | 1,09,70,440 |

**02. மதிப்பீட்டின் எண். குழுவின் / மன்றத்தின் தீர்மான எண்.** : **9 வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண். நாள்.**

**03. திட்ட குறியீட்டு எண்** : பின்னர் பெறப்படும்

**04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை** : **2012 - 13**அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு

**அ) பணியின் செலவினம்** : ரூ. 1,09,70,440.00

**ஆ) மேற்பார்வை செலவு** :ரூ. -----

**இ) சில்லரை மேற்பார்வை செலவு** :ரூ. -----

**ஈ) மற்ற எதிர்பாரா செலவு** :ரூ. -----

**உ) தரக்கட்டுப்பாடு** :ரூ. ------

**மொத்தம்** :ரூ. 1,09,70,440/–

**05. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது நாள்.** : சென்னை மாநகராட்சி செய்தி வெளியீடு நாள். 09.05.2013 09.05.13 நாளிட்ட நமது எம்ஜிஆர் மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு

**06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள்** : **22.05.2013**

**07. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்.** : **24.05.2013**

**08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்.** :

**09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ?** : **2**

**10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன** : **2**

**11. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்**

| வ.எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை(ரூ) | 2012 – 13 ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1<br>2 | ஜே.கே. டிரான்ஸ்<br>தாஸ் சர்வீஸ் சென்டர் | ரூ.1,09,77,440.00<br>ரூ.1,09,77,440.00 | ரூ.1,13,50,040.00<br>ரூ.1,33,61,920.00 | ரூ.299/ஒரு நபருக்கு/ஒரு நாளைக்கு<br>ரூ.352/ஒரு நபருக்கு/ஒரு நாளைக்கு |
| **(செல்லாத ஒப்பம் இருப்பின் செல்லாத ஒப்பந்ததாரரின் விவரமும் அதற்கான காரணம் குறிப்பிட வேண்டும்).** | | | | |

**12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் ஏனில் நடத்தப்பட்ட நாள் : 27.05.2013.**

**13. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் : நபர் 1 க்கு ரூ.298/– வீதம் 104 நபருக்கு** 365 நாட்களுக்கு ரூ. **1,13,12,080/–**

**14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள் : தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம்.**

**15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்டவிவரம்.: ---**

**அ) கேட்பு காசோலை எண். நாள் .வங்கியின் பெயர் : ––**

**16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா? :** ஆம்

**அ) வரவு செலவுத் திட்ட தலைப்பு : பராமரிப்பு நிதி பணி (சுகாதாரத்துறை)**

**17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 10.07.2013.**

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பங்களில் திருவாளர். ஜே.கே. டிரான்ஸ் அவர்கள் விலைகுறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் அளித்த ஒப்ப விழுக்ககாடு **2012–13**ம் ஆண்டின் அலுவலக விலையை விட (+) **3.11**% ஆகும். இதன்படி அவர் அளித்த ஒப்பத்தொகை ரூ. **1,13,12,080/–** ஆகும்.

மன்றத் தீர்மானத்தின் படி, (தீர்மான எண்.512 / 2007 நாள்.25.09.2007),

1) அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலைப் விவரப்பட்டியல் தயாரிப்பதற்கும், (source-Builders Association of India –South Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2) அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு, ஒப்பங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு (Comparison) செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களை கையாளவும்,
3) மேலும், சந்தை விலைகளில் மாற்றங்கள் நிகழும் பொழுது,அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும்,மன்றம் அனுமதிஅளித்துள்ளது.

இப்பணிக்கு சந்தை விலை ஏதும் இல்லை பணியின் அலுவலக மதிப்பு: ரூ. **1,09,70,440.00**

பணியின் சந்தை விலைப்படி மதிப்பு : ரூ. ––––––––

ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை : ரூ. **1,13,12,080.00**

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர். ஜே.கே.டிரான்ஸ் அவர்களுக்கு நாள் ஒன்றிற்கு ஒரு பணியாளருக்கு ரூ. 298/– வீதம் 104 தினக்கூலி பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கு ரூ. 1,13,12,080.00 மதிப்புள்ள பணிகள் வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டம் 1998 பிரிவு 7 (1) & (2) ன் படி நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"15.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.66/2013, நாள்.15.07.2013ன்படி வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 261/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 303/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண்.அ1/6021/2013</u>**

**<u>ஆணையர் (பொ)அவர்களின் 15.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.437/2013 **பொருள் எண்.12**

**<u>வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் வரவு செலவுத்திட்டம், அறிவிப்பு எண்.22 – சென்னை பள்ளி மாணவ–மாணவியர்கள் மற்றும் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு போட்டித் தேர்விற்கான பயிற்சி வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்த அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2013 – 2014 ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம், அறிவிப்பு எண்.22–ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மாநகர படித்த பட்டதாரி இளைஞர்கள், மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி பல துறைகளைச் சார்ந்த கல்வியையும் (C.A., ICWA., M.B.B.S., B.E., TNPSC தேர்வுகள்/கணினிக் கல்வி போன்ற படிப்புகள்) மற்றும் அகில இந்திய/மாநில அளவிலான பல வேலை வாய்புகளுக்கான, உயர் கல்விக்கான போட்டித் தேர்வுகள் எழுதிடவும், அப்பகுதியின் பட்டம் பெற்ற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் தேவைக்கேற்பவும், பள்ளிகளில் இட வசதிக்கேற்ப சென்னை மாநகராட்சி போட்டித் தேர்விற்கான இப்பயிற்சியினை தனியார் நிறுவனங்களைச் சார்ந்த பயிற்சியாளர்களைக் கொண்டு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் திட்டத்தினை இவ்வாண்டு செயல்படுத்தும் விதமாக சென்னை நடுநிலைப்பள்ளிகளில் சிறந்த இடவசதி உள்ள மண்டலத்திற்கு ஒரு பள்ளி என 10 பள்ளியினை பரீட்சார்த்த முறையில் தேர்வு செய்து போட்டித் தேர்விற்கான பயிற்சி நடத்த பயன்படுத்தக் கொள்ளவும், தனியார் நிறுவனத்துடன் சென்னை மாநகராட்சி உடன்படிக்கை ஒப்பந்தம் (MOU) மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் சென்னை பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கும், சென்னை பள்ளியில் படித்த மாணவ–மாணவியர்களுக்கும் முன்னுரிமை வழங்கி கட்டணமில்லாமலும், பயிற்சி நடைபெறும் பள்ளியினை சார்ந்த அப்பகுதியின் பட்டம் பெற்ற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் தேவைக்கேற்ப போட்டித் தேர்விற்கான பயிற்சியினை தனியார் நிறுவனத்தின் குறைந்த கட்டணத்தில் பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வகையில் பயிற்சி பெறும் ஒரு மாணவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.300/– என ஒரு மையத்தில் 50 மாணவர்கள் என 10 மையங்களில் 500 மாணவர்களுக்கு எதிர்பார்க்கப்படும் செலவீனம் ரூ.300 X 50 X 10 X 12 = 18,00,000/– ( ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) ஆகும் .

மேலும் இந்நிகழ்வினை சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் அறிவிப்பு செய்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொண்டு விண்ணப்பிக்க எற்பாடு செய்யப்படவுள்ளது.

எனவே,

1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2013–2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம், அறிவிப்பு எண்.22, சென்னை பள்ளி மாணவ–மாணவியர்கள் மற்றும் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு போட்டித் தேர்விற்கான பயிற்சி வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்த அனுமதியும்,
2. துறை சார் கல்வி மற்றும் போட்டி தேர்விற்கான பயிற்சியினை மண்டலத்திற்கு ஒரு பள்ளி வீதம் 10 சென்னை நடுநிலைப்பள்ளிகளை தேர்வு செய்து பயிற்சி நடத்த பயன்படுத்தி கொள்ள அனுமதியும்,
3. தனியார் நிறுவனங்களை குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் தேர்வு செய்து அந்நிறுவனத்துடன் சென்னை மாநகராட்சி உடன்படிக்கை ஒப்பந்தம் மேற்கொள்ள அனுமதியும்,
4. இத்திட்டத்திற்கு எதிர்பாக்கப்படும் செலவீனம் ரூ.18,00,000/– கணக்கு குறியீடு எண்.460–50–01–19 இல் செலவீனம் மேற்கொள்ளவும்,
5. இத்திட்டம் குறித்து அனைத்து தகவல்களையும் சென்னை மாநகராடசியின் இணையதளத்தில் வெளியிடவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.29/2013, நாள் 17.07.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 306/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>சு.து.ந.க.எண்.336/2013</u>**

**<u>முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 20.6.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.438/2013 **பொருள் எண்.13**

**<u>சென்னை மாநகராட்சி – இடிபி செல் – 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்கள், முறையே 200 'அம்மா உணவகத்திற்கு' 15 மண்டலங்களில் கொள்முதல் செய்ய அனுமதி</u>**

முதன்மை செயலர் மற்றும் ஆணையாளரின் ஆலோசனை கூட்டத்திலும் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மூன்று மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிரா ஒவ்வொரு 'அம்மா உணவகத்திற்க்கும்', மொத்தமாக 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்கள், முறையே 200 'அம்மா உணவகத்திற்கு' கொள்முதல் செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஒரு CCTV கேமிரா மற்றும் இதர உபகரணங்கள் மற்றும் பொருத்துதல் அடிப்படை விலை, 14 சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்காக மின் துறையின் மூலம் முன்பே கொள்முதல் செய்யப்பட்ட விலையை பின்பற்றியதாகும். மொத்தமாக 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்கள் அதன் சார்புடைய உபகரணங்கள் மற்றும் பொருத்துதல் ரூ,1,07,39,000/– (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) ஒரு வருட உத்திரவாதத்துடன் கூடியது.

CCTV கேமிரா அதை இணைப்பதற்கு தேவையான இணையதள பிராட் பேண்ட் (Broad Band) இணைப்பு மூன்று கேமராக்களின் மூலம் ஒரு 'அம்மா உணவகத்தில்' நடக்கும் நிகழ்வுகளை ரிப்பன் கட்டிடம் மற்றும் மண்டல அலுவலகங்களில் இருந்து கண்காணிக்க M/s. ELCOT நிறுவனத்திற்கு ரூ.15,85,905/–(பதினைந்து இலட்சத்து எண்பத்தி ஐயிந்தாயிரத்து தொள்ளாயிரத்து ஐந்து மட்டும்) 200 இணையதள பிராட் பேண்ட் இணைப்புகளை கொள் முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதனுடைய தொழில் நுட்ப விவரங்கள் பின்வருமாறு:

- The system shall operate on 230V, AC Single phase 50Hz power supply.
- The tenderer shall be a manufacturer with ISI / ISO certificate or an authorized distributor. ISO certificate shall have scope of manufacturing of the items.

The Closed Circuit TV security system shall be guaranteed for a minimum period of one year. This guarantee is for manufacturing defects. The supplier will be intimated about defective items shall be replaced unconditionally with a new item within one week of intimation. In case of delay in replacement, the guarantee period will be extended by the number of days the replacement was delayed.

- The colour weather proof night vision cameras will be placed up to a maximum of three locations.
- An eight channel Digital video recorder (DVR) will be provided at a central location for viewing and feed from the three cameras. Extra channels are provided for fixing of additional cameras at the time of important functions or for future requirement
- CAT 6 Cable wires will be laid from the cameras to the DVR at the central location through PVC pipe
- The three locations can be monitored from the central location
- The CC TV cameras shall be provided with MS grill to safeguard against theft & damage.

| S.No | DESCRIPTION |
|---|---|
| 1 | Supply of reputed Brand, Colour Weather Proof IR (Night Vision) Camera 1/3'' 600 TVL, High Quality 26 pcs LED, IP65 Series IR Range 20M, 3.6mm Lens Metal Housing with Bracket |
| 2 | Supply of reputed Brand, 8 Channel Stand Alone High Technology DVR 8 Video and 8 Audio Recording and Live Viewing system H.264 real-time Hardware compression, D1, HD1 and CIF recording resolution with 3G option, Support to real-time remote view with IE( Internet Explorer) and dual streaming network option 8 Video and 8 audio 1HDD slot support 2TB HDD video backup Video download Through USB Flash Disk, Support PTZ control via built-in RS-485 port, VGA output with Remote control and Mouse, alarm network option with 1000 GB Hard Disk with CMS software |

| | |
|---|---|
| 3 | Supply of reputed make, 21’’ LCD Monitor suitable for working with single phase, nominal 230 V, 50Hz AC power supply |
| 4 | Supply of Reputed make CAT6 Cable |
| 5 | Supply of UDP Balun (Video + Power) |
| 6 | Supply of UDP Balun (Video + Power + DATA) |
| 7 | Supply of Power Supply Unit 12V, 1 amp |
| 8 | Supply of ISI marked PVC Pipe and electrical accessories and Cable Laying Charges (Per Mtr) |
| 9 | Supply of safety and protection grill make of MS square bars for each camera with lock and key |
| 10 | Accessories and BNC pin, RF pin installation charges |

| S. N O | DESCRIPTION OF ITEM | QTY | UNIT | TOTAL QTY | QUOTED RATE | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | UNIT RATE | TOTAL COST |
| 1. | Supply of reputed Brand, Colour Weather Proof IR(Night Vision) Camera1/3’’ 600 TVL , High Quality 26 pcs LED , IP65 Series IR Range 20M , 3.6mm Lens Metal Housing with bracket | 3 | per location | 600 | 5250.00 | 31,50,000.00 |
| 2 | Supply of reputed Brand, 8 Channel Stand Alone High Technology DVR 8Video and 8Audio Recording and Live Viewing system H.264 real-time Hardware compression, D1, HD1 and CIF recording resolution with 3G option ,Support to real-time remote view with IE (Internet Explorer) and dual streaming network option 8 video and 8 audio 1HDD slot support 2TB HDD video backup Video download Through USB Flash Disk, Support PTZ control via built-in RS-485 port , VGA output with Remote control and Mouse , alarm network option with 1000 GB Hard Disk With CMS Software | 1 | per location | 200 | 11,000.00 | 22,00,000.00 |
| 3 | Supply of reputed make, 21’’ LCD Monitor suitable for working with single phase, nominal 230 V, 50 Hz AC power supply | 1 | per location | 200 | 5,700.00 | 11,40,000.00 |
| 4 | Supply of Reputed make CAT6 Cable | 200 Mtr | per location | 40,000 Mtr | 13.00 | 5,20,000.00 |
| 5 | Supply of UDP Balun (Video +Power) | 4 | per camera | 2400 | 120.00 | 2,88,000.00 |
| 6 | Supply of UDP Balun (Video +Power +DATA) | 4 | per camera | 2400 | 130.00 | 3,12,000.00 |
| 7 | Supply of Power Supply Unit 12 V, 1 amp | 4 | per location | 2400 | 195.00 | 4,68,000.00 |
| 8 | Supply of ISI marked PVC Pipe and electrical accessories and Cable Laying Charges.(Per Mtr) | 200 Mtr | per camera | 120000 Mtr | 18.00 | 21,60,000.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | Supply of safety and protection grill make of MS square bars for each camera with lock and key | 4 | per location | 2400 | 200.00 | 4,80,000.00 |
| 10 | Accessories and BNC pin, RF pin installation charges | 1 | per set | 600 | 35.00 | 21,000.00 |
| | **TOTAL** | | | | | **1,07,39,000.00** |
| **RUPEES ONE CRORE SEVEN LAKHS THIRTY NINE THOUSAND ONLY** | | | | | | |

- மொத்தமாக 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்கள் அதன் சார்புடைய உபகரணங்களையும் மற்றும் பொருத்துதல் ரூ,1,07,39,000/– (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) வரிகள் தனி.
- 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்களை திறந்த ஒப்பங்கள் கோருவதற்க்கும் மற்றும் 15 மண்டலங்களில் உள்ள 200 ‘அம்மா உணவகங்களில்’ உபகரணங்கள் மற்றும் பொருத்துதல் செய்வதற்க்கும்
- 200 இணையதள பிராட் பேண்ட் இணைப்புகளை கொள் முதல் செய்ய முடிவு செய்யப்பட்டு. M/s. ELCOT நிறுவனத்திற்கு ரூ.15,85,905/–(பதினைந்து இலட்சத்து எண்பத்தி ஐயிந்தாயிரத்து தொள்ளாயிரத்து ஐந்து மட்டும்) முன்பணமாக செலுத்தவும்.
- முன் பணமாக வழங்கவும் அந்த தொகையினை சரியான விலை விவரம் M/S ELCOT நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட பின் அவை சரி செய்யவும்.
- இந்த பணி செய்வதற்கான செலவினத்தை சுகாதாரத் துறையில் 2013 – 2014 நிதி ஆண்டின் கீழ் மேற்கொள்ளவும்.
- மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) மூலமாக வரிசை எண் 1 முதல் 3வரை உள்ள பணிகள் செய்ய,

மேற்காணும் செயற்குறிப்புகளுக்கு ஒப்பங்கள் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) & (2) -ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைகுழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 275/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 293/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.பி13/29529/2013**

**ஆணையாளர் (பொ) அவர்களின் 13.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.439/2013 **பொருள் எண்.14**

**அரசாணை அமலாக்கம்**

அரசாணை எண்.189 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 07.06.2013ல் 2013 – 14ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யும் போது தமிழ்நாடு அரசு ஒய்வூதியதாரர்கள் காலமாகும் போது அவர்களுக்கு குடும்ப பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகையான ரூ.35,000/—ல் இருந்து சிறப்பு நிகழ்வாக கருதி ரூ.50,000/— ஆக உயர்த்தி வழங்க அரசு அறிவித்துள்ளது.

எனவே, தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் காலமானால் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு குடும்ப பாதுகாப்பு தொகையை ரூ.35,000/—ல் இருந்து ரூ.50,000/— (ரூபாய். ஐம்பதாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கலாம் என அரசாணையின் பால் ஆணையிட்டுள்ளது. மேலும் இவ்வரசாணை வெளியிட்ட நாள் முதல் (07.06.2013) இவ்வாணை நடைமுறைக்கு வருவதாக ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட மாத சந்தா தொகை ரூ.70/—லிருந்து ரூ.80/—ஆக உயர்த்தி பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதியில் ஏற்கனவே தெரிவித்துள்ள விதிகளில் ஏதும் மாற்றம் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணையின்படி சென்னை மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கும் தமிழ்நாடு குடும்ப பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உயர்த்தப்பட்டுள்ள நிதி உதவி தொகையை 07.06.2013 முதல் (அரசாணை வெளிடப்பட்ட நாள் முதல்) (ரூபாய். ஐம்பதாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கவும், மாத சந்தா தொகை ரூ.70/—லிருந்து ரூ.80/—ஆக உயர்த்தி பிடித்தம் செய்யவும் மேற்படி அரசாணையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 307/2013 நாள் 19.07.2013—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பா.து.ந.க.எண்.பி3/896/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.6.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.440/2013 **பொருள் எண்.15**

**இராயபுரம் இரயில்வே மேம்பாலத்தை உயர்த்தி கட்ட அனுமதி**

தலைமை நிர்வாக அலுவலர்(கட்டுமானம் மற்றும் எம்டிபி) தென்னக இரயில்வே அவர்கள் இராயபுரம் இரயில்வே பணிமனையின் வடிவமைப்பை மாற்றி கட்டும் பணியை மேற்கொள்ளவும் மற்றும் மூன்றாவது/நான்காவது இரயில் பாதை அமைப்பதற்கு ஏதுவாக இராயபுரம் இரயில்வே மேம்பாலம் எண்.4—ஆர், உயர்த்தி கட்டுவதற்கு ஒப்புதல் கோரியுள்ளார். மேலும், அதற்கான வரைபடத்தையும் அளித்துள்ளார்.

இராயபுரம் இரயில்வே மேம்பாலத்தின் தற்போதுள்ள வாகன பாதை 10.85மீ அகலம், நடைபாதை 0.5மீ ஒரு புறமும் மற்றொரு புறம் நடைபதை 1.15மீ அகலமும் உள்ளது. ஆனால், பழைய வண்ணாரப்பேட்டை செல்லும் அணுகு சாலையில் வாகன பாதை 15மீ அகலம் உள்ளது. புதிய மேம்பாலம் அமைக்கும் பொழுது 15மீ அகலம் கொண்ட மேம்பாலத்தை அமைத்தால் வாகன நெரிசல் தவிர்க்கப்படும். எனவே, இரயில்வே துறை புதிய மேம்பாலம் அமைக்கும்போது பாலத்தின் வாகனப்பாதை 15மீ அகலம், நடைபாதை 1.5மீ (இருபுறமும்) மற்றும் விபத்தை தடுக்கும் கைப்பிடி சுவர் அகலம் 0.5மீ இருபுறமும், மற்றும் சாலையின் நடுவே உள்ள தடுப்புச்சுவர் அகலத்தை 1.0மீ மாற்றியமைக்கலாம். ஆக மொத்தம், புதிய மேம்பாலம் 20மீ அகலம் கொண்டதாக அமைக்கலாம்.

மேலும், இப்பணி நடைபெறும் காலத்தில் சென்னை மாநகராட்சி பொறியாளர்களின் மேற்பார்வையில் மேம்பாலத்தின் அணுகுச்சாலை அமைக்க இரயில்வே துறையிடம் நிபந்தனை விதிக்கலாம். மேலும், இப்பணிக்கான விரிவான வரைபடத்தை சென்னை மாநகராட்சி ஒப்புதல் பெற்ற பிறகே இரயில்வே துறை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளலாம்.

எனவே,

1. இராயபுரம் இரயில்வே மேம்பாலம் எண்.4—ஆர், உயர்த்தி கட்டுவதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கவும்,
2. புதிய இரயில்வே மேம்பாலம் 20மீ அகலம் கொண்டதாக இரயில்வே துறை அமைக்க பரிந்துரை செய்யவும்,
3. இரயில்வே துறை இம்மேம்பாலத்தின் அணுகுச்சாலை அமைக்கும்போது சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் மேற்பார்வையில் மேற்கொள்ள நிபந்தனை விதிக்கவும்,
4. இப்பணிக்கான விரிவான வரைபடத்தை சென்னை மாநகராட்சி ஒப்புதல் பெற்ற பிறகே இரயில்வே துறை நடைமுறைப்படுத்த வேண்டும்

எனவும், மேற்கண்ட 1 முதல் 4 வரையுள்ள இனங்களுக்கு இரயில்வே துறைக்கு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ள நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 265/2013 நாள் 18.7.2013—ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 294/2013 நாள் 19.07.2013—ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.8.ந.க.எண்.பி2/4097/24/2013**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 9–7–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.441/2013 **பொருள் எண்.16**

**2013–14 –பணி ஒப்பம் – மண்டலம்–8, பகுதி-22, கோட்டம்-107ல் உள்ள மூன்று தெருக்களில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது-சிப்பம்-6 குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் மார்க் ரோடு கன்ஸ்டரக்ஷன்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடட் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி**

| வ. எண். | மண்டலம் | பணி/ சாலையின் பெயர் | பணியின் விவரம் | சாலைகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 8 | மண்டலம்–8, பகுதி-22,கோட்டம்-107ல் உள்ள மூன்று தெருக்களில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ளுதல். | சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ளுதல் பணிக்கு. | 3 | 1,20,55,000/– |

**02.** மதிப்பீட்டின் எண். குழுவின் /மன்றத்தின் தீர்மான எண். : 8 வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண். பின்னர்பெறப்படும்

**03.** திட்ட குறியீட்டு எண் : பின்னர் பெறப்படும்

**04.** ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : 2013 - 14

அ) பணியின் செலவினம் : ரூ. **1,03,65,346.00**

ஆ) மேற்பார்வை செலவு : ரூ. **10,60,699.55**

இ) சில்லரை மேற்பார்வை செலவு : ரூ. **2,65,174.90**

ஈ) மற்ற எதிர்பாரா செலவு : ரூ. **1,06,069.97**

உ) தரக்கட்டுப்பாடு : ரூ. **2,57,709.53**

மொத்தம் : ரூ. **1,20,55,000.00**

**05.** எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது: சென்னை மாநகராட்சி செய்தி நாள். வெளியீடு நாள். **02.05.2013 03.05.13** நாளிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு மற்றும் நமது எம்ஜிஆர்

**06.** ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள். : 15.05.2013

**07.** ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான : **17.05.2013** கடைசி நாள்.

**08.** ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது **15** நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். :

**09.** எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ? : 1

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன : 1

**11.** ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ) | 2012 – 13 ஆண்டு விலை அலுவலக விலை மற்றும் ஒப்பந்ததாரர் நிர்ணியித்தவிலைக்கு சதவீதம் ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் மார்க் ரோடு கன்ஸ்டரக்ஷன்ஸ் மெட்ராஸ் பிரைவேட் லிமிடட். | 1,03,65,346.00 | ரூ.1,08,23,679.00 | (+) 4.42% |

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை கொடுக்க தேவையா? ஆம் ஏனில் நடத்தப்பட்ட நாள் : இல்லை மேலும் விலைகுறைப்பு 03.06.2013

13. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் :

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள் : தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம்.

15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம். : ---

அ) கேட்பு காசோலை எண். நாள் . வங்கியின் பெயர் : ––

16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா? : ஆம்

அ) வரவு செலவுத் திட்ட தலைப்பு : மண்டலம்–8 ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் 16.08.2013.

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட ஒரு ஒப்பங்களில் திருவாளர்கள் மார்க் ரோடு கன்ஸ்டரக்ஷன்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடட் அவர்கள் (+)4.42% ஒப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் பேச்சுவார்த்தைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அவர் பேச்சுவார்த்தைக்கு உடன்படவில்லை மேலும் இதற்கு மேல் விலைகுறைப்பு செய்ய இயலாது என கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)2.47% குறைவாகவே உள்ளது. மேலும் பணியின் அவசரம் அவசியம் கருதி திருவாளர்கள் மார்க் ரோடு கன்ஸ்டரக்ஷன்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடட் (+)4.42% ஒப்ப சதவீதத்திற்கு அவருக்கு நிர்ணியிக்கப்பட்ட தொகை ரூ.1,08,23,679/– அவர்களுக்கு இத்தொகைக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

மன்றத் தீர்மானத்தின் படி, (தீர்மான எண்.512 / 2007 நாள்.25.09.2007),

1) அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலைப் விவரப்பட்டியல் தயாரிப்பதற்கும், (source-Builders Association of India –South Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2) அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு, ஒப்பங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு (Comparison) செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,
3) மேலும், சந்தை விலைகளில் மாற்றங்கள் நிகழும் பொழுது,அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும்,மன்றம் அனுமதிஅளித்துள்ளது.

பணியின் அலுவலக மதிப்பு : ரூ.1,03,65,346/–

பணியின் சந்தை விலைப்படி மதிப்பு : ரூ. 1,10,972,35.11 (01.06.2013)

ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை : ரூ. 1,08,23,679/–

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் மார்க் ரோடு கன்ஸ்டரக்ஷன்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடட் அவர்களுக்கு (+)4.42% ஒப்ப சதவீதத்திற்கு அவருக்கு நிர்ணியிக்கப்பட்ட தொகை ரூ.1,08,23,679/—மதிப்புள்ள பணிகள் வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டம் 1998 பிரிவு 7 (1) & (2) ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 263/2013 நாள் 18.7.2013—ன் படி இதற்கு வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 297/2013 நாள் 19.07.2013—ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.11.ந.க.எண்.பி1/3260/2013**

**ஆணையர் (பொ) அவர்களின் 15–7–13 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.442/2013 **பொருள் எண்.17**

**சிப்பம் – 1 மண்டலம் XI கோட்டம் 144 மற்றும் 153, பகுதி 32 மற்றும் 34–ல் (39 சாலைகள்) சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணி – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்சன்ஸ் ப்ரைவெட் லிமிடெட் அவர்களுக்கு ரூ.23165113.70க்கு பணியினை வழுங்க அனுமதி**

01.பணியின் பெயர்:

| வ. எண் | வா. எண் | பணி / சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ.) | தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 144 & 153 | சிப்பம் – 1 மண்டலம் XI கோட்டம் 144 மற்றும் 153, பகுதி 32 மற்றும் 34–ல் (39 சாலைகள்) சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணி. | சாலைப் பணி | – | – | ரூ.2,66,67,000/– |
| | | **மொத்தம்** | | | | **ரூ.2,66,67,000/–** |

02. மதிப்பீட்டின் எண். குழுவின் மன்றத்தின் தீர்மான எண். நாள் : வார்டு குழு 11–ன் தீர்மான எண்.375 நாள் 13.05.2013

03. திட்ட குறியீட்டு எண். : பின்னர் பெறப்படும்

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : 2012–13

| | | | |
|---|---|---|---|
| அ) | பணியின் செலவினம் | : | ரூ. 23016746.15 |
| ஆ) | மேற்பார்வை செலவு | : | ரூ. 2301674.63 |
| இ) | சில்லரை மேற்பார்வை செலவு | : | ரூ. 575418.61 |
| ஈ) | மற்ற எதிர்பாரா செலவு | : | ரூ. 773161.26 |
| | **மொத்தம்** | : | **ரூ. 26667000.00** |

05. எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது நாள் : சென்னைமாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் 20 இதழ் 986 நாள். 02.05.2013

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : 15.05.2013

07. ஒப்பந்தப் புள்ளி ஏற்று கொள்வதற்கான கடைசி நாள் : 17.05.2013

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 7 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லையெனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் : ஆம்

09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டது ? : இணையதளம் மூலம் பதிவிறக்கம்

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டது : இரண்டு

11. ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் விவரம் :

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் ( திரு / திருவாளர்கள்) | அலுவலக மதிப்பீட்டு தொகை 2011–12 ஆம் ஆண்டு விலை விவரப்படி | ஒப்ப தொகை ரூ | ஒப்ப சதவீதம் உயர்வு ( அதிகம்/ குறைவு) |
|---|---|---|---|---|
| 1 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்சன்ஸ் ப்ரைவேட் லிமிடெட் | 23005232.40 | 23188302.00 | (+) 0.80% அதிகம் |
| 2 | C.N. அண்ணாதுரை | 23005232.40 | 26840290.64 | (+) 16.67% அதிகம் |

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : ஆம் / 21.05.2013

13. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை ஒப்ப சதவீதம் : ரூ.23165113.70 (+) 0.69%

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள் : பே.சா.து ந.க.எண். பி3/581/2001 நாள். 28.08.01 ன்படி முதல் வகுப்பு

15. கூடுதல் பிணைவைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் : –
அ) கேட்பு காசோலை எண். வங்கியின் பெயர் நாள்

16. பணிக்காக நிதி ஆதாரம் உள்ளதா ? : உள்ளது
அ) வரவு செலவுத் திட்ட தலைப்பு : மூலதன நிதி,

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 16.08.2013.

மேலும் இரண்டு ஒப்பந்ததாரர்களில் திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்சன்ஸ் ப்ரைவேட் லிமிடெட் அவர்கள் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்ப விலைப்புள்ளி தொகை ரூ. 23188302.00 ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம் ஆண்டின் விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகையை விட (+) 0.80 % அதிகமாகும். மேலும் குறைந்த ஒப்பவிலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருடன் 21.05.2013 நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு செய்ய கோரி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்சன்ஸ் ப்ரைவேட் லிமிடெட் அவர்கள் ரூ.23188302/–லிருந்து ரூ.23165113.70 ஆக குறைத்து கடிதம் அளித்துள்ளார். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம் ஆண்டின் விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகைளை விட (+)0.69% அதிகமாகவும். சந்தை விலை ரூ.24882842.40 உடன் ஒப்பிடுகையில் (–) 6.90% விழுக்காடு குறைவாகும்.

எனவே, திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்சன்ஸ் ப்ரைவெட் லிமிடெட் அவர்களுக்கு 2012–2013 ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பிட்டை விட (+) 0.69% அதிகமான ஒப்பத் தொகை ரூ.23165113.70க்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி

‘‘18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 279/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு வாடு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 316/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.12.ந.க.எண்.இ1/1868/2013 (1)**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 03/07/2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.443/2013 **பொருள் எண்.18**

**மண்டலம் 12 – சிப்பம் –1 'சென்னை பெருநகர் வளர்ச்சி இயக்கம்' சென்னை விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு ரூ.8,45,88,783.58 க்கு பணியினை வழங்க அனுமதி**

சென்னை மாநகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ''சென்னை பெருநகர வளர்ச்சி இயக்கம்'' என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை மாநகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட பகுதி மண்டலங்களில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் ஆலந்தூர் மண்டலத்தில், (மண்டலம்–12) 26.78 கி.மீ. நீளமுள்ள 106 சாலைகளில் ரூ.55.31 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரி தீர்வு செய்யப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

இம்முடிவடைந்த / முடியும் தருவாயில் உள்ள பணிகளின் மதிப்பீட்டில் பணி முடிவு தொகைபோக மீதமுள்ள தொகை ரூ.17.50 கோடிக்கு 2013–2014ஆம் நிதியாண்டில் ஒப்பங்கள் கோரி பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதன்படி மண்டலம் 12ல் 131 சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு ரூ.18.22 கோடிக்கு 2012–2013ஆம் ஆண்டின் விலை பட்டியல் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளை இரண்டு சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோரப்பட்டது.

சிப்பம் 1 – 66 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி இயக்க சேமிப்பு தொகை மூலம் மண்டலம் 12ல் உள்ள 66 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.918.69 இலட்சங்கள்

சிப்பம் 2 – 65 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி இயக்க சேமிப்பு தொகை மூலம் மண்டலம் 12ல் உள்ள 65 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.903.70 இலட்சங்கள்

மேற்கண்ட 2 சிப்பங்களுக்கு 10.05.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி பெற தீர்மானிக்கப்பட்டு இதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 25.04.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், நாளிதழ்களிலும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 10.05.2013 அன்று கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இவ்வொப்பந்தபுள்ளியின் தொழில் நுட்ப ஆவணங்கள் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 10.05.2013 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**<u>சிப்பம்–1</u>**

- திருவாளர்கள்.ஆர்.கே.அண்டு சன்ஸ்
- திரு.K.K.ராகவன்
- திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ்

இதனிடையே திருவாளர்கள்.ஆர்.கே.அண்டு சன்ஸ் நிறுவனத்தினர் சென்னை மாநகராட்சி, மண்டலம் 14ல் பங்கேற்ற ஒப்பத்தில் தொழில்நுட்ப ரீதியாக தகுதியின்மை காரணமாக மண்டலம் 14ன் கோப்பு தலைமையிடத்தில் கண்டறியப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மண்டலம் 12ன் கோப்பும் திருப்பி அனுப்பப்பட்டது. அடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.கே.ராகவன், அவர்களின் ஒப்பம் தொழில்நுட்ப ரீதியாக பரிசீலனை செய்யும் நிலையில், திருவாளர்கள்.டி.எம்.ஏ.இன்பிராஸ்டிரக்ஷர் (பி) லிட் அவர்கள் தனது 30.05.2013 நாளிட்ட கடிதத்தின் மூலம் ஒப்பங்களில் திரு.கே.கே.ராகவன் அவர்களுடன் Joint Venture ஐ வாபஸ் பெறுவதாகவும், இதன் மீது பின்னர் எந்த உரிமையும் கோரமாட்டேன் என குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே, திரு.கே.கே.ராகவன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியும் தகுதியின்மை ஆகிறது.

எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் மண்டலம் 12ல் 10.05.2013ல் பெறப்பட்ட சென்னை பெருநகர வளர்ச்சி திட்டப்பணிகளின் சேமிப்புத்தொகையில் வரவேற்கப்பட்ட சிப்பம் 1ன் ஒப்பந்தப்புள்ளியில் அடுத்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்த விலைப்புள்ளி குறைந்த விலைப்புள்ளியாகும். அதன் விவரம் பின்வருமாறு.

**<u>சிப்பம் 1</u>**

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத் தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | 88789541.76 | 88678997.58 | (–) 0.12% |

சிப்பம்–1க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்கள் 12.06.2013 நாளிட்ட கடிதத்தில் மேலும் இரண்டாவது முறையாக விலைகுறைப்பு செய்துள்ளார். இதன்படி திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.8,45,88,783.58ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 4.73% விழுக்காடு குறைவாகும். 18.05.2013 நாளிட்ட சந்தைவிலையின் அடிப்படையில் ஒப்பிடுகையில் (–) 8.79% குறைவாகும்.

கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 12 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.8,45,88,783.58 ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதால் அதற்கான மூலப்பொருள்களான ஜல்லி, தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் விலை ஏற்க பரிந்துரைக்கப்படுகிறது.

3) இவ்வொப்பத்தொகையானது **2012–13**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட **(–) 4.73%** விழுக்காடு குறைவாகும்.

குறைந்த ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்பகுழுமத்தின் உறுப்பினர்களிடம் சுற்று முறையில் அனுப்பப்பட்டு ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகளை மேம்படுத்தப்படவுள்ளதாலும் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலமும் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**8,45,88,783.58** ஆகும். குறைந்த பணிக்காலமான **3** மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதால் அதற்கான மூலப்பொருள்களான ஜல்லி, தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் விலை ஏற்க பரிந்துரைக்கப்படுகிறது.

3) அதன்படி இவ்வொப்பத்தொகையானது **2012–13**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட **(–) 4.73%** விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.**8,45,88,783.58** ஆனது **2012–13**ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட **(–) 4.73%** குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்.**1**க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.**8,45,88,783.58**க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு **2012–13**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட **(–)4.73%** குறைவாக ஒப்பத்தொகை ரூ.**8,45,88,783.58**க்கு பணியை வழங்க நிலைக்குழு (பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**18.7.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **267/2013** நாள் **18.7.2013**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**19.07.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். **298/2013** நாள் **19.07.2013**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.12.ந.க.எண்.இ1/1868/2013 (2)</u>**

**<u>முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.444/2013 **பொருள் எண்.19**

**<u>மண்டலம் 12 – சிப்பம் –2 'சென்னை பெருநகர் வளர்ச்சி இயக்கம்' சென்னை விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., அவர்களுக்கு ரூ.8,45,80,148.83க்கு பணியினை வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ''சென்னை பெருநகர வளர்ச்சி இயக்கம்'' என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை மாநகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட பகுதி மண்டலங்களில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் ஆலந்தூர் மண்டலத்தில், (மண்டலம்–12) 26.78 கி.மீ. நீளமுள்ள 106 சாலைகளில் ரூ.55.31 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரி தீர்வு செய்யப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

இம்முடிவடைந்த / முடியும் தருவாயில் உள்ள பணிகளின் மதிப்பீட்டில் பணி முடிவு தொகைபோக மீதமுள்ள தொகை ரூ.17.50 கோடிக்கு 2013–2014ஆம் நிதியாண்டில் ஒப்பங்கள் கோரி பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதன்படி மண்டலம் 12ல் 131 சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு ரூ.18.22 கோடிக்கு 2012–2013ஆம் ஆண்டின் விலை பட்டியல் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளை இரண்டு சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோரப்பட்டது.

<u>சிப்பம் 1 – 66 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி இயக்க சேமிப்பு தொகை மூலம் மண்டலம் 12ல் உள்ள 66 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.918.69 இலட்சங்கள்

<u>சிப்பம் 2 – 65 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி இயக்க சேமிப்பு தொகை மூலம் மண்டலம் 12ல் உள்ள 65 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.903.70 இலட்சங்கள்

இதில் 2 வது சிப்பத்திற்கு 10.05.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி பெற தீர்மானிக்கப்பட்டு இதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 25.04.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், நாளிதழ்களிலும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 10.05.2013 அன்று கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இவ்வொப்பந்தபுள்ளியின் தொழில் நுட்ப ஆவணங்கள் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 10.05.2013 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**<u>சிப்பம்–2</u>**

- திருவாளர்கள்.எஸ்.பி.எல். இன்ப்ராடிரக்சர் பிரைவேட் லிமிடெட்
- திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்.,
- திருவாளர்கள்.ஆர்.கே. அண்டு சன்ஸ்
- திருவாளர்கள். டி.எம். சுப்பிரமணியம் அண்டு கோ
- திருவாளர்கள்.குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் 2ல் கலந்து கொண்ட திருவாளர்கள்.எஸ்.பி.எல். இன்ப்ராடிரக்சர் பிரைவேட் லிமிடெட், திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., திருவாளர்கள்.ஆர்.கே. அண்டு சன்ஸ், திருவாளர்கள்.டி.எம். சுப்பிரமணியம் அண்டு கோ மற்றும் திருவாளர்கள்.குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் ஆகியோர் சமர்ப்பித்துள்ளனர். மேலும், மண்டலம் 4ன் சுற்றறிக்கை ம.அ.4/ந.க.எண்.பி2/7022/சிப்பம் 2/2012 நாள்.03.05.2013ன்படி திருவாளர்கள்.ஜெ.ஆர்.ஆர். அண்டு கே.சி.பி.ஜெ.வி.கம்பெனியை சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இவ்வொப்பத்தில் பங்குபெற்ற திருவாளர்கள்.கே.சி.பி.இன்ஜினியரிங் பிரைவேட் லிட் அவர்களின் ஒப்பம் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதனிடையே திருவாளர்கள்.கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட் அவர்கள் தங்கள் மீது எவ்வித குறைபாடும் இல்லை என நீதிமன்றத்தினை அணுகி தங்களுக்கு பணியினை வழங்க கோரினர். அதற்கு ஏதுவாக தாங்கள் திருவாளர்கள்.ஜெ.ஆர்.ஆர். அண்டு கே.சி.பி.ஜெ.வி.கம்பெனியுடன் சேர்ந்து பணி மேற்கொள்ள போடப்பட்ட இணை ஒப்பந்தத்தினை(ஜே.வி) 26.12.2012 அன்றைய தேதியில் ரத்து செய்ததற்கான ஆதாரத்தினையும் அளித்து நீதிமன்றத்தில் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேலும் சென்னை மாநகராட்சி, மண்டலம் 4ல் தங்களை கருப்பு பட்டியலில் சேர்த்தமைக்காக நீதிமன்றத்தில் தடையாணையும் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் சட்ட அலுவலர் அவர்களின் 10.06.2013 நாளிட்ட கருத்துருவில் திருவாளர்கள்.ஜெ.ஆர்.ஆர். அண்டு கே.சி.பி.ஜெ.வி.கம்பெனி என்பது வேறு என்பதால் Legal Entity அடிப்படையில் திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., அவர்களின் ஒப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்கலாம் அறிவுறுத்தப்பட்டது. மேலும் மேற்கண்ட ஒப்பந்ததாரர் மண்டலம் 11ல் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரராக கருதப்பட்டுள்ளது.
இதன் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விவரம் பின்வருமாறு.

**<u>சிப்பம் 2</u>**

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள்.எஸ்.பி.எல். இன்ப்ராடிரக்சர் பிரைவேட் லிமிடெட் | 89029862.70 | 94068120.00 | (+) 5.66% |
| 2 | திருவாளர்கள்.டி.எம். சுப்பிரமணியம் அண்டு கோ | 89029862.70 | 84580148.83 | (–) 4.99% |
| 3 | திருவாளர்கள்.ஆர்.கே. அண்டு சன்ஸ் | 89029862.70 | 84652910.00 | (–) 4.92% |
| 4 | திருவாளர்கள்.குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | 89029862.70 | 84385901.00 | (–) 5.22% |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., | 89029862.70 | 8,38,76,003.00 | (–) 5.79% |

மேற்குறிப்பிட்ட நான்கு ஒப்பந்ததாரர்களில் திருவாளர்கள். திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., ரூ.8,38,76,003/– 2012–2013ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட (–) 5.79% குறைவாக உள்ளது. மேலும் 18.05.2013 நாளிட்ட சந்தை விலையின் அடிப்படையில் (–) 9.95% குறைவாக உள்ளது. ஒப்பந்ததாரரிடம் 14.05.2013 நாளிட்ட கடிதம் மூலம் மேலும் விலை குறைப்பு செய்ய கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 14.06.2013 நாளிட்ட கடிதம் மூலம் ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிலையில் மேலும் விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 12 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., அவர்களின் ஒப்பத்தொகை ரூ.83876003 ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதால் அதற்கான மூலப்பொருள்களான ஜல்லி, தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் விலை ஏற்க பரிந்துரைக்கப்படுகிறது.

3) இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 5.79% விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்பகுழுமம் சுற்று முறையில் /2013 பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகளை மேம்படுத்தப்படவுள்ளதாலும் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலமும் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., அவர்களின் ஒப்பத்தொகை ரூ.8,38,76,003ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதால் அதற்கான மூலப்பொருள்களான ஜல்லி, தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் விலை ஏற்க பரிந்துரைக்கப்படுகிறது.

3) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 5.79% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.8,38,76,003 என்பது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (–) 5.79% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்.2க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர்கள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்., அவர்கள் அளித்துள்ள ஒப்பத் தொகையான ரூ.8,38,76,003க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 268/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 299/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.12 /ந.க.எண்.இ1/1723–13/2013</u>**
**<u>முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.445/2013 **பொருள் எண்.20**

**<u>மண்டலம் 12 – சிப்பம் –10 'மூலதனப் பணிகள் – சிமெண்ட கான்கிரிட் சாலை பணிகள் – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான திரு. ஆர்.சுபாஷ் அவர்களுக்கு ரூ.12953073.00 க்கு பணியினை வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–12ல் உள்ள கோட்டம்–167 உள்ள 6 உட்புறச் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு மொத்தம் ரூ.151.35 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தனித்தனியாக சாலைவாரியாக தயாரிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெறப்பட்டது. மேற்கண்ட 6 சாலைப்பணிக்கான ஒப்பம் (சிப்பம்–10) வரவேற்கப்பட்டு சென்னை மாநகராட்சி செய்தி மலர் மற்றும் தமிழ் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்டது. ஒப்பம் பெறும் நாளான 17.05.2013 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கீழ்கண்ட ஒரே ஒரு ஒப்பந்ததாரரிடம் இருந்து ஒப்பம் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டு பெறப்பட்டது. விவரம் வருமாறு,

<u>சிப்பம்–10</u>

திரு.ஆர்.சுபாஷ்,

இவர் சமர்ப்பித்த தொழில் நுட்ப ஆவணத்தினை பரிசீலனை செய்ததில் ஒப்பந்தத்தில் பங்கேற்ற மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரரின் தொழில் நுட்ப ஆவணம் தகுதி பெற்றமையால் இவரது ஒப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனவே 07.06.2013 அன்று நிதி ஆவணம் திறக்கப்பட்டது.

<u>சிப்பம்–10 (நிதி ஆவணம்) விலைப்புள்ளி விவரம் வருமாறு.</u>

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ம் ஆண்டு விலை விவரப்படி | ஒப்பத் தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சுபாஷ் | 13026974.00 | 12953073 | (–) 0.57% |

சிப்பம்–10க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுபாஷ் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பத் தொகை ரூ.12953073/– ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013ம் ஆண்டின் விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகையை விட (–) 0.57% குறைவு ஆகும்.

குறைந்த ஒப்பவிலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடத்தி விலை குறைப்பு கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்ததாரரான திரு.ஆர்.சுபாஷ் அவர்களின் பேச்சுவார்த்தைக்குப்பின் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.

திரு.ஆர்.சுபாஷ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.12953073.00 ஆனது 2012–2013ம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (–) 0.57% குறைவாகவும் மேலும் சந்தை விலையை விட (–)1.71% விழுக்காடு குறைவாக உள்ளதால் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் உள்ளது.

மேலும், இப்பணிக்கு ஏற்கனவே இரண்டு முறை ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்பத்தில் எவரும் பங்கு பெறாத நிலையில், தற்போது மூன்றாவது முறையாக ஒப்பங்கள் கோரப்பட்டது. ஒப்ப நாளன்று ஒற்றை ஒப்பம் பெறப்பட்டது. இவ்வொப்பம் இப்பணிக்கான அலுவலக விலையினைவிட (–)0.57% குறைவாக உள்ள நிலையில் இவ்வொப்பத்தினை திரு.ஆர்.சுபாஷ் அவர்களுக்கு அளிக்க 11.06.2013 ஒப்பக்ககுழுமத்தினால் பரிந்துரைக்கப்பட்டது

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு.ஆர்.சுபாஷ் அவர்களுக்கு 2012–2013ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–)0.57% குறைவான ஒப்பத்தொகை ரூ.1,29,53,073.00க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 269/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 302/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.12 /ந.க.எண்.இ1/1723–1/2013**
**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.446/2013 **பொருள் எண். 21**

**மண்டலம் 12 – சிப்பம் –1 'மூலதனப் பணிகள் – தார்சாலை பணிகள் – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான திரு. என்.வி.பாபு அவர்களுக்கு ரூ.20303172.00 பணியினை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–12ல் உள்ள கோட்டம்–156 உள்ள 19 உட்புறச் சாலைகளை பலப்படுத்தி தார்சாலை அமைக்க மொத்தம் ரூ.238.95 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தனித்தனியாக சாலைவாரியாக தயாரிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெறப்பட்டது. மேற்கண்ட 19 சாலைப்பணிக்கான ஒப்பம் (சிப்பம்–1) வரவேற்கப்பட்டு சென்னை மாநகராட்சி செய்தி மலர் மற்றும் தமிழ் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்டது. ஒப்பம் பெறும் நாளான 17.05.2013 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கீழ்கண்ட மூன்று ஒப்பந்ததாரர்களின் ஒப்பம் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டு பெறப்பட்டது. விவரம் வருமாறு,

சிப்பம்–1
1.திரு.எஸ்.எம்.எண்டர்பிரைசஸ்
2.திரு.என்.வி.பாபு
3.திருவாளர்கள் வெற்றிவேல் கன்ஸ்டிரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட்

இவர்கள் சமர்ப்பித்த தொழில் நுட்ப ஆவணங்களை பரிசீலனை செய்ததில் ஒப்பந்தத்தில் பங்கேற்ற மேற்குறிப்பிட்ட மூன்று ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்றமையால் இவர்களது ஒப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனவே 21.05.2013 அன்று திறக்கப்பட்ட நிதி ஆவண ஒப்பத்தில் மேற்கண்ட 3 ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர்.

**சிப்பம்–1 (நிதி ஆவணம்) விலைப்புள்ளி விவரம் வருமாறு.**

| ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ம் ஆண்டு விலை விவரப்படி | ஒப்பத் தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|
| திரு.எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் | 23893321.00 | 20541887.00 | (–) 14.03% |
| திரு.என்.வி.பாபு | 23893321.00 | 20303172.00 | (–) 15.03% |
| திருவாளர்கள் வெற்றிவேல் கன்ஸ்டிரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 23893321.00 | 22698832.68 | (–) 5.00% |

இந்த மூன்று ஒப்பந்ததாரர்களில் திரு.என்.வி.பாபு அவர்கள் குறிப்பிட்ட விலைப்புள்ளி விலை குறைந்த விலைப்புள்ளியாகும்.

சிப்பம்–1க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு.என்.வி.பாபு அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பத் தொகை ரூ.20303172.00 ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013ம் ஆண்டின் விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகையை விட (–) 15.03% குறைவு ஆகும்.

குறைந்த ஒப்பவிலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடத்தி விலை குறைப்பு கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்ததாரரான திரு.என்.வி.பாபு அவர்களின் பேச்சுவார்த்தைக்குப்பின் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.

திரு.என்.வி.பாபு அவர்களின் ஒப்பத்தொகை ரூ.20303172.00 ஆனது 2012–2013ம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (–) 15.03% குறைவாகவும் மேலும் சந்தை விலையை விட (–)18.30% விழுக்காடு குறைவாக உள்ளதால் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் உள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு.என்.வி.பாபு அவர்களுக்கு 2012–2013ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–)15.03% குறைவான ஒப்பத்தொகை ரூ.20303172.00க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 272/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 300/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.12 /ந.க.எண்.இ1/1723–2/2013**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.447/2013 **பொருள் எண்.22**

**மண்டலம் 12 – சிப்பம் –2 'மூலதனப் பணிகள் – தார்சாலை பணிகள் – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான திரு. என்.வி.பாபு அவர்களுக்கு ரூ.17786982/– க்கு பணியினை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–12ல் உள்ள கோட்டம்–156 உள்ள 16 உட்புறச் சாலைகளை பலப்படுத்தி தார்சாலை அமைக்க மொத்தம் ரூ.209.10 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தனித்தனியாக சாலைவாரியாக தயாரிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெறப்பட்டது. மேற்கண்ட 16 சாலைப்பணிக்கான ஒப்பம் (சிப்பம்–2) வரவேற்கப்பட்டு சென்னை மாநகராட்சி செய்தி மலர் மற்றும் தமிழ் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்டது. ஒப்பம் பெறும் நாளான 17.05.2013 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கீழ்கண்ட நான்கு ஒப்பந்ததாரர்களின் ஒப்பம் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டு பெறப்பட்டது. விவரம் வருமாறு,

சிப்பம்–2

1.திரு.எஸ்.எம்.எண்டர்பிரைசஸ்
2.திரு.என்.வி.பாபு
3.திருவாளர்கள் வெற்றிவேல் கன்ஸ்டிரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
4.திருவாளர்கள். ஜெனிபா கன்ஸ்ட்டிரக்ஷன்ஸ்

இவர்கள் சமர்ப்பித்த தொழில் நுட்ப ஆவணங்களை பரிசீலனை செய்ததில் ஒப்பந்தத்தில் பங்கேற்ற மேற்குறிப்பிட்ட நான்கு ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்றமையால் இவர்களது ஒப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனவே 21.05.2013 அன்று திறக்கப்பட்ட நிதி ஆவண ஒப்பத்தில் மேற்கண்ட 4 ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர்.

சிப்பம்–2 (நிதி ஆவணம்) விலைப்புள்ளி விவரம் வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ம் ஆண்டு விலை விவரப்படி | ஒப்பத் தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் | 20910318.50 | 17977512.00 | (–) 14.03% |
| 2 | திரு.என்.வி.பாபு | 20910318.50 | 17786982.00 | (–) 14.94% |
| 3 | திருவாளர்கள் வெற்றிவேல் கன்ஸ்டிரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 20910318.50 | 19864961.84 | (–) 5.00% |
| 4 | திருவாளர்கள். ஜெனிபா கன்ஸ்ட்டிரக்ஷன்ஸ் | 20910318.50 | 18975860.00 | (–) 9.25% |

இந்த நான்கு ஒப்பந்ததார்களில் திரு.என்.வி.பாபு அவர்கள் குறிப்பிட்ட விலைப்புள்ளி விலை குறைந்த விலைப்புள்ளியாகும்.

சிப்பம்–2க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு.என்.வி.பாபு அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பத் தொகை ரூ.17786982.00 ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013ம் ஆண்டின் விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகையை விட (–) 14.94% குறைவு ஆகும். குறைந்த ஒப்பவிலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடத்தி விலை குறைப்பு கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்ததாரரான திரு.என்.வி.பாபு அவர்களின் பேச்சுவார்த்தைக்குப்பின் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.

திரு.என்.வி.பாபு அவர்களின் ஒப்பத்தொகை ரூ.17786982.00 ஆனது 2012–2013ம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (–)14.94% குறைவாகவும் மேலும் சந்தை விலையை விட (–)18.22% விழுக்காடு குறைவாக உள்ளதால் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் உள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு.என்.வி.பாபு அவர்களுக்கு **2012–2013**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட **(–)14.94%** குறைவான ஒப்பத்தொகை ரூ.**17786982.00**க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**18.7.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **270/2013** நாள் **18.7.2013**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''**19.07.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். **301/2013** நாள் **19.07.2013**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>இ.பொ.து.பொ.தொ.ந.க.எண்.தொ5/448/12</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.448/2013 பொருள் எண். 23

**<u>பொதுத் தொழிற்சாலை – பயனற்ற 133 மெட்ரிக் டன் மரக்கழிவுகள், 25 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்கள் – விற்பனை செய்ய ஒப்ப ஏலம் கோரப்பட்டது — ஏலத்தில் கோரப்பட்ட விலைக்கு தீர்வு செய்ய அனுமதி</u>**

பொது தொழிற்சாலையில் தேங்கியிருந்த 75 மெட்ரிக் டன் மரக்கழிவுகளை ஒப்ப-ஏல முறையில் விற்பனை செய்வதற்கு ஆணையரின் ஆணை பெறப்பட்டு, 15,12,2011 மற்றும் 16.12.11 அன்று ஒப்ப – ஏல நாள் குறிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த ஒப்ப-ஏலத்தில் ஏலதாரர்கள் பங்கு பெறாததால், இந்த ஒப்ப ஏலம் ரத்து செய்யப்பட்டு, மறு ஒப்ப ஏலம் 03.04.2012 மற்றும் 04.04.2012 அன்று நடத்தப்பட்டது. இந்த ஒப்ப ஏலத்திலும் ஏலதாரர்கள் யாரும் பங்கு பெறவில்லை. இதன் பிறகு, மாநகராட்சியின் பல துறைகளிலிருந்துமிருந்து பெறப்பட்ட மரக்கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் காலி ஆயில் பேரல்கள் அனைத்தும் ஒரே தொகுப்பாகி ஒப்ப ஏல முறையில் விற்பனை செய்வதற்கு ஆணையரின் ஆணை பெறப்பட்டது. இதற்கு மதிப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்ய தொழில் நுட்பக் குழு அமைத்து மதிப்பீடு செய்யப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

1) மொத்தமுள்ள 133 டன் மரக்கழிவுக்கு அதன் தன்மையை பொறுத்து மூன்று வகையாக பிரித்து செய்த மதிப்பீட்டுத் தொகை } ரூ. 4,57,500/-
தொகுப்பு 1 - 75x3.5 = 2,62,500
தொகுப்பு 2 - 8x2.5 = 20,000
தொகுப்பு 3 - 50x3.5 = 1,75,000
-------------
4.47.500
---------------

2) 25 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் தொட்டி கழிவுக்கு நிர்ணயித்த மதிப்பீட்டுத் தொகை = ரூ. 5,25,000/-

3) 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்களுக்கு நிர்ணயிதத மதிப்பீட்டுத் தொகை = ரூ.1,00,000/-

மேற்கூறிய மூன்று வகையான உபயோகமற்ற பொருள்களை ஒரே தொகுப்பாக இணைத்து ஒப்ப – ஏல முறையில் உள்ளது உள்ளபடி என்ற நிலையில் விற்பனை செய்வதற்கு ஆணை பெறப்பட்டு, மொத்தமாக நிர்ணயித்த மதிப்பீட்டு தொகையின் விவரம் கீழ்வருமாறு.

133 மெட்ரிக் டன் எடை அளவுள்ள மரக்கழிவுகள் 25மெட்ரிக் டன் அளைவுள்ள பிளாஸ்டிக் தொட்டி கழிவுகள் மற்றும் 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்கள் } ரூ. 10,82,500/-

இந்த மதிப்பீட்டுத் தொகையானது வரிகள் அனைத்தும் உட்பட்டதாகும். ஒப்ப-ஏல முறையில் அதிக பட்ச தொகை கோரி பொருட்கள் எடுத்துச் செல்பவர் அந்த நாளில் அமலில் உள்ள வரிகளை ஏலத்தில் கோரியுள்ள தொகையுடன் தனியே செலுத்திட வேண்டும். ஆதலால், மேற்கூறிய கழிவுகளுக்கு நிர்ணயித்த மதிப்பீட்டுத் தொகையில் வரிகள் இல்லாமல் கணக்கீடு செய்த மொத்த தொகை (10,82,500 – 64,590(5%விற்பனை வரி + 1% வருமான வரி) ரூபாய். 10,17,550/-

அதன்படி தொழில்நுட்பக்குழு ஆய்வு செய்து மதிப்பீடு செய்த மேற் கூறப்பட்டுள்ள உபயோகமற்ற கழிவுகளை உள்ளது உள்ளபடி ஒப்ப – ஏலம் கோரி விற்பனை தீர்வு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 26.11.2012 அன்று ஒப்பப்படிவம் பெறவும், 28.11.2012 அன்று ஒப்ப படிவம் சமர்ப்பிக்கவும், 29.11.2012 அன்று ஏலம் நடத்தவும் சென்னை மாநகராட்சி செய்தி மலரிலும் மற்றும், தினசரி தமிழ் நாளிதழ் (நமது எம்.ஜி.ஆர் மற்றும் தினமணி நாளிதழில்) 8.11.2012 அன்று விளம்பரப்படுத்தப்பட்டது. அதன்படி 28.11.2012 அன்று சுதந்திர பொன்விழா கட்டிடத்தில் காலை 11.00 மணிக்கு ஏலம் நடத்தப்பட்டது. இதில் 15 ஏலதாரர்கள் பங்கு கொண்டார்கள். இந்த ஏலத்தில் திருவாளர் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்டஸ் அவர்கள் 133 மெட்ரிக் டன் மரக்கழிவுகள், 25 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்கள் அதிக பட்ச

தொகையாக ரூ.9,43,000/— கோரியுள்ளார். மேலும் அதே நாளில் ஏலம் முடிந்தவுடன் ஒப்பந்தப்படிவம் பெறப்படும் ஒப்பந்த பெட்டியை திறந்து பார்த்ததில் எந்த ஒப்பந்ததாரர்களும் பங்கு பெறவில்லை இந்த ஏலத்தில் திருவாளர் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்டஸ் அவர்கள் கோரியுள்ள அதிகபட்ச தொகையான ரூ.9,43,000/— மதிப்பாய்வு குழு நிர்ணயித்த தொகை காட்டிலும்...குறைவானதாக இருக்கின்றது. இந்த நிலையில் ஏற்கனவே இரண்டு முறை (15&16.12.2011 மற்றும் 03&04.04.2012) ஒப்ப ஏலத்தில் ஏலதாரர்கள் பங்கு பெறாததாலும், மரக்கழிவுகள் ஒன்றரை வருடத்திற்கு மேலாக மழையிலும், வெயிலிலும் உள்ளதாலும், அதிகமாக அரிக்கப்பட்டு சேதமடையும் நிலை உள்ளதாலும் மாநகராட்சியில் உள்ள பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்படும் மரக்கழிவுகள் பொது தொழிற்சாலையில் வந்த வண்ணம் உள்ள நிலையில் உள்ளதாலும் இவ்விடத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருப்பதாலும் மின்சார கசிவினால் தீ விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாலும், பழைய மரக்கழிவுகள் மேலும் அரிக்கப்பட்டு தற்போது விலையை விட குறைய வாய்ப்பு உள்ளபடியாலும் இதனை தற்போது உள்ளது உள்ளபடி அதிக விலை கேட்ட ஏலதாரருக்கு விற்பனை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது. தற்பொழுது அளிக்கப்பட்ட விலையை விட குறைவான விலை பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு திருவாளர் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்ஸ் அவர்கள் பயனற்ற 133 மெட்ரிக் டன் மரக்கழிவுகள், 25 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்களுக்கு கோரியுள்ள அதிகபட்ச தொகையான ரூ. 9,43,000/- (விற்பனை வரி மற்றும் வருமான வரி இல்லாமல்) ஏற்புடையதாக கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1) பொது தொழிற்சாலையில் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் பெறப்பட்ட 1 வருடங்களுக்கு மேலான பயனற்ற 133 மெட்ரிக் டன் மரக்கழிவுகள், 25 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்கள் என கழிவு செய்யவும்.
2) மேற்கண்ட பயனற்ற 133 மெட்ரிக் டன் மரக்கழிவுகள், 25 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்களை வாங்குவதற்கு ஏலத்தில் மெஸர்ஸ் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்ஸ் அவர்கள் கோரிய மொத்த விலையான ரூ.9,43,000/— (விற்பனை வரி 5% மற்றும் வருமான வரி 1% இல்லாமல்) உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்,
3) மேற்கண்ட பயனற்ற 133 மெட்ரிக் டன் மரக்கழிவுகள், 25 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்கள் விற்பனை செய்யும் பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்பவைப்புத் தொகை (20%) ரூ.1,88,600—ஐ சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகை மற்றும் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள விற்பனை வரியையும் (மொத்த விலைக்கு), வருமான வரியையும் தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்று கொண்டு உள்ளது உள்ளபடி பயனற்ற 133 மெட்ரிக் டன் மரக்கழிவுகள், 25 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் 400 எண்ணிக்கையிலான காலி ஆயில் பேரல்கள் கழிவுகளை மட்டும் எடுத்து செல்லவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 278/2013 நாள் 18.7.2013—ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 313/2013 நாள் 19.07.2013—ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

பொதுத் தொழிற்சாலையில் ஏல விற்பனை மூலம் ஏலத்தில் தீர்வு செய்யப்பட்ட பயனற்ற கழிவு பொருட்கள் அனைத்தையும் ஒரு செயற் பொறியாளர் முன்னிலையில் மாநகராட்சி எடை மேடையில் எடை போட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என்றும், இப்பொருளை எடுக்கும் ஏலதாரர் இரண்டே நாட்களில் அனைத்து பொருட்களையும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.

*****

**<u>இ. பொ.து.பொ.தொ.ந.க.எண்.தொ5/447/12</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.449/2013 பொருள் எண்.24

**<u>பொதுத் தொழிற்சாலை – பயனற்ற இரும்புகள் 97 மெட்ரிக் டன் எடை – விற்பனை செய்ய ஒப்ப ஏலம் கோரப்பட்டது – ஒப்ப ஏலத்தில் கோரப்பட்ட விலை தொழிற் நுட்பக்குழு விலைக்கும், சந்தை விலைக்கும் ஒப்பிடும் பொழுது அதிகமாக உள்ளதால் – ஏலத்தில் கோரப்பட்ட விலைக்கு தீர்வு செய்ய அனுமதி</u>**

படிக்கப்பட்ட தீர்மானத்தின் படி பொதுத் தொழிற்சாலையில் தேங்கியிருந்த இரும்பு கழிவுகள் 75 மெட்ரிக் டன் ரூ.10,68,750/–க்கு (1 கிலோ : ரூ.14.25) தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 20.04.2011 முதல் 30.05.2011 வரையிலலன காலக்கட்டத்தில் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டது. இது போக மீதமுள்ள தேங்கியிருந்த இரும்பு கழிவுகளுடன் பல்வேறு நிர்வாகப் பிரிவிலிருந்து பெறப்பட்ட இரும்பு கழிவுகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இதனை விற்பனை செய்யும் பொருட்டு பொது தொழிற்சாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள முறையே 25 மெட்ரிக் டன் மற்றும் 82 மெட்ரிக் டன் எடை அளவுள்ள இரும்புக் கழிவுகளை உள்ளது உள்ளபடி என்ற நிலையில் ஒப்ப - ஏலம் முறையில் விற்பனை செய்வதற்கு ஆணையரின் ஆணை பெறப்பட்டு, இதன்படி தொழில்நுட்பக்குழு அமைக்கப்பட்டு கழிவு செய்யப்பட்ட இரும்பு வகைகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1) | 25 மெட்ரிக் டண் எடை கொண்ட பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட நாற்காலி மற்றும் மேசை ; மருத்துவ பிரிவிலிருந்து பெறப்பட்ட இரும்பிலான தளவாடங்கள், கட்டில் ஒரு கிலோ ரூ.15 வீதம் | –ரூ.3,75,000/– |
| 2) | 49 மெட்ரிக் டன் எடை கொண்ட பழைய சீட்டுகள், ஏங்கிங்கள் மற்றும் 33 மெட்ரிக் டன் எடை கொண்ட பழுது பார்க்க இயலாத பளுதூக்கி வாகனங்களின் உதிரி பாகங்கள்,<br><br>20 வருடத்திற்க்கு மேலாக உபயோக மற்ற நிலையில் துருபிடித்திருந்த 12 வாகனங்களின் அடிதளங்கள் ஆக மொத்தம் 85 மெட்ரிக் டன் ரூ.24 ஒரு கிலோ வீதம் (24 x 82,000) | –ரூ.19,68,000/– |
| | மொத்தம் 107 டன் இரும்பு கழிவுக்கு | –ரூ.23,43,000/– |

மேற்கூறப்பட்டுள்ள இரண்டு தொகுப்புகளையும் ஒன்றிணைத்து மொத்த எடையான 107 மெட்ரின் டன்னில், இயற்கை சீதோஷணத்தால் இரும்பு கழிவுகள் அரிக்கப்பட்டு துகள்களாக உதிர்ந்திருக்கும் 10 டன் எடை குறைவு செய்து மீதமுள்ள 97 மெட்ரிக் டன் விலை நிர்ணயம் செய்யும் பொருட்டு தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பீட்டின்படி அதாவது 107 மெட்ரிக் டன்னுக்கான விலையில் 10 % குறைக்கப்பட்டு (23,43,000 – 2,34,300) ரூபாய் 21,08,700/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் விற்பனை வரி 5 % மற்றும் வருமான வரி 1 % போக மீதமுள்ள தொகை (21,08,700 – 1,26,522) ரூபாய் 19,82,178/– ஆகும். மொத்தம் 97 மெட்ரிக் டன் இரும்பு கழிவிற்கு விற்பனை வரி மற்றும் வருமான வரி இல்லாமல் நிர்ணயித்த மதிப்பாய்வு தொகை ரூ. 19,82,178/– ஆகும்.

அதன்படி தொழில்நுட்பக்குழு ஆய்வு செய்து மதிப்பீடு செய்த மேற் கூறப்பட்டுள்ள இரும்பு கழிவுகளை உள்ளது உள்ளபடி ஒப்ப – ஏலம் கோரி விற்பனை தீர்வு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 26.11.2012 அன்று ஒப்பப்படிவம் பெறவும், 28.11.2012 அன்று ஒப்ப படிவம் சமர்ப்பிக்கவும், 29.11.2012 அன்று ஏலம் நடத்தவும் சென்னை மாநகராட்சி செய்தி மலரிலும் மற்றும், தினசரி தமிழ் நாளிதழ் (நமது எம்.ஜி.ஆர் மற்றும் தினமணி நாளிதழில் ) 8.11.2012 அன்று விளம்பரப்படுத்தப்பட்டது. அதன்படி 28.11.2012 அன்று சுதந்திர பொன்விழா கட்டிடத்தில் காலை 11.00 மணிக்கு ஏலம் நடத்தப்பட்டது. இதில் 30 ஏலதாரர்கள் பங்கு கொண்டார்கள். இந்த ஏலத்தில் திருவாளர் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்டஸ் அவர்கள் 97 மெட்ரிக் டன் இரும்பு கழிவிற்கு அதிக பட்ச தொகையாக ரூ.20,02,000/– கோரியுள்ளார். மேலும் அதே நாளில் ஏலம் முடிந்தவுடன் ஒப்பந்தப்படிவம் பெறப்படும் ஒப்பந்த பெட்டியை திறந்து பார்த்ததில் எந்த ஒப்பந்ததாரர்களும் பங்கு பெறவில்லை இந்த ஏலத்தில் திருவாளர் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்டஸ் அவர்கள் கோரியுள்ள அதிகபட்ச தொகையான ரூ.20,02,000/– மதிப்பாய்வு குழு நிர்ணயித்த தொகை காட்டிலும் (ரூ.19,82,178/–) ரூ.19,822/– அதிகமாகும். மேலும் கடந்த டிசம்பர் 2010ல் இதே வகையான இரும்பு கழிவுகளை ஏலம் விடப்பட்டதில் விலைப்போன தொகை ஒரு கிலோவிற்கு ரூ.14.25 மட்டுமே மேலும் இரும்பு கழிவுகள் ஒன்றரை வருடத்திற்கு மேலாக மழையிலும், வெயிலிலும் உள்ளதாலும், அதிகமாக துருபிடித்து சேதமடையும் நிலை உள்ளதாலும் மாநகராட்சியில் உள்ள பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்படும் இரும்பு கழிவுகள் பொது தொழிற்சாலையில் வந்த வண்ணம் உள்ள நிலையில் உள்ளதாலும் இவ்விடத்தில்

வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருப்பதாலும் மின்சார கசிவினால் தீ விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாலும், பழைய இரும்பு கழிவுகள் மேலும் துருப்பிடித்து தற்போது விலையை விட குறைய வாய்ப்பு உள்ளபடியாலும் இதனை தற்போது உள்ளது உள்ளபடி அதிக விலை கேட்ட ஏலதாரருக்கு விற்பனை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது. தற்பொழுது அளிக்கப்பட்ட விலையை விட குறைவான விலை பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

மேலும் கடந்த 2010 டிசம்பர் மாதத்தில் இரும்பு கழிவுகளை ஒப்ப - ஏல முறையில் விற்பனை செய்யப்பட்ட தொகையான ஒரு கிலோவிற்கு ரூ. 14.25 விட, தற்போது ஒரு கிலோ ரூ.6.40க்கு அதிகமாக அதாவது ரூ. 20.65 /கிலோவிற்கு அதிக பட்சத் தொகையாக திருவாளர் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்ஸ் அவர்கள் கோரியுள்ளார்கள். இதன்படி 97 மெட்ரிக் டன் இரும்புக் கழிவுகளை தற்போதைய அதிகபட்ச ஏலத் தொகையான ரூ. 20,02,000/- க்கு விற்பனை செய்யும் பட்சத்தில், கடந்த டிசம்பர் 2010 விற்பனை செய்த இதே வகையான இரும்புக் கழிவுகளுக்கான தொகையோடு (ரூ. 14.25/கிலோ) ஒப்பிடும் போது ரூ. 6,20,800/- அதிகமானதாகும்.

திருவாளர் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்ஸ் அவர்கள் 97 மெட்ரிக் டன் எடையளவுள்ள பழைய இரும்புக் கழிவுகளுக்கு கோரியுள்ள அதிகபட்ச தொகையான ரூ. 20,02,000/- (விற்பனை வரி மற்றும் வருமான வரி இல்லாமல்) ஏற்புடையதாக கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் ( வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பொது தொழிற்சாலையில் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் வடசென்னை வாகன பணிமனையிலிருந்தும் பெறப்பட்ட 20 வருடங்கலுக்கு மேலான 12 வாகனங்களின் துருப்பிடித்த அடித்தளத்தையும் சேர்த்து பெறப்பட்ட பயனற்ற இரும்பு கழிவுகள் 97 மெட்ரிக் டன் (97,000 கிலோ) எடை அளவை பயனற்றவை என கழிவு செய்யவும்,
2. மேற்கண்ட 97 மெட்ரிக் டன் எடை அளவு பயனற்ற இரும்பு கழிவுகளை வாங்குவதற்கு ஏலத்தில் மெஸர்ஸ் ஸ்ரீதேவி குங்கும டிரேடர்ஸ் அவர்கள் கோரிய மொத்த விலையானது ரூ.20,02,000/– (விற்பனை வரி 5% மற்றும் வருமான வரி 1% இல்லாமல்) தொழிற் நுட்பக்குழு ஆய்வு செய்து நிர்ணயித்த (மொத்த மதிப்பு ரூ.19,82,178/– விற்பனை வரி 5% மற்றும் வருமான வரி 1% இல்லாமல்) மதிப்பைவிட 19,822 கூடுதலாக இருப்பதினாலும், ஒன்றரை வருடத்திற்கு மேலாக தேங்கி நிற்கும் இரும்பு கழிவுகள் உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்,
3. மேற்கண்ட பயனற்ற இரும்பு கழிவுகள் விற்பனை செய்யும் பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்பவைப்புத் தொகை (20ரூ) ரூ.4,00,400–ஐ சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகை மற்றும் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள விற்பனை வரியையும் (மொத்த விலைக்கு), வருமான வரியையும் தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்று கொண்டு உள்ளது உள்ளபடி 97 மெட்ரிக் டன் எடை அளவு பயனற்ற இரும்பு கழிவுகளை மட்டும் எடுத்து செல்லவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 277/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 315/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

பொதுத் தொழிற்சாலையில் ஏல விற்பனை மூலம் ஏலத்தில் தீர்வு செய்யப்பட்ட பயனற்ற கழிவு பொருட்கள் அனைத்தையும் ஒரு செயற் பொறியாளர் முன்னிலையில் மாநகராட்சி எடை மேடையில் எடை போட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என்றும், இப்பொருளை எடுக்கும் ஏலதாரர் இரண்டே நாட்களில் அனைத்து பொருட்களையும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.

*****

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1459/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.04.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.450/2013 பொருள் எண்.25

**புதிய வாகனங்கள் கொள்முதல் கழிவு செய்யும் நிலையிலுள்ள பழைய வாகனங்களுக்கு பதிலாக 40 எண்ணிக்கையில் – கனரக டிப்பர் வகை வாகனங்கள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் 2013–14ஆம் நிதியாண்டுக்கான சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இயந்திர பொறியியல் துறை என்னும் தலைப்பில் பத்தி எண். 43ல், 40 எண்ணிக்கையில் கனரக டிப்பர் லாரிகள், ஏற்கனவே கழிவு செய்யப்படும் நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு பதிலாக கொள்முதல் செய்து பயன்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

தற்போது, இயந்திர பொறியியல் துறையின் கீழ் 107 எண்ணிக்கையில் கனரக டிப்பர் லாரிகள் மண்டலம்–1 முதல் 15 வரைக்குட்பட்ட பகுதிகளில் சேருகின்ற கட்டிட இடிபாடுகள் மற்றும் குப்பைகள் அகற்றும் பணிக்கு பராமரித்து பயன்படுத்தி வரப்படுகின்றன. இந்த வாகனங்களில் 10 ஆண்டு கடந்து இயக்கிவரப்படும் வாகனங்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், மற்றும் பழமை வாய்ந்த இந்த வாகனங்களில் பழுது நீக்கிட செலவழிக்க நேரிடும் தொகை பொருளாதார ரீதியாக ஏற்புடையதாக இருக்காது. எனவே 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயக்கிவரப்படும் கனரக டிப்பர் லாரிகளை கழிவு செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு கழிவு செய்யப்படும் வாகனங்களுக்கு மாற்றாகவும் மற்றும் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வரும் மக்கள் தொகை மற்றும் உள் கட்டமைப்பு பெருக்கத்தால் ஏற்படுகின்ற கட்டிட இடிபாடு மற்றும் குப்பைகளின் அளவு உயர்ந்துள்ளதாலும் இதனை அன்றன்றே அகற்றி துாய்மையாக்கிட புதிய வாகனங்கள் கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

இதன்படி, 40 எண்ணிக்கையில் கனரக டிப்பர் லாரிகள் கொள்முதல் செய்ய தோராயாக ரூ. 6 கோடி செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது. கணக்கிடப்படுகிறது. இந்த தொகையை இயந்திர பொறியியல் துறையின் 2013–14ஆம் ஆண்டிற்கான மூலதன நிதி ஒதுக்கீட்டில் செலவழித்துக் கொள்ளலாம்.

ஆகையால், இயந்திர பொறியியல் துறையில் 40 எண்ணிக்கையில் கனரக டிப்பர் லாரிகள் ரூபாய் 6 கோடி திட்ட மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது.

எனவே, 40 எண்ணிக்கையில் கனரக டிப்பர் லாரிகள் ரூபாய் 6.00 கோடி திட்ட மதிப்பீட்டில் கொள்முதல் செய்திட நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘18.7.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 276/2013 நாள் 18.7.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.07.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 314/2013 நாள் 19.07.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.எ1/3105/2012</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.451/2013 **பொருள் எண்.26**

**<u>வயது முதிர்வு ஓய்வு அனுமதி</u>**

**12.12.2012** நாளிட்ட சுற்றறிக்கையின் படி, திரு.பி. ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக **31.07.2013** அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் **14.12.1977**ல் முதல் வரைவாளர் பணியில் சேர்ந்தார். **27.02.1981** முதல் **26.02.1991** வரை இளநிலைபொறியாளராக பின்னர் தேர்வு இளநிலை பொறியாராக **27.02.1991** முதல் **26.02.2001** வரையிலும், சிறப்பு நிலை இளநிலை பொறியாளராக **27.02.2001** முதல் **26.02.2011** வரையிலும், ஒரே பதவியில் **30**ஆண்டுகள் பணி நிறைவு செய்ததற்காக **27.02.2011** அன்று ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டு தொடர்ந்து **14.05.2013** வரை பணியாற்றி, உதவி செயற்பொறியாளராக மழைநீர்வடிகால்துறையில் **15.05.2013** முற்பகல் முதல் பணியில் சேர்ந்து இந்நாள் வரை தொடர்ந்து **35** ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். தனியர் வகித்த வரைவாளர் மற்றும் இளநிலை பொறியாளர் பதவிகளில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களிலிருந்து தணிக்கைத்தடை நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரி, இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது பணிபுரியும் மழைநீர்வடிகால்துறையிலும் தணிக்கை தடை, நேர்செய்யப்படாத முன்பணம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

திரு. பி. ராஜேந்திரன் உதவி செயற்பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்கள் (பழைய மண்டலம் **–10**) புதிய மண்டலம் **– 13** இளநிலை பொறியாளராக **09.07.1992** முதல் **31.07.1995** வரை பணி புரிந்துள்ளார். அன்னார் பணிபுரிந்த காலத்திற்குண்டான தணிக்கை தடைகளை ஆய்வு செய்ததில் அன்னாரை பொறுப்பாக்கி பத்தி எண்: **58/1993–1994**, பத்தி எண்.**26/1994–1995**, பத்தி எண். **75/1995–1996**ஆம் ஆண்டு தனி பொறுப்பு மற்றும் கூட்டு பொறுப்பாக எழுப்பப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள தணிக்கை தடைகளில் மன்றத்தின் ஒப்புதல் பெறப்படவில்லையெனவும் பணிகளில் குறைபாடு, உள்ளது எனவும் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீட்டு தொகை ரூ.**50,647** என தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தணிக்கை தடையினை நீக்கம் செய்ய துறை ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, எனவும் இத்தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தொகையை தனியரது பணிகொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**03.07.2013** நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் அறிக்கையில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் உறுப்பினர் இல்லை என தனி அலுவலர் அவர்களின் **31.05.2013** நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு. பி. ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்கள் மீது நிலுவையில் உள்ள தணிக்கைத்தடையின் நிதி இழப்பீட்டு தொகை ரூ.**50,647/–**க்கு பொறுப்பாக்கி இது தவிர அவர்களின் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள், நிதி இழப்பீடுகள் ஏதும் இருப்பதாக பின்னர் தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி, பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், **31.07.2013** அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.வ.அ.ந.க.எண்.அ4/2000/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.452/2013 **பொருள் எண்.27**

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.பி.குருநாதன், செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் வயது முதிர்வு காரணமாக சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெற வேண்டிய நாள் **30.06.2013.** தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன்கீழ் வருவதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

திரு.பி.குருநாதன், செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) மாற்றுப்பணி பேருந்து சாலைத்துறையில் பணிபுரிபவர் முதன் முதலில் **06.07.1979** அன்று சூப்பர்வைசராக (Re-designated as Asst.Engineer) சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து, **31.05.1993** அன்று உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்றும், **11.05.2007** அன்று செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்றும் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

தனியர் வகித்து வந்த உதவி செயற்பொறியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியருக்கு சூப்பர்வைசர், உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் பதவியில் பணி வரண்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் பணிபுரிந்த மண்டலம் மற்றும் துறைகளிலிருந்து தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை. தனியர் சென்னை மாநகராட்சியில் **33** ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலிருந்து இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் பணியாற்றிய அனைத்து மண்டலம் மற்றும் துறைகளுக்கு தணிக்கைத்தடை முன்பண நிலுவைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரப்பட்டதில் துறை / மண்டலங்களிலிருந்து ''இன்மை'' அறிக்கையும் பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் (மத்தியம்) பணியாற்றிய காலத்தில் தனியர் பெயரில் தனிப்பட்ட முறையில் தணிக்கைத்தடைகள் ஏதும் இல்லை.

தனியருக்கு சென்னை மாநகராட்சி மூலம் வீடு கட்டும் முன்பணம் ஏதும் வழங்கப்படவில்லை. வாகன முன்பணம் சென்னை மாநகராட்சியிலிருந்து பெறப்பட்டு தொகை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் தனியர் தற்சமயம் உறுப்பினர் இல்லை என்ற சான்று பெறப்பட்டுள்ளது.

திரு.பி.குருநாதன், செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் மீது தணிக்கை தடைகள் நேர் செய்யப்படாத முன்பண நிலுவைகள் மற்றும் நிதி இழப்பீடு ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின் அதற்கு அன்னாரை முழு பொறுப்பாக்கி தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டுத்தியும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் **28.06.2013** நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியரை **30.06.2013** அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்து **28.06.2013** நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **28.06.2013** நாளிட்ட செயல்முறை ஆணை மூலமாக தனியரை **30.06.2013** அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுவதற்கு வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.வ.அ.ந.க.எண்.அ4/2001/2013**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 23.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.453/2013 பொருள் எண்.28

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.கே.தாமு, செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற வேண்டிய நாள் 30.06.2013. தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன்கீழ் வருவதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

திரு.கே.தாமு, செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் முதன் முதலில் 07.10.1975 பிற்பகல் ஓவர்சீராக சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து, 28.05.1979 அன்று இளநிலைப் பொறியாளராக பதவி உதவி பெற்றும், 14.12.1985 அன்று உதவி பொறியாளராக உயர் பதவி (Re-designation) பெற்று 29.02.2000 அன்று உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்றும், 18.11.2009 அன்று செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணியாற்றி வந்தார்.தனியர் வகித்து வந்த ஓவர்சீர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியருக்கு ஓவர்சீர், இளநிலை பொறியாளர், உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் பதவிகளில் பணி வரண்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் பணிபுரிந்த மண்டலம் மற்றும் துறைகளிலிருந்து தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் சென்னை மாநகராட்சியில் 37 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலிருந்து இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் பணியாற்றிய அனைத்து மண்டலம் மற்றும் துறைகளுக்கு தணிக்கைத்தடை முன்பண நிலுவைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரப்பட்டதில் துறை / மண்டலங்களிலிருந்து ''இன்மை'' அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. மேலும் வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் (மத்தியம்) பணியாற்றிய காலத்தில் தனியர் பெயரில் தனிப்பட்ட முறையில் தணிக்கைத்தடைகள் ஏதும் இல்லை.

தனியருக்கு சென்னை மாநகராட்சி மூலம் வீடு கட்டும் முன்பணம் ஏதும் வழங்கப்படவில்லை. வாகன முன்பணம் சென்னை மாநகராட்சியிலிருந்து பெறப்பட்டு தொகை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் மீது கடன் தொகை ஏதும் நிலுவையில் இல்லை என்ற சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும், திரு.கே.தாமு, செயற்பொறியாளர், அவர்கள் மீது சென்னை மாநகராட்சி விதி 10(பி)ன்கீழ் பொ.து.ந.க.எண்.இ2/15026/2013, நாள் 19.06.2013 ன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது நிலுவையில் உள்ளது.

திரு.கே.தாமு, செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றியும், தணிக்கை தடைகள் நேர் செய்யப்படாத முன்பண நிலுவைகள் மற்றும் நிதி இழப்பீடு ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின் அதற்கு அன்னாரை பொறுப்பாக்கி தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டுத்தியும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் தனியரை 30.06.2013 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்து 28.06.2013 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 28.06.2013 நாளிட்ட செயல்முறை ஆணை மூலமாக தனியரை 30.06.2013 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.வ.அ.ந.க.எண்.அ4/ 1999 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**454/2013** **பொருள் எண்.29**

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.எஸ்.தேவபாலன், உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற வேண்டிய நாள் **30.06.2013.** தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

திரு.எஸ்.தேவபாலன், உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் முதன் முதலில் **14.09.1978** அன்று சர்வேயராக சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து, **20.08.1984** அன்று இளநிலைப் பொறியாளராக பதவி உயர்வு பெற்றும், **15.05.2013** அன்று உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்றும் தொடர்ந்து பணியாற்றி வந்தார்.

தனியர் வகித்து வந்த சர்வேயர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியருக்கு இளநிலைப் பொறியாளர் பதவியில் பணி வரண்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் பணிபுரிந்த மண்டலம் மற்றும் துறைகளிலிருந்து தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை. தனியர் சென்னை மாநகராட்சியில் **34** ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலிருந்து இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் பணியாற்றிய அனைத்து மண்டலம் மற்றும் துறைகளுக்கு தணிக்கைத்தடை முன்பண நிலுவைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரப்பட்டதில் துறை / மண்டலங்களிலிருந்து ''இன்மை'' அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. மேலும் வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் (மத்தியம்) பணியாற்றிய காலத்தில் தனியர் பெயரில் தனிப்பட்ட முறையில் தணிக்கைத்தடைகள் ஏதும் இல்லை.

தனியருக்கு சென்னை மாநகராட்சி மூலம் வீடு கட்டும் முன்பணம் ஏதும் வழங்கப்படவில்லை. வாகன முன்பணம் சென்னை மாநகராட்சியிலிருந்து பெறப்பட்டு தொகை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் மீது கடன் தொகை ஏதும் நிலுவையில் இல்லை என்ற சான்று பெறப்பட்டுள்ளது.

திரு.எஸ்.தேவபாலன், உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் மீது தணிக்கை தடைகள் நேர் செய்யப்படாத முன்பண நிலுவைகள் மற்றும் நிதி இழப்பீடு ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின் அதற்கு அன்னாரை பொறுப்பாக்கி தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டுத்தியும் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் தனியரை **30.06.2013** அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்து **28.06.2013** நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **28.06.2013** நாளிட்ட செயல்முறை ஆணை மூலமாக தனியரை **30.06.2013** அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ச.கு.ந.க.எண்.எல்சி1/2949/2012</u>**

**<u>ஆணையர்(பொறுப்பு) அவர்களின் 13.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.455/2013 **பொருள் எண்.30**

**<u>14 நிலை வழக்கறிஞர்கள் பதவியினை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய அனுமதி</u>**

தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களின் **22.02.2012, 06.06.2012** மற்றும் **19.05.2012** நாளிட்ட வழக்குரைஞர்களின் கடிதத்தில், சென்னை மாநகராட்சியில் நிலை வழக்குரைஞர்களாக நியமனம் செய்ய பரிந்துரை செய்து அனுப்பப்பட்டதை தொடர்ந்து **19.06.2012** நாளிட்ட மன்ற தீர்மானத்தின்படி ஆணையர் அவர்களின் **28.03.2012** மற்றும் **25.06.2012** நாளிட்ட செயல்முறை ஆணையின்படி **14** நிலை வழக்கறிஞர்கள் புதியதாக சென்னை மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக ஓராண்டுக்கு நியமனம் செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களாக பணியமர்த்தப்பட்டவர்களின் விவரம்.

1. திரு.இ.முருகேசன்
2. திரு.எம்.கோவிந்தராஜ்
3. திரு.எ.பி.பாலசுப்பிரமணி
4. திரு.கே.பிரபாகரன்
5. திரு.ராஜசேகர்
6. திரு.எஸ்.பாலு
7. திரு.ஜெ.பொன்னுதுரை
8. திரு.தினேஷ் குமார்
9. திரு.கே.சௌந்தரராஜன்
10. திரு.ஆர்.சூரியபிரகாஷ்
11. திரு.சி.சி.ரங்கராஜன்
12. திரு.வி.முரளிகிருஷ்ணன்
13. திரு.கே.புகழேந்தி
14. திரு.டி.சி.கோபாலகிருஷ்ணன்

எனவே, மேற்காணும் நிலைவழக்குரைஞர்களில் திரு.இ.முருகேசன் அவர்களின் பணிக்காலம் **28.03.2013** முதல் ஓராண்டு காலம் முடிவடைவதால் மேலும் **29.03.2013** முதல் ஓராண்டு காலம் வரை நீடிப்பும் மற்றும் எஞ்சியுள்ள நிலைவழக்குரைஞர்களின் பணிக்காலம் **25.06.2013** அன்று ஓராண்டு காலம் முடிவடைவதால் மேலும் **26.06.2013**லிருந்து ஓராண்டு காலம் வரை நீடிப்பதற்கு நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 31156 / 2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**456/2013** **பொருள் எண்.31**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண். 2407, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 28.06.2013ன் படி, டாக்டர்.விஜய் பிங்ளே, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் சென்னை மாநகராட்சியில் இணை ஆணையர் (பணிகள்) ஆக அயற்பணியில் 01.07.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 31835 / 2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.457/2013 **பொருள் எண்.32**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண். 2406, பொது (சிறப்பு–அ) துறை, நாள்:28.06.2013ன் படி, டாக்டர்.ட்டி.ஜி.வினய், இ.ஆ.ப., திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) ஆக அயற்பணியில் 05.07.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 31397 / 2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.458/2013 **பொருள் எண்.33**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண். 2406, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 28.06.2013ன் படி, திரு.ட்டி.ஆனந்த், இ.ஆ.ப., திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்கள் சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (சுகாதாரம்) ஆக அயற்பணியில் 03.07.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ2/2392/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.459/2013 **பொருள் எண்.34**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை எண்.552, நிதி(ஒபி–II) துறை , நாள். 18.06.2013ன்படி அண்ணா பல்கலைக்கழகத்தில் நிதி அலுவலராக பணிபுரிந்த அரசு இணைச்செயலாளர் திரு.எஸ்.சீனிவாசகம் அவர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு சென்னை மாநகராட்சியில் நிதி ஆலோசகராக பணிபுரிந்த திரு.வே.சுந்தர் அவர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்ட காலிப்பணியிடத்தில் நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையினை தொடர்ந்து 13.07.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி திரு.எஸ்.சீனிவாசகம், அரசு இணைச்செயலாளர், நிதித்துறை அவர்கள் அயற்பணியில் சென்னை மாநகராட்சியில் நிதி ஆலோசகராக 26.06.2013 முற்பகல் பணியில் சேர்ந்தார் என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்காகவும் , பதிவிற்காகவும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 31832 / 2013**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.460/2013 **பொருள் எண்.35**

**பணியமைப்பு**

அரசாணை (வாலாயம்) எண். 2301, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 19.06.2013 மற்றும் அரசாணை (ப) எண்.294, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை, நாள்: 26.06.2013ன் படி,கீழ்கண்ட மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் அயற்பணி மூலம் சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலராக பொறுப்பேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பெயர் திருவாளர்கள் | சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலராக பொறுப்பேற்ற நாள் |
|---|---|---|
| 1. | எஸ். இளங்கோவன்<br>மாவட்ட வருவாய் அலுவலர் | 10.07.2013 முற்பகல் |
| 2. | டி. காங்கேயன் கென்னடி<br>மாவட்ட வருவாய் அலுவலர் | 05.07.2013 முற்பகல் |
| 3. | எஸ். அண்ணாமலை பிரேம்குமார்<br>ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் | 03.07.2013 முற்பகல் |

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 27778 / 2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.461/2013 **பொருள் எண்.36**

**பணியமைப்பு**

அரசாணை (பல்வகை) எண்.95, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3), துறை, நாள்: 14.10.2012ன் படி, சென்னை மாநகராட்சிக்கு 3 வட்டாட்சியர்கள் பணியிடம் புதியதாக தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

09.06.2013 நாளிட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.1559/2013.அ3, நாள்: 09.06.2013ன் படி, கீழ்கண்ட வட்டாட்சியர்கள் அயற்பணி மூலம் சென்னை மாநகராட்சியில் தனி வட்டாட்சியர்களாக (புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்) பொறுப்பேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | வட்டாட்சியர்களின் பெயர் திருவாளர்கள் | சென்னை மாநகராட்சியில் தனி வட்டாட்சியராக பொறுப்பேற்ற நாள் |
|---|---|---|
| 1. | ஏ. மூர்த்தி<br>தனி வட்டாட்சியர் | 12.06.2013 முற்பகல் |
| 2. | அ. இலட்சுமணன்<br>தனி வட்டாட்சியர் | 12.06.2013 முற்பகல் |
| 3. | இரா. மணிமேகலை<br>தனி வட்டாட்சியர் | 13.06.2013 முற்பகல் |

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 31618 / 2013</u>**
**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.462/2013 **பொருள் எண்.37**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண். 131, தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நிர்வாகம்.1)த்துறை, நாள்: 25.06.2013ன் படி, திரு.எம்.சேகர், மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள், சென்னை மாநகராட்சியில் மக்கள் தொடர்பு அலுவலர் ஆக அயற்பணியில் 01.07.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 31819 / 2013</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.463/2013 **பொருள் எண்.38**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3), துறை, நாள் : 28.06.2013ன் படி, சென்னை மாநகராட்சியில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (தகவல்) ஆகிய இரண்டு பணியிடங்களை, முறையே ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.4300 மற்றும் ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.4500 என்ற ஊதிய விகிதத்தில் நிரந்தரமாகத் தோற்றுவித்து, இப்பணியிடங்களை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறையிலிருந்து அயற்பணி அடிப்படையில் நியமனம் செய்யலாம் என ஆணையிட்டுள்ளது.

28.06.2013 நாளிட்ட செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலரால் அரசு இணை செயலாளர் அவர்களின் செயல்முறை ஆணை, எண்.12535/நிர்வாகம்.2/2013, நாள்: 28.06.2013ன் படி, திரு.ஒய்.எடிசன், அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) (புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்) ஆக அயற்பணியில் 01.07.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 31820 / 2013</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**464/2013** **பொருள் எண்.39**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (நிலை) எண்.**92**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.**3**), துறை, நாள் : **28.06.2013**ன் படி, சென்னை மாநகராட்சியில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (தகவல்) ஆகிய இரண்டு பணியிடங்களை, முறையே ரூ.**9300–34800**+ தர ஊதியம் ரூ.**4300** மற்றும் ரூ.**9300–34800**+ தர ஊதியம் ரூ.**4500** என்ற ஊதிய விகிதத்தில் நிரந்தரமாகத் தோற்றுவித்து, இப்பணியிடங்களை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறையிலிருந்து அயற்பணி அடிப்படையில் நியமனம் செய்யலாம் என ஆணையிட்டுள்ளது.

**28.06.2013** நாளிட்ட இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலரால் அரசு இணை செயலாளர் அவர்களின் நடவடிக்கைகள் எண்.**12879**/நிர்வாகம்.**2/2013–1**, நாள்:**28.06.2013**ன் படி, திரு.எஸ்.எம்.திவாகர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்), செய்தி வெளியீட்டுப் பிரிவு, (தலைமையிடம்) அவர்கள், சென்னை மாநகராட்சியில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) (புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்) ஆக அயற்பணியில் **01.07.2013** முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>ம.து.ந.க.எண்.பி1/002/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.465/2013 பொருள் எண்.40

**<u>வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் அமெரிக்காவில் உள்ள சான் அன்டோனியோ நகரில் நடைபெற்ற சகோதரத்துவ நகரங்களின் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டமைக்கு – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி</u>**

அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள சான் அன்டோனியோ, நகர மேயர் அவர்கள் தன்னுடைய 17.01.2013 மற்றும் 05.04.2013 நாளிட்ட கடிதங்கள் மூலம் சென்னை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்களை 11.07.2013 முதல் 13.07.2013 வரை சான் அன்டோனியோவில் நடைபெறவுள்ள சகோதரத்துவ நகரங்களின் சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார். அதனை தொடர்ந்து வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்கள் மேற்கண்ட மாநாட்டில் கலந்து கொள்ள முறையே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு அரசாணை நிலை எண்.357, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை, நாள்.04.07.2013, மற்றும் அரசாணை நிலை எண்.385, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்)துறை, நாள்.12.07.2013ன்படி அனுமதியும் மற்றும் முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்களுக்கு அரசாணை நிலை எண்.685, பொது (சிறப்பு – B பிரிவு ) துறை நாள். 09.07.2013, மற்றும் அரசாணை நிலை எண்.2640, பொது (சிறப்பு –B பிரிவு) துறை, நாள்.12.07.2013 ஆகிய அரசாணைகளின்படி, 11.07.2013 முதல் 17.07.2013 வரை அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள சான் அன்டோனியோ, நகரம் செல்ல அரசின் அனுமதி அளிக்கப்பட்டது.

இவ்வரசாணைகளில் சென்னை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்கள் மேற்குறிப்பிட்ட பயணம் மேற்கொள்ளவும், இதற்கான செலவுத்தொகையை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனவும், மேலும் இந்நிகழ்வு குறித்து சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட 1 முதல் 3 வரையிலுள்ள இனங்களுக்கு,

1) மேற்கண்ட அரசாணைகளின்படி வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் சார்பில் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள சான்அன்டோனியோ நகரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டமைக்கும்,
2) இப்பயணத்திற்கான வானுர்தி மற்றும் பயணச்செலவு தொகையினை வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து பெறாமல் (அவருடைய பயணத்திற்கு மட்டும்) தனது சொந்த செலவிலேயே மேற்கொண்டதற்கும்,
3) மேற்கண்ட மாநாட்டில் முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்கள் சென்னை மாநகராட்சி சார்பாக கலந்து கொண்டதற்கான செலவுத் தொகை, சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து செலவு மேற்கொண்ட நிகழ்விற்கும்,

நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 320/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/636/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**466/2013** பொருள் எண்.**41**

**தெரு பெயர் மாற்றம்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளரின் நேர்முக கடிதத்தில், **2013–14** சட்டமன்ற பேரவை தமிழ் வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு அமைச்சர், தமிழ் வளர்ச்சி இயக்ககம் அமைந்துள்ள ஆல்ஸ் சாலையின் பெயரை தமிழ்ச்சாலை என பெயர் மாற்றப்படும் எனவும், கொலைகாரன்பேட்டை என்னும் பகுதியின் பெயர் மாற்றப்படும் எனவும் அறிவுத்துள்ளார் எனத்தெரிவித்து, அதற்கான உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சரின் சட்டமன்ற அறிவிப்பிற்கேற்ப தமிழ் வளர்ச்சித்துறை, கலைப் பண்பாட்டுத்துறை, தொல்லியல் துறை ஆகிய அலுவலங்கள் அடங்கிய தமிழ் வளர்ச்சி வளாகம் அமைந்துள்ள ஆல்ஸ் சாலைக்கு தமிழ்ச் சாலை எனப்பெயர் மாற்றம் செய்ய அரசுக்குப் பரிந்துரைக்க, வார்டுக்குழு, மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். மேலும், கொலைகாரன்பேட்டை என்னும் பெயரை மாற்றுதல் தொடர்பாக, சென்னை இராயப்பேட்டையிலுள்ள கொலைகாரன்பேட்டை பகுதியின் வரலாற்றைப் பார்க்கும் போது, கல்லுக்காரன்பேட்டை என்ற பகுதி இருந்ததாகவும், அந்தக் கல்லுக்காரன் பேட்டை தான் மருவி கொலைகாரன் பேட்டை ஆகி இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர் ஸ்ரீராம் தெரிவித்துள்ளதாக **06.02.2013–**ஆம் நாளைய மாலை மலர் நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது என்றும், கொலைகாரன்பேட்டை என்ற பகுதியின் பெயரை வரலாற்று ஆசிரியர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் கல்லுக்காரன்பேட்டை என்றோ, அகத்தியர் / கவுந்தியடிகள் / பவநந்தினார் / பாவேந்தர் / கபிலர் / ஔவையார் / அதியமான் / பாரி / அங்கவை / சங்கவை /நாச்சியார், குந்தவை / மணியம்மை / ஜெயலலிதா / பாடினியார் / திலகவதியார் / முத்துலட்சுமி அம்மையார் போன்ற பெயர்களுள் ஏதாவதொரு பெயரைச் சூட்டாலாம் என பரிந்துரைப்பதாக மேற்காணும் கடிதத்துள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்காடு வட்டம், எண்.**18/1** பாவடி தெரு, என்னும் முகவரி கொண்ட திரு.எஸ். சுதாகர் என்பவர் சென்னை இராயப்பேட்டையில் உள்ள கொலைகாரன் பேட்டை **1**வது தெரு, **2**வது தெருவில் வசிக்கும் மக்கள் பல ஆண்டுகளாக புழக்கத்தில் உள்ள இந்த பெயரை மாற்றக் கோரி மாநகராட்சிக்கு பலமுறை மனு கொடுத்தும், அவற்றின் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அங்கு வாழும் மக்கள் வங்கிகள், அலுவலகங்களில், தங்கள் முகவரியை எழுதும் போது, பிறர் ஏளனமாக சிரிப்பதாகவும் தெரிவித்து, கொலைகாரன்பேட்டை என்னும் பெயரை மாற்றுமாறு **07.02.2013** நாளிட்ட மாண்புமிகு முதலமைச்சர் 'W' மனுவில் கோரப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, மாவட்ட வருவாய் அலுவலரால் நிலம் மற்றும் உடைமைத்துறை களப்பணியாளர்களுடன் களஆய்வு செய்யப்பட்டதில் **70** வயது மதிக்கத்தக்க திரு. ஆனந்தன், அரிமா சங்கத்தைச் சார்ந்த வழக்குரைஞர் திரு.எல்.ஆர்.ஆனந்தன் ஆகியோர் கொலைக்காரன்பேட்டையில் **50** ஆண்டுகளுக்கு முன் கோலப்பொடியை விற்கும் சில்லரை வணிகர் நிறைய பேர் வாழ்ந்து வந்ததாகவும், அதனால் அப்பகுதிக்கு கோலக்காரன்பேட்டை என பெயர் வழங்கி இருந்ததாகவும், நாளடைவில் அப்பெயர் மருவி கொலை காரன்பேட்டை என மாறியதாகவும் தெரிவித்தனர். மேலும் சென்னை இராயப்பேட்டை பகுதியில் நெடுங்காலமாக வாழ்ந்து, தற்பொழுது விரிவாக்கம் செய்யப்பட்ட தென் சென்னைப் பகுதியில் வாழ்ந்துவரும் சுமார் **75** (வயதுடைய) அகவையுடைய தமிழறிஞர் புலவர் வெற்றியழகன் என்பவர், அங்கு குடியிருக்கும் பெரியவர் சிலர் மார்கழி மாதம் முழுவதும் ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் இராயப்பேட்டை பகுதியிலுள்ள வீட்டு வாயில்களின் முன் கோலம் போடுவதும், தைத்திங்கள் பிறந்தவுடன் அவ்வீட்டு உரிமையாளர்கள் கொடுக்கும் பணத்தை பெறுவதும் வாடிக்கையான ஒன்று எனவும் தெரிவித்தார். மேற்கண்டவற்றிலிருந்து கோலக்காரன்பேட்டை என்று முன்பு வழங்கிய பெயர் பின் மருவி கொலை காரன்பேட்டை என்று மாறியுள்ளது என தெரியவருகிறது.

இதனையடுத்து, கொலைகாரன்பேட்டை **1**வது தெரு மற்றும் **2**வது தெரு என்பவற்றை நீக்கி முன்னர் வழங்கி வந்த கோலக்காரன்பேட்டை **1**வது தெரு, **2**வது தெரு எனப் பெயர் மாற்றம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி பெற முதன்மை செயலர் / ஆணையரின் ஒப்புதல் **20.04.2013** அன்று பெறப்பட்டது. அவ்வமயம் நாளிதழ்களில் கொலைகாரன்பேட்டையின் பெயர் மாற்றப்படும் என்ற அரசின் அறிவிப்பு வெளி வந்ததனைத் தொடர்ந்து இப்பெயர் மாற்றம் தொர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றின்படி சென்னை, இராயப்பேட்டை பகுதியில் உள்ள கொலைகாரன்பேட்டை என்னும் பெயரை மாற்றி தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் பரிந்துரை செய்து அறிவித்துள்ள கல்லுக்காரன்பேட்டை அல்லது மாவட்ட வருவாய் அலுவலரின் கள ஆய்வின்படி அறியப்பட்ட கோலக்காரன் பேட்டை அல்லது மற்ற தமிழ்பெயர்களுள் ஏதாவதொரு பொருத்தமான பெயரை அரசு தேர்வு செய்து அப்பெயரைச் சூட்டி அறிவிப்பு செய்ய அரசுக்குப் பரிந்துரை செய்யவும், தமிழ்வளர்ச்சி வளாகம் அமைந்துள்ள ஆல்ஸ் சாலையை தமிழ்ச்சாலை எனப்பெயர் மாற்றம் செய்யவும் மண்டலம்–5 மற்றும் 9வது வார்டு குழுக்களின் பின்னேற்புக்குட்பட்டு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.07.2013** அன்று தீர்மான எண். **318/2013**,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இராயப்பேட்டையில் உள்ள கொலைக்காரன் பேட்டை என்ற இடத்திற்கு மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அம்மா அவர்களுடைய பெயரால் ஜெயலலிதா நகர் முதல் தெரு என்றும், ஜெயலலிதா நகர் இரண்டாவது தெரு என்றும் பெயர் சூட்டலாம் என்று மன்றம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது”.

*****

**<u>தி.க.மே.ந.க.எண்.அ7/2003/ 2013</u>**

**<u>முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களின் 22 .07 .2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.467/2013 **பொருள் எண்: 42**

**<u>குப்பையிலிருந்து மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தெடுப்பதை ஊக்குவித்தல் – பரிசு அளிப்பது – செயல்திட்டம் செயல்படுத்த அனுமதி.</u>**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **2013–14** ஆண்டிற்கான அறிவிப்பு எண், **105**ல் குப்பையிலிருந்து நெகிழி (பிளாஸ்டிக்) கழிவுகளை பிரித்தெடுப்பதன் அவசியம் பற்றியும், அதை ஊக்குவிக்கும் பொருட்டு அதிகளவில் மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளை தனியாகப்பிரித்து வழங்கும் பொதுமக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களை ஊக்குவிக்க குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் தற்போது தினசரி உருவாகும் குப்பையின் அளவு **4800** டன் ஆகும். திடக்கழிவு மேலாண்மை கையேடின்படி குப்பையில் பிளாஸ்டிக் (மெல்லிய மற்றும் தடிமன்) பொருட்களின் அளவு **6** சதவீகிதம் ஆகும். இதில் மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு **2** சதவீகிதம் என்று தோராயமாக கணக்கிடப்பட்டுள்ளது.

அதன்படி தினசரி உருவாகும் குப்பையில் கலந்துள்ள **2** சதவீகிதத்திலான பிரித்தெடுக்கப்பட வேண்டிய மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு **96** மெ.டன் ஆகும். தற்போது **15** மண்டலங்களிலும் சேகரிக்கப்பட்டு துகள்களாக்கப்படும் மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு வாரம் ஒன்றிற்கு சராசரியாக **12** மெ.டன் ஆகும். தினசரி பிரித்தெடுக்கப்படும் மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு **1.70**மெ.டன் ஆகும். தினசரி உருவாகும் மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளின் அளவிற்கும் தற்போது சென்னை மாநகராட்சியால் சேகரிக்கப்பட்டு வரும் மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளின் அளவிற்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. எனவே தினசரி உருவாகும் குப்பையிலிருந்து மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தெடுக்கும் பணியை தீவிரப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

எனவே, முதற்கட்டமாக தற்போதைக்கு நாளொன்றிற்கு **1** சதவீகிதம் என்ற அளவிற்கு **48** மெ.டன் மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகள் பிரித்தெடுக்கப்படவேண்டும் என்றும் இந்த முயற்சியை சீரியமுறையில் செயல்படுத்த அதிகளவில் பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தெடுத்து சென்னை மாநகராட்சியிடம் வழங்கும் பொதுமக்களை ஊக்குவிக்க கீழ்கண்ட செயல் திட்டத்தை செயல்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

**<u>செயல் திட்டம் :–</u>**

- ஒவ்வொரு வார்டிலும் அனைத்து புதன் மற்றும் சனிக்கிழமைகளில் காலை **9.00** மணி முதல் மாலை **5.00** மணி வரையிலும் பொறுப்பாக ஒருவரை நியமித்து பொதுமக்களிடமிருந்து மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகள் பெறுதல்.
- அவ்வாறு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை சேமித்து வைப்பதற்கு மண்டலங்களில் தேவையான ஏற்பாடுகள் செய்தல்.
- சென்னை மாநகராட்சியிடம் மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளை நேரடியாக கொண்டு வந்து தரும் பொதுமக்களுக்கு ஒவ்வொரு கிலோவிற்கும் எண் இலக்கத்துடன் (Numbered) ஒரு டோக்கன் உதவி செயற் பொறியாளர் நிலையில் கையெழுத்திட்டு வழங்குதல்.
- ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்திலும் முந்தைய மாத இறுதியில் வழங்கப்பட்ட டோக்கன்களை கொண்டு வார்டுவாரியாக குலுக்கல் நடத்தி ஊக்கப்பரிசுகள் வழங்குதல்.
- ஒவ்வொரு மண்டலத்திலும் தினசரி உருவாகும் மொத்த குப்பையில் **1** சதவீகித அளவான மெல்லிய பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்க தேவையான அனைத்து சீரிய முயற்சிகளையும் அந்தந்த மண்டல அலுவலர்கள் மூலமாக மேற்கொண்டு இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துதல்.
- பரிசுகள் வழங்குதலை முறையாக செயல்படுத்தவும், உரிய நபர்களை தேர்வு செய்வதற்கும் அனைத்து மண்டலங்களிலும் மண்டல அலுவலர், செயற்பொறியாளர்கள், மண்டல சுகாதார அலுவலர் மற்றும் பகுதி உதவி செயற் பொறியாளர்கள் அடங்கிய ஒரு குழு அமைத்து நடைமுறைப்படுத்துதல்.

<u>ஊக்கப்பரிசு வழங்கும் திட்டம்:</u>

ஒவ்வொரு மாதத்தின் முதல் புதன்கிழமையன்று 200 வார்டு அலுவலகங்களிலும் உதவி செயற்பொறியாளர்கள் முன்னிலையில் முந்தைய மாத இறுதியில் வழங்கப்பட்ட டோக்கன்களை கொண்டு வார்டுவாரியாக குலுக்கல் நடத்தி கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்கலாம்.

| பரிசு | வழங்கப்படும் பரிசுகளின் விவரம் | வழங்கப்படும் பரிசுகளின் உத்தேச மாத செலவினம் | மொத்த செலவினம் |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒவ்வொரு வார்டுக்கும்) | ½ கிராம் தங்க நாணயம் | 200–பரிசுகள் X ரூ1,500/- | ரூ. 3,00,000/– |
| அடுத்த 5நபர்களுக்கான பரிசு (ஒவ்வொரு வார்டுக்கும்) | ஒரு கைகடிகாரம் | 5X200=1000பரிசுகள் பரிசுகள் 1000X ரூ.300/– | ரூ. 3,00,000/– |
| **மொத்தம்** | | | **ரூ. 6,00,000/–** |

முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.18,00,000/–. (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) செலவாகும் என கணக்கிடப்படுகிறது.

எனவே, இச்செயல்திட்டத்தை ஊடகங்கள் மூலமாகவும் மற்றும் செய்தி வெளியீடு விளம்பரங்கள் மூலமாகவும் விரிவாக செயல்படுத்தி பொதுமக்களுக்கு பரிசுகள் வழங்குவதற்கு நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 15.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 67/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு ( வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 287/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 326/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.5.ந.க.எண்.இ1/5193/2013**

**முதன்மைச் செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.468/2013 **பொருள் எண்.43**

**கழிப்பிடம் மற்றும் டீசல் வழங்கும் அலுவலரின் அறை இடிக்க அனுமதி**

| வரிசை எண் | வார்டு எண்.63 | மண்டலம்–5 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–5, வார்டு–63ல் ஆதித்தனார் சாலையில் தென் சென்னை வாகன பணிமனையில் உபயோகமற்ற நிலையில் உள்ள பழுதடைந்த கழிப்பிடம் மற்றும் டீசல் வழங்கும் அலுவலரின் அறை. |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1960 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 1010 ச.அடி 204 ச.அடி |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1010 ச.அடி 204 ச.அடி |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ஏதும் இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 7 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | பணி செய்யும் இடத்தில் கூடுதலாக கட்டிடம் கட்டுதல் |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–5 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 5 வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 9, நாள். 10–12–2012 |

எனவே, மண்டலம்–5, வார்டு–63ல் ஆதித்தனார் சாலையில் தென் சென்னை வாகன பணிமனையில் உபயோகமற்ற நிலையில் உள்ள பழுதடைந்த கழிப்பிடம் மற்றும் டீசல் வழங்கும் அலுவலரின் அறையை இடித்து அகற்றிய பின்னர் புதியதாக பணி செய்யும் இடத்தில் கூடுதலாக கட்டிடம் கட்டுவதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 15.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 68/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 286/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1932/2010**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.469/2013 பொருள் எண்.44

**நில உரிமை துறப்பு செய்தல்**

சென்னை மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் எழும்பூர் கிராமம், புல எண்.84/3–இல் சென்னை–30, பரமேஸ்வரன் நகர் பகுதியில் கடந்த 50 ஆண்டுகளாக குடியிருந்து வரும் ஆதிதிராவிடர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் அரசாணை எண்.854, வருவாய் துறை, நாள்.30.12.2006–ன்படி இலவச பட்டா வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளனர். இந்நேர்வு தொடர்பாக முன் மொழிவுகள் அனுப்ப வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. வட்டாட்சியர் அறிக்கையில் பட்டா வழங்க கோரும் புலம் நிரந்தர வட்ட நிலப்பதிவேட்டில் கீழ்க்கண்டவாறு பதிவாகியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கிராமம் | – | எழும்பூர் |
| புல எண் | – | 84/3 |
| விஸ்தீரணம் | – | 17–17–0591 |
| வகைப்பாடு | – | Corporation Public |
| பதிவு பெற்ற உரிமையாளர் | – | சென்னை மாநகராட்சி (பொது) |

பரமேஸ்வரன் நகரில் குடியிருந்து வருபவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க கோரும் புலம் நிரந்தர நிலப்பதிவேட்டில் சென்னை மாநகராட்சி (பொது) என பதிவாகியுள்ளது. இக்குடியிருப்பில் அடிப்படைத் தேவைகளான தார்சாலை, குடிநீர், மின்சாரம், கழிவுநீர் கால்வாய் அரசால் அமைத்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பரமேஸ்வரன் நகர் குடியிருப்பு மக்களுக்கு அரசாணை எண்.854, வருவாய் துறை, நாள்.30.12.2006–இன் விதிமுறைகளைப் பின்பற்றி இலவச வீட்டு மனை வழங்கும் பொருட்டு, சென்னை மாநகராட்சியின் மறுப்பின்மைச் சான்று வழங்குமாறு மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலம் மற்றும் உடைமைத்துறையின் சார்–ஆய்வாளரால், பரமேஸ்வரன் நகர் குடிசைவாசிகளுக்கு இலவச பட்டா வழங்குவது தொடர்பாக கள ஆய்வு செய்யப்பட்ட குறிப்பில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘சென்னை மாநகராட்சி நிரந்தர நிலப்பதிவேட்டின் பதிவுகள் விவரம் பின்வருமாறு உள்ளன.

| கிராமம் | பிளாக் எண். | புல எண். | விஸ்தீரணம் | உரிமையாளர் பெயர் |
|---|---|---|---|---|
| எழும்பூர் | – | 84/3 | காணி – மனை –ச.அடி<br>19 – 1 – 0517 | மாநகராட்சி பொது |

மேலும், சென்னை மாநகராட்சி நிலம் மற்றும் உடைமைத்துறை நிரந்தர நிலப்பதிவேட்டில் எழும்பூர் கிராமம், புல எண்.84/3ல் காணி–19, 1 மனை 0517 சதுர அடி பரப்பளவு மாநகராட்சி பொது என்றும் வகைப்பாடுடைய எழும்பூர் கிராமம், புல எண்.84/3ல் அடங்கிய நிலமானது கடந்த 01.02.1962 அன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றின் முந்தைய அமைப்பான மெட்ராஸ் அவுசிங் யூனிட்டுக்கு மாற்றப்பட்டுள்ள விபரம் பதிவாகியுள்ளது.

பழைய 5–வது மண்டல அலுவலரால் மறுகள ஆய்வு செய்யப்பட்ட குறிப்பில் ‘‘மண்டலம்–5, கோட்டம்–69க்கு உட்பட்ட பரமேஸ்வரன் நகர் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்.84/3–இல் உள்ள நிலத்தில் 94 ஆதிதிராவிடக் குடும்பங்களைச் சார்ந்த மக்கள் கட்டிடம் மற்றும் கூரைவீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். பரமேஸ்வரன் நகர் பகுதி குடியிருப்பு வாசிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் (குடிநீர், சாலை, மின்சாரம்) அனைத்தும் அமைத்தும் செய்து தரப்பட்டுள்ளது. எனவே, அரசாணை எண்.854, வருவாய் துறை நாள்–30.12.2006–இன் படி விதிமுறைகளை பின்பற்றி பரமேஸ்வரன் நகர் பகுதியில் வசிக்கும்

குடியிருப்பு வாசிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டத்தில் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கிட ஆட்சேபனை ஏதும் இல்லை'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–8, கோட்டம்–102 (பழைய மண்டலம்–5, வார்டு–69)–இல் எழும்பூர் கிராமம் புல எண்.84/3ல் உள்ள நிலம் 1962 ஆம் ஆண்டிலேயே மெட்ராஸ் அவுசிங் யூனிட்டுக்கு நில மாற்றம் செய்யப்பட்டதாக நிலம் மற்றும் உடைமைத்துறையின் நிரந்தர நிலப்பதிவேட்டில் பதிவுகள் உள்ளதால், தற்போது மேற்படி நிலத்திற்கு மறுப்பின்மை சான்றிதழ் வழங்க தேவை எழவில்லை என கருதப்படுவதால். அதனை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்க ஆணையரின் உத்தரவு வேண்டி 26.06.2012 அன்று குறிப்பு கோப்பு அனுப்பப்பட்டது. அக்குறிப்பு கோப்பில் கூடுதல் ஆணையர் (வ(ம)நி) Madras Housing Unit க்கு மாற்றப்பட்டதற்கான ஆவணம் கோப்பில் உள்ளதா ? என வினவியதோடு நிலப் பதிவேட்டில் இப்போதும் மாநகராட்சியின் பெயர் இருப்பதால் கூர்ந்து ஆய்வு செய்யவும் என ஆணையிட்டுள்ளார்.

புல எண்.84/3–இல் உள்ள மேற்குறிப்பிட்ட நிலத்தை நில உரிமை மாற்றம் செய்து ஒப்படைப்பு செய்தமைக்கான 1962 ஆம் வருடத்திய ஆவணங்கள் பரிசீலனை செய்ததில் அதற்கான ஒப்புதல் கடிதம் ஏதும் இல்லை என சார் –ஆய்வாளரின் குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் அனுப்பிய கடிதத்துடன் இணைத்து அளிக்கப்பட்டுள்ள பரமேஸ்வரன் நகர் குடியிருப்புகள் அமைந்து உள்ள நிலத்தின் பதிவுகள் பின்வருமாறு உள்ளன.

| PLR/TSLR SLIP | |
|---|---|
| Volume | CORPORATION REGISTER |
| Register Page Number | 185 |
| Village | EGMORE |
| Block No. | - |
| T.S. / R.S.No | 84/3 |
| Old Survey No | - |
| Door no. & Street Name | Halls Road |
| Classification | CORPORATION PUBLIC |
| Extent | 17.17.0591 |
| Assessment | |
| R.H/ Adangal | - |
| Description of Field | - |
| Remarks/Shara | "vide collector RDIS 4978/68, dated 20.07.1968 and TK 81/122/66"<br>Govt. memo 29379, 4/57 – 6A/5 – 10-57 Collector A3-30322/57 –TK-B2-576/60 alienation of L&R Sanctioned House sites for Harijans and eligible school sites, play grounds shop site G.O.Ms.2967 Read 27.10.52 Collector A3-12234-52-B1-6038-52 |

மேற்குறிப்பிட்டுள்ள புலத்தில் குடியிருக்கும் குடிசைவாசிகளுக்கு இலவச வீட்டுமனை திட்டத்தின் கீழ் பட்டா வழங்க மறுப்பின்மை சான்று வழங்கலாமா என்பது குறித்து முதன்மை செயலர் / ஆணையரின் மேலான உத்தரவு வேண்டி கோப்பு 21.03.2013 அன்று அனுப்பப்பட்டது. அக்குறிப்புக் கோப்பில் கூடுதல் ஆணையர்(வமநி) (பொ) விதிமுறைப்படி 'A' அல்லது 'B' என்றவாறு பரிந்துரை செய்து ஆணையாளருக்கு வைக்கவும் என ஆணையிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்டுள்ள எழும்பூர் கிராமம், புல எண்.**84/3–**இல் அடங்கியுள்ள **17** காணி **17** மனை **591** ச.அடி பரப்புள்ள நிலம் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றின் முந்தைய அமைப்பான மெட்ராஸ் அவுசிங் யூனிட்டுக்கு நில மாற்றம் செய்யப்பட்ட போதிலும், அது தொடர்பான பதிவு மாநகராட்சி நிலம் மற்றும் உடைமைத்துறையின் நிலப் பதிவேடு தவிர பிற அரசு துறைகளின் (த.நா.கு.மா.வாரியம், வருவாய்த் துறை) பதிவேடுகளில் இல்லை என்பதால் மேற்படி நிலத்தில் வாழும் ஆதிதிராவிட குடியிருப்புவாசிகளுக்கு அரசாணை எண்.**854** வருவாய் துறை, நாள்–**31.12.2006** இன்படி இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க ஏதுவாக மேற்படி நிலத்தை சென்னை மாநகராட்சி உரிமையை துறப்பு செய்வதற்கும் அது குறித்து மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்புவதற்கும் **8**வது மண்டல வார்டுகுழு தீர்மானம் பின்னேற்புக்குட்பட்டு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.07.2013** அன்று தீர்மான எண். **317/2013**,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2053/2011**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.470/2013 பொருள் எண்.45

**மண்டலம்–14 உள்ள வணிக வளாகங்களில் புதிய சந்தை விலை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி**

மண்டலம்–14க்கு உட்பட்ட வணிக வளாக கடைகளுக்கு வசூலிக்கப்பட்டு வரும் வாடகை மிக குறைவாக உள்ளதால் சந்தைவிலை அடிப்படையில் புதிய வாடகை நிர்ணயம் செய்ய மண்டல அலுவலர்–14 அவர்களை கோரப்பட்டது.

மண்டல அலுவலர்–14 அவர்களின் குறிப்புடன் மண்டலம்–14ல் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி வணிகவளாகங்களுக்கு, கீழ்கண்டவாறு புதிய மாத வாடகை நிர்ணயம் செய்ய 14வது வார்டு குழுவில் (தீர்மான எண். 191, நாள் 8.3.2012) பெறப்பட்ட தீர்மான நகல் அனுப்பப்பட்டுள்ளது.

| வ.எண். | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடைகளின் எண்ணிக்கை | கடையின் பரப்பளவு | சந்தை விலைப்படி ஒரு சதுர அடி வீதம் வாடகை | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 01. | உள்ளகரம் புழுதிவாக்கம் | 6 | 143 ச.அடி | 25 | ரூ. 3575/– |
| 02. | பெருங்குடி (கந்தன்சாவடி) பழைய வளாகம் | 20 | 100 ச.அடி | 50 | ரூ. 5000/– |
| 03. | பெருங்குடி (கந்தன்சாவடி) புதிய வளாகம் | 20 | 120 ச.அடி | 50 | ரூ. 6000/– |
| 04. | மடிப்பாக்கம் | 8 | 120 ச.அடி | 25 | ரூ. 3000/– |
| 05. | பள்ளிக்கரணை வேளச்சேரி | 12 | 100 ச.அடி | 50 | ரூ. 5000/– |
| 06. | துலுக்காணத்தம்மன் தெரு | 24 | 100 ச.அடி | 40 | ரூ. 4000/– |

மேற்குறிப்பிட்ட 14வது மண்டல வார்டு குழு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளபடி மண்டலம்–14ல் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி வணிக வளாக கடைகளுக்கு புதிய சந்தைவிலை வாடகை நிர்ணயம் செய்ய நிலைக்குழு (விரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 319/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘வரிசை எண்–1 மற்றும் 4ல் உள்ள குறிப்பிட்ட கடைகளுக்கு சதுர அடிக்கு ரூ.25/– என்பதற்கு பதிலாக சதுர அடிக்கு ரூ.40/– என நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’.

**பா.து.ந.க.எண்.பி3/616/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையரின் அவர்களின் 22.7.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.471/2013 **பொருள் எண். 46**

**அம்பத்தூர் இரயில்வே சந்திக்கடவு எண்.6 பதிலாக புதிதாக பாதசாரிகள் சுரங்கப்பாதை கட்ட அனுமதி**

துணை தலைமை பொறியாளர் (கட்டுமானம்) தென்னக இரயில்வே அவர்கள் அம்பத்தூர் இரயில்வே சந்திக்கடவு எண்–6 பதிலாக புதிதாக பாதசாரிகள் சுரங்கப்பாதை கட்டுவதற்கு ஒப்புதல் கோரியுள்ளார். அதற்கான வரைபடத்தையும் அளித்துள்ளார். மேலும், அம்பத்தூர் இரயில்வே சந்திக்கடவு எண்–6ற்கு பதிலாக அம்பத்தூர் பணிமனைக்கு முடிவில் இரயில்வே மேம்பாலம் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளதால் பொதுமக்கள் இந்த அம்பத்தூர் இரயில்வே சந்திக்கடவு எண்–6ஐ அகற்றிவிட்டு அங்கு புதிதாக ஒரு பாதசாரிகள் சுரங்கப்பாதை கட்டிதருமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இரயில்வே துறை இச்சந்திக்கடவை அகற்றிவிட்டு புதிதாக 3.6மீ அகலமும், 2.1 மீ உயரமும் கொண்ட பாதசாரிகள் சுரங்கப்பாதை மற்றும் அதற்கான சரிவு பாதையை (ramp) அம்பத்தூர் பணிமனையில் அமைப்பதற்கு இரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, இப்பணியை மேற்கொள்ள சென்னை மாநகராட்சியின் ஒப்புதலும் மற்றும் பணியை மேற்கொள்ள இசைவு கோரியுள்ளார்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், இப்பாதசாரிகள் சுரங்கப்பாதை மற்றும் அதற்கான சரிவு பாதை ஒன்று இரயில்வே பகுதியிலும் மற்றொரு சரிவு பாதை சென்னை மாநகராட்சி பகுதியிலும் அமைந்துள்ளது. மேலும், இரயில்வே மேம்பாலம் வெகு அருகிலேயே அமைந்துள்ளதால், இந்த சந்திக்கடவில் ஒரு பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைப்பது உகந்ததாகும்.

எனவே,

1. அம்பத்தூர் இரயில்வே சந்திக்கடவு எண்–6 பதிலாக புதிதாக பாதசாரிகள் சுரங்கப்பாதை கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கவும்,
2. இரயில்வே துறை இந்த சந்திக்கடவில் சென்னை மாநகராட்சி பகுதியில் பாதசாரிகள் சுரங்கப்பாதையின் சரிவு பாதை அமைக்கும்போது, சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் மேற்பார்வையில் மேற்கொள்ள நிபந்தனை விதிக்கவும்,
3. இப்பணிக்கான விரிவான வரைபடத்தை சென்னை மாநகராட்சி ஒப்புதல் பெற்ற பிறகே இரயில்வே துறை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும்

இப்பணியை இரயில்வே துறை நடைமுறைப்படுத்த நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 285/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 325/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.க.எண்.பி2/2195/2007**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 22.7.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.472/2013 **பொருள் எண். 47**

**மண்டலம் – 5, வார்டு –59ல் உள்ள பிராட்வே பேருந்து நிலையத்திற்குள் தானியங்கி பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணி திருவாளர்கள் IVRCL Assets & Holding Ltd., க்கு பணியாணை வழங்கப்பட்டது – ஒப்பம் ரத்து செய்ய அனுமதி**

மண்டலம் – 5, வார்டு –59ல் உள்ள பிராட்வே பேருந்து நிலையத்திற்குள் தானியங்கி பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணி திருவாளர்கள் IVRCL Assets & Holding Ltd., க்கு வழங்கப்பட்டது. அதன்படி, அவர்கள் சென்னை மாநகராட்சியுடன் உடனபடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களினால் பணி தொடங்கப்படவில்லை.

இந்நிலையில், கண்டுள்ள மேலாண் இயக்குநர், சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது, பிராட்வே பேருந்து நிலையத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மேற்பரப்பில் 176 சதுர மீட்டரும், பூமிக்கு அடியில் 888சமீ மற்றும் தற்காலிக நிலம் 816 சமீ அளவு நிலத்தினை G.O.M.S No.129, Planing, Department and Special Initiatives (SI) Dept நாள்: 27.08.2010ன் படி மற்றும் தற்காலிகமாக 665 சமீ நிலத்தினை G.O.M.S No.140. Planing, Department and Special Initiatives (SI) Dept நாள்: 08.08.2011ன் படி, உயர்நீதி மன்றம் பெருநகர் நிலையம் (High Court Metro Station) அமைக்கும் பணிக்காக சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட்க்கு நில மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உயர்நீதி மன்ற பகுதியில் பணிகள் சரியாக நடைபெற்று வருகிறது. தற்போது, இத்திட்டப் பணி தடைறின்றி நடைபெறுவதற்கு பிராட்வே பேருந்து நிலையத்தின் நிலம் அவசியமாக தேவைப்படுகிறது. மேலும், மாநகர போக்குவரத்து கழகத்தினர் இப்பேருந்து நிறுத்தத்தை பிரேசர் பஜார் சாலை மற்றும் ரட்டன் பஜார் சாலையில் ஆறு மாதங்களுக்கு மாற்ற ஒப்பு கொண்டுள்ளனர்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், மண்டலம்–5 வார்டு–59ல் உள்ள பிராட்வே பேருந்து நிலையத்திற்குள் தானியங்கி பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைப்பதற்கான சாத்திக்கூறுகள் தற்பொழுது இல்லாததால், இப்பணியினை கைவிடாலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1) மண்டலம்–5, வார்டு–59ல் உள்ள பிராட்வே பேருந்து நிலையத்திற்குள் தானியங்கி பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணிக்காக திருவாளர்கள் IVRCL Assets & Holding Ltd., அவர்களுக்கு வழங்கப்பட பணி ஆணையை ரத்து செய்யவும்,
2) இப்பணிக்காக ஒப்பந்தாரர் வழங்கிய பிணை வைப்புத் தொகையை திருப்பி அளிக்கவும்,
3) மெட்ரோ இரயில் பணிக்கு இடம் போக மீதமுள்ள இடத்தில் பேருந்து நிலையத்திற்கு இடையூறு இல்லாமல் தானியங்கி பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்க கலந்தரிதற்குறியவர் (Consultant) நியமிக்க ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)ன் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 293/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 332/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மநீகூ.து.ந.க.எண்.பி4/1091/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.473/2013 **பொருள் எண்: 48**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JnNURM) – மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்வதற்கு TUFIDCO நிறுவனத்தின் மூலம் பெருநகர உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதி திட்டத்தின் (MIDF) கீழ் கடனுதவி பெற அனுமதி**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (JnNURM) கீழ் சென்னை மாநகராட்சி மற்றும் பொதுப்பணித் துறையால் நான்கு நீர்தேக்கப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய் திட்ட பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ.**1447.91** கோடியாகும்.

இதில் **35** விழுக்காடு மைய அரசின் மான்யம் ரூ.**506.77** கோடி மற்றும் **15** விழுக்காடு மாநில அரசின் வட்டியில்லா கடன் ரூ.**217.19** கோடி.

இத்திட்டத்தில் சென்னை மாநகராட்சி பணிக்கான திட்ட ஒதுக்கீட்டுத் தொகை ரூ.**814.88** கோடியாகும். இதில் நகர்புற உள்ளாட்சியின் பங்கு **50** விழுக்காடு ரூ.**407.44** கோடியாகும்.

இதன்படி, தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மூலம் ரூ.**150** கோடி தொகையை மாறுபட்ட வட்டி விகிதத்தில் **8.50** விழுக்காடு பெறுவதற்கு மன்றத்தின் தீர்மான எண்.**449/2009**, நாள்.**30.11.2009** மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டு கழகத்தின் (TUFIDCO) நிதி நிறுவனம் அளித்துள்ள திருத்திய கடன் அனுமதியின்படி, பெருநகர உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதி திட்டத்தின் M.I.D.F. கீழ் ரூ.**100.00** கோடிக்கு பதிலாக ரூ.**203.72** கோடிக்கான கடன் உதவிதியை **4** விழுக்காடு வட்டி விகிதத்தில் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளது.

இக்கடனை பெறுவதற்கு தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டு கழகத்தின் (TUFIDCO) கேட்டுக் கொண்டுள்ள மாதிரி படிவத்தில் உள்ளபடி கீழ்காணும் **1** முதல் **4** இனங்களுக்கு (ஆங்கிலம் மற்றும் தமிழ்) நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**Format for Council Resolution (As prescribed by TUFIDCO)**

- Resolved that Chennai Corporation Council is authorizing the authorized signatory to borrow the loan of Rs.203.72 crores at an interest rate of 4% per annum repayable within a period of 15 years under the MIDF Scheme for the project Improvement of Storm Water Drain in Four Basins of Chennai at an estimated cost of Rs.1447.91 crores as per the terms and conditions prescribed by TUFIDCO.

| Sl. No. | Name of the Project | Estimated Cost | Chennai Corporation component | MIDF Loan |
|---|---|---|---|---|
| | | (Rs. in Crores) | | |
| 1 | Improvements of Storm Water Drains in the Central Basin of Chennai Sch.No. M 1011 - 034 | 345.00 | 261.11 | 65.28 |
| 2 | Improvements of Storm Water Drains in the Eastern Basin of Chennai Sch.No. M 0809 – 032 | 444.07 | 140.40 | 35.10 |
| 3 | Improvements of Storm Water Drains in the Southern Basin of Chennai Sch.No. M 0809 – 030 | 298.98 | 136.20 | 34.05 |
| 4 | Improvements of Storm Water Drains in the Northern Basin of Chennai Sch.No. M 1011 - 033 | 359.86 | 277.17 | 69.29 |
| | **TOTAL** | **1447.91** | **814.88** | **203.72** |

- The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formailities including the affixing of the common seal of the Chennai Corporation on the documents to be executed with TUFIDCO on behalf of Chennai Corporation.
- Resolved to repay the loan assistance from MIDF scheme as per the repayment schedule in the agreement.
- Resolved that Chennai Corporation is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Corporation's annual budget for the repayment of principal and interest for this projects to TUFIDCO and confirms that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.

**மன்றத்தீர்மானம் (TUFIDCO மாதிரி படிவம்)**

- தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டு கழகத்தின் (TUFIDCO) நிதி நிறுவனம் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ள கீழ்கண்ட நான்கு நீர்த்தேக்கப் பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ.**1447.91** கோடி **25** விழுக்காடு கடன் தொகையாக ரூ.**203.72** கோடி தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டு கழகத்தின் MIDF நிதியின் கீழ் ஆண்டிற்கு **4** விழுக்காடு வட்டி விகிதத்தில் **15** ஆண்டு காலம் திருப்பி செலுத்தும் வகையில் வரைமுறை மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு கடன் பெற்றிட முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கவும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டுத் தொகை | சென்னை மாநகராட்சியின் பங்கு | MIDF நிதி |
|---|---|---|---|---|
| | | (ரூ.கோடியில்) | | |
| 1 | மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டு பணிகள் மத்திய நீர்த்தேக்கப் பகுதி Sch.No. M 1011-034 | **345.00** | **261.11** | 65.28 |
| 2 | மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டு பணிகள் கிழக்கு நீர்த்தேக்கப்பகுதி Sch.No.M 0809 -032 | **444.07** | **140.40** | 35.10 |
| 3 | மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டு பணிகள் தெற்கு நீர்த்தேக்கப்பகுதி Sch.No.M 0809 – 030 | **298.98** | **136.20** | 34.05 |
| 4 | மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டு பணிகள் வடக்கு நீர்த்தேக்கப்பகுதி Sch.No.M 1011-033 | **359.86** | **277.17** | 69.29 |
| **மொத்தம்** | | **1447.91** | **814.88** | **203.72** |

- சென்னை மாநகராட்சி சார்பாக TUFIDCO நிதி நிறுவனத்துடன் கடன் தொகைக்கான உடன்படிக்கை மற்றும் ஆவணங்கள் சென்னை மாநகராட்சி பொது முத்திரையிடுதல் ஆகிய அனைத்து நடைமுறைகளையும் இந்நிதி நிறுவனத்துடன் செயல்படுத்துவதற்கு மாமன்றம் ஆங்கிகரிக்கப்பட்ட அலுவலர் முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கவும்.
- சென்னை மாநகராட்சி சார்பாக MIDF நிதியின் கீழ் பெறப்படும் கடன் தொகையினை உடன்படிக்கையில் கூறியுள்ளவாறு திரும்ப செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கவும்.

• TUFIDCO நிதி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டு திட்டப்பணிகளுக்கு பெறப்படும் கடன் தொகையினை திருப்பி செலுத்த வருடாந்திர வரவு செலவு திட்டத்தில் தேவையான ஒதுக்கீடு செய்வதற்கும் சென்னை மாநகராட்சி மாமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கவும்.

எனவே, TUFIDCO நிறுவனத்தின் கடிதங்களின்படி ரூ.203.72 கோடி கடனுதவி 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் மேற்கூறிய நிபந்தனைகளுக்குட்பட்டு கடன் பெறுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 289/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ''

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 328/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 4301– A/2011</u>**

**<u>முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 22.7.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.474/2013 **பொருள் எண். 49**

**சென்னை மாநகராட்சி – இயந்திரப் பொறியியல் துறை – சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தும் பணிக்காக 10 மண்டலங்களில் இருந்து 15 மண்டல அலுவலகங்களாக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டதால் – 11 எண்ணிக்கைகளில் முன்பின் பளு தூக்கும் இயந்திரம் பொருத்திய லோடர் வாகனங்கள் ( Front end Loader with back hoe attachment ) – கொள்முதல் செய்தல் – மறு ஒப்பம் கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த – திருவாளர்கள். எஸ்கார்ட்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் எக்யுப்மெண்ட் லிமிடெட் நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய மன்ற அனுமதி பெற்று ஆணை வழங்கப்பட்டது – குறித்த கால அவகாசம் அளிக்கப்பட்டு வாகனம் வழங்காத நிலையில் இவ்வொப்பம் நிராகரித்து பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மறு ஒப்பம் கோரப்பட்டது – மறு ஒப்பத்தில் குறைந்த விலை அளித்த திருவாளர்கள். டெல்கோ கன்ஸ்ட்ரக்ஷன் எக்யூப்மெண்ட் கம்பெனி லிமிடெட் தற்போது பெயர்மாற்றம் செயப்பட்டுள்ள டாடா இட்டாச் கன்ஸ்ட்ரக்ஷன் மெஷினரி கம்பனி லிமிடட் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய –அனுமதி.**

*******

சென்னை மாநகராட்சி, ஏற்கனவே இருந்த 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர மீட்டர்களாக விரிவாக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும் தரமான துப்புரவு பணியை மேற்கொள்ள வேண்டி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய முடிவெடுக்கப்பட்டது. முதற்கட்டமாக, காம்பெக்டர்கள், லாரிகள், லோடர்கள், எக்ஸ்கவேட்டர் கிராப்பிள்கள் மற்றும் இயந்திரப் பெருக்கிகள் ஆகியன, மக்கள் தொகை மற்றும் சேகரிக்கப்படும் குப்பை ஆகியவற்றை கணக்கில் கொண்டு திடக்கழிவு மேலாண்மைத் துறையின் வழிகாட்டுதலுடன் இறுதியாக்கம் செய்யப்பட்டன. இக்கொள்முதலுக்கான அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி, ஆணையரிடமிருந்து 2.12.2011 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

இதுகுறித்து, விரிவான குறிப்பு மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இக்கொள்முதலுக்கு அரசின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி ஒப்பம் கோரி முடிவெடுக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

இதன்படி, 30.12.2011 அன்று திறக்கப்பட்ட ஒப்பத்தில் குறைந்த விலை அளித்த ஒப்பதாரர் திருவாளர்கள். எஸ்கார்ட்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் எக்யுப்மெண்ட் லிமிடெட், அவர்களுக்கு மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கொள்முதல் ஆணை வழங்கப்படும் நிலையில் முதன்மை செயலர் மற்றும் ஆணையர், அவர்களுடன் உடன்படிக்கை செய்துக் கொள்ள வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், அவர்கள் லோடர்ஸ் சப்ளை செய்ய CST–5% குறிப்பிட்டுள்ளதாகவும், VAT-14.5% குறிப்பிடவில்லை என்றும், அதற்கான அரசு வரிவிலக்கு (Input Certificate) பெற்று தரும்படி கோரி, சென்னை மாநகராட்சியை வற்புறுத்திக் கொண்டிருந்தனர். இக்கோரிக்கையை, அவர்கள், 28.02.2012 தேதியிட்ட, இப்பணியை விசுவாசத்துடன் மேற்கொள்ளும் பொருட்டு, ஆணையருடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டி அனுப்பப் பெற்ற லெட்டர் ஆப் இன்டென்ட் –க்கு பிறகு அளித்தனர். அவ்வாறு அவர்களுக்கு விலக்கு அளிக்கும் பட்சத்தில், அவர்கள் குறைந்த விலை அளித்த முதல் நிலையை இழக்கிறார்கள். ஆகவே, மீண்டும் அவர்கள் அளித்த விலைக்கேற்றவாறே, ஆணையருடன் உடன்படிக்கை மேற்கொள்ள கடிதம் அனுப்பப்பட்டது. பலமுறை அனுப்பப்பட்ட நினைவூட்டு கடிதங்களுக்கு பின்னரும், அவர்கள் உடன்படிக்கை மேற்கொள்ளாமல் மீண்டும் மீண்டும் சென்னை மாநகராட்சியை அரசு வரிவிலக்கு பெற்று தரும்படியே வற்புறுத்தி வந்தனர்.

கால தாமதம் ஆவதால், ஒப்ப விதிகளின்படி, திருவாளர்கள். எஸ்கார்ட்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் எக்யுப்மெண்ட் லிமிடெட்–க்கு, அவர்கள் அளித்த EMD தொகையை சென்னை மாநகராட்சியே பிடித்தம் செய்து கொள்ளவும், அவர்கள் மேல் தக்க தனி நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்து, மறு ஒப்பம் கோர முடிவெடுக்கப்பட்டது. இதன்படி, ஆணையர் அவர்கள் மூலம் திருவாளர்கள். எஸ்கார்ட்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் எக்யுப்மெண்ட் லிமிடெட் நிறுவனத்தின் மீது கருப்பு பட்டியலில் சேர்க்கவும், அவர்கள் அளித்த EMD தொகையை சென்னை மாநகராட்சியில் பிடித்தம் செய்யவும் ஆணை வேண்டி முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு தனியே குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

11 எண்ணிக்கைகளில் முன்பின் பளு தூக்கும் இயந்திரம் பொருத்திய லோடர் வாகனங்கள் (Front end Loader with back hoe attachment) கொள்முதல் செய்ய ஆங்கில நாளிதழ், தமிழ் நாளிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர், ஆகியவற்றில் ஒப்ப அறிவிப்பு அறிவிக்கப்பட்டது. மேலும், இவ்வொப்ப படிவங்கள் இலவச இறக்கம் செய்து கொள்ளும்பொருட்டு, கணினியில் ஏற்றம் செய்யப்பட்டன.

இவ்வொப்பம் 28.09.2012 அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் கலந்த கொண்ட1) திருவாளர்கள். B.E.M.L. லிமிடெட் , 2) திருவாளர்கள். டெல்கோ கன்ஸ்ட்ரக்ஷன் எக்யூப்மெண்ட் கம்பெனி லிமிடெட்

மற்றும் 3) திருவாளர்கள். TRR Automotive ஆகிய நிறுவனங்கள் ஒப்ப வைப்பு தொகையை செலுத்தியும் தகுதி சான்றிதழ்கள் இணைத்தும் ஒப்பத்தில் தகுதி பெற்றனர்.

இம்மூன்று நிறுவன ஒப்பங்களும், ஒப்ப சீராய்வு குழுவினரால், தொழில்நுட்ப ரீதியில் தகுதியானவை என சான்றளிக்கப்பட்டபின் ஒப்ப விலைப்புள்ளிகள் (Financial Bids) 04.10.2012 அன்று திறக்கப்பட்டன. இவ்வொப்பத்தில் இம்மூன்று நிறுவனங்களும் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகளை அளித்துள்ளார்கள்.

| Sl. No. | Name of the Contractor | Price of 11nos. Front End Loader with Back hoe attachment including all Taxes, Insurance and other charges Rs. | |
|---|---|---|---|
| | | Cost of Each Front End Loader with Back hoe attachment | Total amount for 11 Nos. Front End Loader with Back hoe attachment |
| 1. | M/s. B.E.M.L. Ltd | 22,19,250 | 2,44,11,750 |
| 2. | M/s., TRR Automotive | 20,29,700 | **2,23,26,700** |
| 3. | M/s. Telco Constructions Equipment Company Ltd | **19,75,485** | **2,17,30,335** |

மேற்கண்ட ஒப்ப நோக்குப் பட்டியலின்படி, திருவாளர்கள். Telco Construction Equipment Co. Ltd., அவர்கள் ஒரு எண்ணிக்கை முன்பின் பளு தூக்கும் இயந்திரம் பொருத்திய லோடர் வாகனம் (Front end Loader with back hoe attachment) (Model TATA 315 E) ரூ. 19,75,485/– வீதம் 11 எண்ணிக்கைகள் முன்பின் பளு தூக்கும் இயந்திரம் பொருத்திய லோடர் வாகனங்களுக்கான மொத்தம் ரூ.2,17,30,335/– என குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளனர். அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு பதிலளிக்கும் வகையில் அவர்கள் தங்களது 06.10.2012 தேதியிட்ட கடிதம் வாயிலாக, ஒரு உபகரணத்திற்கு ரூ.15,485/- குறைத்து, ஒரு எண்ணிக்கை **ரூ.19,60,000/-** வீதம் 11 எண்ணிக்கைகளுக்கு ரூ.2,15,60,000/- என குறைந்த விலை அளித்தனர்.

ஒரு வாகனத்தின் விலை ரூ. 19,60,000/– வீதம் மொத்தம் 11 எண்ணிக்கை முன்பின் பளு தூக்கும் இயந்திரம் பொருத்திய லோடர் (Front end Loader with back hoe attachment) (Model TATA 315 E) வாகனங்களின் விலை ரூ.2,15,60,000/– (ரூபாய் இரண்டு கோடியே பதினைந்து இலட்சத்து அறுபது ஆயிரம் மட்டும்) ஆகும்.

மேற்கண்ட இச்செலவினத் தொகையை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்திடமிருந்து பெறப்பட்டுள்ள நிதியிலிருந்து கொள்முதல் செய்யவும் பரிந்துரைக்கப்படுகிறது.

இவ்வாகனங்களுக்கான நிரந்தரப்பதிவு தகுதி சான்றிதழ், சாலை வரி, மற்றும் காப்பீடு ஆகியவைகளை திருவாளர்கள். Telco Construction Equipment Co. Ltd. நிறுவனம் மேற்கொண்டபின் அதற்கான உரிய செலவு சீட்டுகளை ஒப்படைக்கும் பட்சத்தில் அத்தொகையை அவர்களுக்கு ஒப்ப விதிகளின்படி திருப்பி வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்நிலையில் திருவாளர்கள். டெல்கோ கன்ஸ்ட்ரக்ஷன் எக்யூப்மெண்ட் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தினர் தங்களது 13.12.2012 நாளிட்ட கடிதத்தில் தங்களது நிறுவனம் பெயர் மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் டாடா இட்டாச்சி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மெஷினரி கம்பெனி லிமிடெட் (Tata Hitachi construction Machinery Company Limited (THCM) என்ற பெயரிலேயே அனைத்து பரிவர்த்தனையும் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளனர். இதற்கான ஆவணங்களையும் இணத்து அளித்துள்ளனர். எனவே திருவாளர்கள். டெல்கோ கன்ஸ்ட்ரக்ஷன் எக்யூப்மெண்ட் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தினரின் பெயர் மாற்றத்தை ஏற்று மாற்றப்பட்ட பெயரில் பணியாணை வழங்க ஆணை வேண்டி சட்ட அலுவலர் மூலமாக முதன்மை செயலர் / ஆணையர் அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் சட்ட அலுவலர் அவர்கள் கீழ்கண்ட புதிய ஆவணங்களை திருவாளர்கள். டெல்கோ கன்ஸ்ட்ரக்ஷன் எக்யூப்மெண்ட் கம்பெனி லிமிடெட் (THCM) அவர்களிடமிருந்து பெற வேண்டும் என தெரிவித்துள்ளார்கள்.

1. தற்போதைய நிறுவனத்தின் புதிய – Certificate of incorporation.
2. Certificate of Registration.
3. New Cetificate from Registered Charted Accountants.
4. New Solvency Certificate.
5. Permanent Account Number of the new Company.
6. A new agreement.

அதன்படி, மேற்கண்ட ஆவணங்களை திருவாளர்கள். Tata Hittachi Construction Machinery Co.limited நிறுவனத்திடமிருந்து பெற்று கோப்பு மீள சமர்ப்பிக்கப்பட்டதில் சட்ட அலுவலர் அவர்கள் மேற்கண்ட நிறுவனம் உரிய முறையில் பெயர் மாற்றம் செய்துள்ளனரா அவ்வாறு பெயர் மாற்றம் செய்யலாமா மற்றும் Standard Charter Bankers Solvency Certificate ஒப்பத்திற்கு போதுமானதா / சரியானதா மற்றும் அது செல்லும் தன்மை குறித்து நிதி ஆலோசகர் கருத்துரு பெற்று கோப்பின் மீது மேல் நடவடிக்கை எடுக்க கருத்துரு வழங்கியுள்ளார்கள்.

அதன்படி, சட்ட அலுவலர் குறிப்பின் அடிப்படையில் நிதி ஆலோசகர் கருத்துரு வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளனர்.

1. ஒப்பத்தில் ஒரு பெயரில் கலந்து கொண்டு அது நடைமுறையில் உள்ள போது அவசியமென நிறுவனத்தின் பெயரினை மாற்றம் செய்திட வேண்டி நிறுவனத்தால் முடிவெடுக்கப்பட்ட நிலையில், சரியான முறையில் ( பெயர் மாற்றத்திற்கு ஆதாரமான அனைத்து சான்றுகளுடன் ) நிறுவனத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அதனை ஏற்கலாம்,

2. “Standard Chartered” வங்கியிலிருந்து 15.2.2013 நாளில் பெறப்பட்ட “Solvency Certificate”With Authrorised Signatury போதுமானதாக உள்ளது. மேலும் அதன் சரித்தன்மை இந்திய அரசு பதிவு பெற்ற நோட்டரி ( Notary) மற்றும் வழக்கறிஞர் மூலம் சான்றறிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சரியானதெனக் கருதலாம்.

3. இந்நிறுவனம் திருவாளர்கள். டாடா இட்டாச்சி ( M/s. Tata Hitachi Construction Machinery Company) என 23.11.2012 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டமைக்கு உரிய சான்றுகள் ( நடப்பு கோப்பு ( தொகுதி –3) பக்க எண். 921 முதல் 939 முடிய) மற்றும் பக்க எண். 953 முதல் 957 முடிய) அந்நிறுவனத்தால் அளிக்கப்பட்டதாலும், அளிக்கப்பட்ட சான்றிதழ்கள்யாவும் இந்திய அரசு பதிவு பெற்ற நோட்டரி மற்றும் வழக்கறிஞரால் சான்றளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சரியான முறைப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கருதலாம்.

4. Letter of Authorization. 28/11/2012 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்ட M/s. Tata Hitachi Construction Machinery Company Registered office @ Bangalore – லிருந்து நாளது தேதியில் சென்னையில் உள்ள விற்பனை கிளை அலுவலக குறியீடு எண் மற்றும் முழு முகவரியுடன் குறிப்படப்பட்டு உரிய உயர் அலுவலர்களால் ஒப்பிடப்படல் வேண்டுமென கோரிப் பெற்றிட உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுமென கோரப்படுகிறது.

வரிசை எண். 4ல் தெரிவித்துள்ளவாறு Letter of Authorisation பெயர் மாற்றம் செய்யப்பட்ட Tata HItachi Construction Machinery Company Registered Office @ Bagalore இடமாற்றம் பெறக்கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். டெல்கோ கன்ஸ்ட்ரக்ஷன் எக்யூப்மெண்ட் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தாரரின் பெயர் மாற்றத்தை ஏற்று திருவாளர்கள். ‘‘டாடா இட்டாச்சி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மெஷினரி கம்பெனி லிமிடெட் ( Tata Hitachi Construction Machinery Company Limited ( ( THCM) என்கின்ற நிறுவனத்தின் பெயரில் பணி ஆணை வழங்கலாம் என கருத்து தெரிவித்து கோப்பு ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி சட்ட அலுவலர் மூலமாக சமர்ப்பிக்கப்பட்டதில், சட்ட அலுவலர் அவர்கள் 05.04.2013 நாளிட்ட குறிப்பில் திருவாளர்கள் எஸ்கார்ட்ஸ் நிறுவனத்தாரின் மீது ஆணையரின் ஆணை பெற்ற பின்பு கோப்பினை மீள சமர்ப்பிக்குமாறு தெரிவித்ததன் அடிப்படையில் திருவாளர்கள் எஸ்கார்ட்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் எக்யுப்மெண்ட் லிமிடெட் நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட பணி ஆணை ரத்து செய்தும் இந்நிறுவனத்தாரை சென்னை மாநகராட்சி ஒப்பங்களில் மூன்று ஆண்டுகளுக்கு கலந்துகொள்வதிலிருந்து தடை செய்தும் மற்றும் அந்நிறுவனத்தார் வழங்கிய பிணைவைப்பு தொகையை சென்னை மாநகராட்சி கணக்கில் கொண்டுவரவும் முதன்மைசெயலர்/ஆணையர் அவர்களின் 07.05.2013 நாளிட்ட ஆணை பெறப்பட்டு அதன் நகல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, மறு ஒப்பம் கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனமான டாடா இட்டாச்சி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மெஷினரி கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்தின் பெயரில் 11 எண்ணிக்கையிலான முன் பின் பளுதூக்கும் இயந்திரங்கள் பொருத்திய லோடர் வாகனங்கள் கொள்முதல் செய்ய கோப்பு உயர் மட்ட ஒப்ப குழுவிற்கு 12.06.2013 அன்று சமர்ப்பிக்கப்பட்டதில், டாடா இட்டாச்சி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மெஷினரி கம்பெனி லிமிடெட் நிறுவனத்தாரிடம் மேலும் விலை குறைப்பு செய்து கோப்பினை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இதன்படி டாடா இட்டாச்சி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மெஷினரி கம்பெனி லிமிடெட் நிறுவனத்தாருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன் பின்னர் திருவாளர்கள். டாடா இட்டாச்சி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மெஷினரி கம்பெனி லிமிடெட் நிறுவனத்தார் 19.06.2013 நாளிட்ட கடிதத்தில் ஒரு வாகனத்தின் விலையாக ரூ.19,39,661/–க்கு விலைக்குறைப்பு செய்து கடிதம் சமர்ப்பித்துள்ளனர். மேலும் இவ்வொப்பம் செல்லத்தக்க காலத்தினை 31.07.2013 வரை நீடிப்பு செய்து கடிதம் சமர்ப்பித்துள்ளனர்.

இக்கோப்பு **16.7.2013** அன்று நடைப்பெற்ற ஒப்பக்குழுவின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பக்குழு இதனை சீராய்வு செய்து **11** எண்ணிக்கையில் முன்பின் பளுதூக்கும் இயந்திரம் பொருத்திய லோடர் வாகனங்கள், ஒரு வாகனத்தின் விலை ரூ. **19,39,661/–** வீதம் **11** வாகனங்கள் ரூ. **2,13,36,271/–** க்கு கொள்முதல் செய்ய பரிந்துரை செய்துள்ளது.

எனவே, திருவாளர்கள். டாடா இட்டாச்சி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மெஷினரி கம்பெனி லிமிடெட் நிறுவனத்தாரிடமிருந்து **11** எண்ணிக்கையிலான முன் பின் பளுத்தூக்கும் இயந்திரம் பொருத்திய ஒரு லோடர் வாகனத்தின் விலை ரூ.**19,39,661/–** வீதம் **11** லோடர் வாகனங்களின் மொத்த விலையான ரூ.**2,13,36,271/–**க்கு கொள்முதல் செய்யவும் ஆணை வேண்டப்படுகிறது.

1. விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு தேவையான **11** எண்ணிக்கை முன்பின் பளுதூக்கும் இயந்திரம் பொருத்திய லோடர் வாகனங்கள் பணியின் அவசர அவசியத்தை கருதி கொள்முதல் செய்வதற்கான கோரப்பட்ட மறு ஒப்பத்திற்கு பின்னேற்பு அனுமதி வழங்கவும்,
2. இவ்வொப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த வாகன உற்பத்தியாளரான திருவாளர்கள். Telco Construction Equipment Co. Ltd இனிவரும் காலங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட திருவாளர்கள். Tata HITACHI CONSTRUCTION MACHINERY COMPANY LIMITED நிறுவனத்திடமிருந்து முன்பின் பளு தூக்கும் இயந்திரம் பொருத்திய லோடர் (Front end Loader with back hoe attachment) (Model TATA 315 E) வாகனம் ஒன்றுக்கு ரூ.**19,39,661/–** வீதம் **11** எண்ணிக்கைகளின் மொத்த தொகையாக ரூ.**2,13,36,271/–**க்கு (ரூபாய் இரண்டு கோடியே பதிமூன்று இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்றி எழுத்தி ஒன்று மட்டும்) கொள்முதல் செய்யவும்,
3. ஏற்கப்படின், திருவாளர்கள். Telco Construction Equipment Co. Ltd இனிவரும் காலங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட திருவாளர்கள். Tata HITACHI CONSTRUCTION MACHINERY COMPANY LIMITED நிறுவனத்தினருக்கு பணியாணை வழங்கவும்,
4. திருவாளர்கள். Telco Construction Equipment Co. Ltd இனிவரும் காலங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட திருவாளர்கள். Tata HITACHI CONSTRUCTION MACHINERY COMPANY LIMITED நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் **2** சதவீகிதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,
5. வாகனங்கள் சென்னை மாநகராட்சி ஆணையரின் பெயரில் நிரந்தர பதிவு செய்து பணப்பட்டி பெறப்பட்டவுடன் மொத்த கொள்முதல் விலையில் **80** சதவிகிதம் வழங்கவும்,
6. எஞ்சியுள்ள வாகன மொத்த தொகையின் **20** சதவிகித தொகையை, வாகனம் இயக்கப்பட்ட நாளிலிருந்து **30** நாட்களுக்குப் பிறகு வாகன செயல்திறன் திருப்திகர சான்றிதழ் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டபின் வழங்கவும்,
7. வாகனங்களின் நிரந்தரப் பதிவு, தகுதி சான்றிதழ், சாலை வரி, மற்றும் காப்பீடு ஆகியவைகளை மேற்கொண்டபின், இவைகளுக்கான உரிய செலவு சீட்டுகள் திருவாளர்கள். Telco Construction Equipment Co. Ltd இனிவரும் காலங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட திருவாளர்கள். Tata HITACHI CONSTRUCTION MACHINERY COMPANY LIMITED நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டபின், அத்தொகையை திருப்பி வழங்கவும்,
8. மேற்கண்ட இச்செலவீனத் தொகையை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டமிடமிருந்து பெறப்பட்டுள்ள நிதியிலிருந்து வழங்கவும்,

எனவே, மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.07.2013** அன்று தீர்மான எண். **290/2013**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ”

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.07.2013** அன்று தீர்மான எண். **329/2013**–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.7.ந.க.எண்.இ1/4144/01/2013**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23.7.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.475/2013 **பொருள் எண்.50**

**மண்டலம் –7(அம்பத்தூர்) சென்னை பெரு நகர வளர்ச்சித் திட்டம் 1வது கட்டம் மீதத்தொகை ("சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்"–கட்டம்–1) சென்னை விரிவாக்கப் பகுதிகளில் உள் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது– சிப்பம்–1 ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டம் கட்டம் –Iன் மீதத்தொகைக்கு பணிகள் மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.366.23 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மண்டலம்–7 (அம்பத்தூர்)ல் 22.79 கி.மீ. நீளமுள்ள 170 சாலைகளுக்கு ரூ.14.95 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 3 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மதிப்பீடுகள் சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது. இதன்விவரம் பின்வருமாறு.

**சிப்பம் 1 – ( 60 சாலைகள்–ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள் )**

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 7, வார்டு 79 முதல் 82 வரை உள்ள 60 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி தோராய அலுவலக மதிப்பு ரூ.923 இலட்சங்கள்.

இதில் சிப்பம் 1–க்கு 10.05.2013–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

10.05.2013 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. திருவாளர்கள். தியாகராஜன் எண்டர்பிரைசஸ்
2. திரு. கே.கே.ராகவன்
3. திரு. ஆர். ராமராவ்
4. திருவாளர்கள். T.J.ஆறுமுகம் அண்டு கோ
5. திருவாளர்கள்.ஆர்.கே. அண்டு சன்ஸ்

பெறப்பட்ட ஐந்து ஒப்பங்களில் அவர்களுடைய தொழில் நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில் திரு.கே.கே.ராகவன், திரு.ஆர்.ராமராவ் மற்றும் திருவாளர்கள்.ஆர்.கே. அண்டு சன்ஸ் ஆகிய மூவருடைய ஒப்பங்களும் ஏற்கப்படவில்லை. மற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்களும் ஏற்கப்பட்டன. பின்னர் ஒப்பத் தொகை ஆவணங்கள் 14.05.2013 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

| வ எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டு தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ. | ஒப்பத் தொகை ரூ. | ஓப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். தியாகராஜன் எண்டர்பிரைசஸ் | 9,22,73,001.88 | 9,07,04,164.71 | (–) 1.70% குறைவு |
| 2 | திருவாளர்கள். T.J.ஆறுமுகம் அண்டு கோ | 9,22,73,001.88 | 8,84,10,641.07 | (–) 4.19% குறைவு |

சிப்பம்–1க்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

திருவாளர்கள்.T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்கள் 14.05.2013 நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே திருவாளர்கள். T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களின் ஒப்பத்தொகை ரூ.8,84,10,641.07/–( ரூபாய் எட்டு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஒன்று மற்றும் ஏழு பைசா மட்டும் )ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம்

ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–) 4.19 சதவீதம் குறைவாகும். இதனை 04.05.2013 அன்றைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 7.38 சதவீதம் குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள். T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 4.19 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.8,84,10,641.07/–( ரூபாய் எட்டு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஒன்று மற்றும் ஏழு பைசா மட்டும் )க்கு பணியை வழங்க ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர், மண்டல அலுவலர்–7 அவர்களால் பொருள் நிரல் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

இந்த ஒப்பந்தப்புள்ளியானது இரண்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களின் ஒப்பத்தொகை ரூ.8,84,10,641.07/–( ரூபாய் எட்டு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஒன்று மற்றும் ஏழு பைசா மட்டும் ) ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களை 14.05.2013 அன்றைய நாளிட்ட கடிதம் மூலம் விலைகுறைப்பு செய்ய கோரப்பட்டது. இதற்கு திருவாளர்கள்.T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்கள் வழங்கியுள்ள 14.05.2013 நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். இது 2012–13 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலுக்கு (–) 4.19 சதவீதம் மட்டும் குறைவாகும். இதனை 04.05.2013 அன்று சந்தை விலையோடு ஒப்பிடுகைளில் (–) 7.38 சதவீதம் குறைவாகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த தொகையானது ஏற்றுக் கொள்ள தக்க நிலையில் உள்ளது. சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 4.19 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.8,84,10,641.07/–( ரூபாய் எட்டு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஒன்று மற்றும் ஏழு பைசா மட்டும் )க்கு அவர்கள் அளித்த ஒப்பத்தை ஏற்று பணியினை வழங்க ஒப்பக்குழும கூட்டம் பரிந்துரை செய்தது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 4.19 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.8,84,10,641.07/–( ரூபாய் எட்டு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஒன்று மற்றும் ஏழு பைசா மட்டும் )க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் பரிந்துரை செய்துள்ளார்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.T.J.ஆறுமுகம் அண்டு கோ அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 4.19 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.8,84,10,641.07/–( ரூபாய் எட்டு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஒன்று மற்றும் ஏழு பைசா மட்டும் )க்கு பணியினை அளிக்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 291/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 330/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.7.ந.க.எண்.இ1/4144/02/2013**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23.7.13 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.476/2013 **பொருள் எண்.51**

**மண்டலம் –7(அம்பத்தூர்) சென்னை பெரு நகர வளர்ச்சித் திட்டம் 1வது கட்டம் மீதத்தொகை (''சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்''–கட்டம்–1) சென்னை விரிவாக்கப் பகுதிகளில் உள் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது– சிப்பம்–2 ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ''சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்'' என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டம் கட்டம் –ஐன் மீதத்தொகைக்கு பணிகள் மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.1495.08 இலட்சங்களில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மண்டலம்–7 (அம்பத்தூர்)ல் 22.79 கி.மீ. நீளமுள்ள 170 சாலைகளுக்கு ரூ.14.95 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 3 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மதிப்பீடுகள் சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது. இதன்விவரம் பின்வருமாறு.

**சிப்பம் 2 – ( 110 சாலைகள்–ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள் )**

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 7, வார்டு–86 மற்றும் 93ல் உள்ள 110 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி தோராய அலுவலக மதிப்பு ரூ.572.35 இலட்சங்கள்

இதில் சிப்பம் 2–க்கு 10.05.2013–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

10.05.2013 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. திருவாளர்கள்.பாஸ் இன்பிரா ஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்
2. திருவாளர்கள். சசி கன்ட்ரக்ஷன்
3. திருவாளர்கள். ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ்
4. திரு. எம்.ரங்கநாதன்
5. திரு. ஆர்.ராமராவ்
6. திரு. பி.பாஸ்கரன்
7. திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா எண்டர்பிரைசஸ்
8. திருவாளர்கள். எஸ்.பி.எல். இன்பிரா ஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்
9. திருவாளர்கள். எஸ்.எம். எண்டர்பிரைசஸ்

பெறப்பட்ட ஒன்பது ஒப்பங்களில் அவர்களுடைய தொழில் நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில் திரு.பி.பாஸ்கரன், திருவாளர்கள்.பாஸ் இன்பிரா ஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட், திருவாளர்கள். எஸ்.எம். எண்டர்பிரைசஸ், திரு.ஆர்.ராமாராவ் மற்றும் திருவாளர்கள்.சசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் திரு.எம்.இரங்கநாதன் ஆகிய ஆறு ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பங்களும் ஏற்கப்படவில்லை. மற்ற மூன்று ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்களும் ஏற்கப்பட்டன. பின்னர் ஒப்பத் தொகை ஆவணங்கள் 14.05.2013 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

| வ எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டு தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ. | ஒப்பத் தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் | 5,72,34,587.65 | 5,36,38,926.00 | (–) 6.28% குறைவு |
| 2 | திருவாளர்கள். எஸ்.பி.எல். இன்பிராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 5,72,34,587.65 | 6,24,31,788.00 | (+) 9.08% அதிகம் |
| 3 | திருவாளர்கள்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 5,72,34,587.65 | 5,43,92,043.95 | (–) 4.97% குறைவு |

சிப்பம்–2க்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்கள் **14.05.2013** நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**5,36,38,926.00/–**(ரூபாய் ஐந்து கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு மட்டும்) ஆகும். இவ்வொப்பத் தொகையானது **2012–2013** ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட **(–) 6.28** சதவீதம் குறைவாகும். இதனை சந்தை விலையான **04.05.2013** அன்றைய விலையுடன் ஒப்பிடுகையில் **(–) 8.11** சதவீதம் குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு **2012–13** ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட **(–) 6.28** சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.**5,36,38,926.00/–**(ரூபாய் ஐந்து கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு மட்டும்)க்கு பணியை வழங்க ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர், மண்டல அலுவலர்–7 அவர்களால் பொருள் நிரல் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

இந்த ஒப்பந்தப்புள்ளியானது மூன்று தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**5,36,38,926.00/–**(ரூபாய் ஐந்து கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு மட்டும்) ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களை **14.05.2013** அன்றைய நாளிட்ட கடிதம் மூலம் விலைகுறைப்பு செய்ய கோரப்பட்டது. இதற்கு திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்கள் வழங்கியுள்ள **14.05.2013** நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். இது **2012–13** ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலுக்கு **(–) 6.28** சதவீதம் மட்டும் குறைவாகும். இதனை **04.05.2013** அன்று சந்தை விலையோடு ஒப்பிடுகைளில் **(–) 8.11** சதவீதம் குறைவாகும். குறைந்த பணிக்காலமான **3** மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த தொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 6.28 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.5,36,38,926.00/–(ரூபாய் ஐந்து கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு மட்டும்)க்கு அவர்கள் அளித்த ஒப்பத்தை ஏற்று பணியினை வழங்க ஒப்பக்குழும கூட்டம் பரிந்துரை செய்தது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 6.28 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.5,36,38,926.00/–(ரூபாய் ஐந்து கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு மட்டும்)க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் அளித்துள்ளார்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.ஸ்ரீ தியாகராஜன் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 6.28 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.5,36,38,926.00/–(ரூபாய் ஐந்து கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு மட்டும்)க்கு பணியினை அளிக்க மாமன்றத்தின் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 292/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 331/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.நீ.கூ.து.ந.க.எண்.பி5/2187/2009**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.477/2013 **பொருள் எண்:52**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதி – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி**

இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பங்கள் பெறப்பட்டு **26.05.2010** அன்று திருவாளர்கள் ஆர்.ஏ.யூ.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு **16.06.2010** அன்று பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நடைபெறுகிறது. பணிகள் முடிக்க வேண்டிய காலம் 24 மாதங்கள், அதாவது **15.06.2012**ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும். மேலும், மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் காரணமாக இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு **6** மாதங்கள் கால நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டது. இதன்படி, **15.12.2012**ற்குள் பணி முடிவடையும் காலமாகும்.

இரயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைப்பு பணிகளின் போது அதிகப்படியான கம்பிவடங்கள் கம்பங்கள் மின் இணைப்பு பெட்டிகள் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள், தொலைபேசி கம்பிவடங்கள் சாலை போக்குவரத்து நெரிசல், போக்குவரத்து துறையினர் இரவு நேரங்களில் மட்டும் பணி செய்ய அனுமதி, குறுகலான பகுதிகளில் கான்கீரிட் லாரிகள் செல்ல இயலாததால், மணல் தட்டுப்பாடு மற்றும் மழைக்காலங்களில் ஊற்று தண்ணீர் மற்றும் கழிவுநீர் அதிக அளவில் தேங்குவதாலும் மோட்டர் பம்ப் கொண்டு இறைத்து பணிகளை தொடர்ந்து செய்ய தாமதமாதம் ஏற்பட்டதால் மன்றத்தீர்மானத்தின்படி, மேற்கண்ட பணிக்கு, மேலும் **6** மாத கால காலத்திற்கு **15.06.2013** வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கடிதத்தில், இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதி பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளதாகவும், பழைய சிறைச்சாலை பகுதிக்கு காவல் துறையின் அனுமதி பெற காலதாமதம் ஏற்பட்டதால், இப்பணிகளை முடிப்பதற்கு **2** மாத கால நீட்டிப்பு கோரியுள்ளார்.

இதன் குறித்து சமர்ப்பிப்பது யாதெனில்,

- ஒப்பந்ததாரர் ஏற்கனவே ஒரு முறை பணிக்கால நீட்டிப்பு கோரியுள்ளார். பணிக்கால நீட்டிப்பு கோரும்போது ஒப்பந்ததாரர் முன்னரே பணி தாமதத்திற்கான காரணங்களை ஆராய்ந்து அதனடிப்படையில் **5** காரணங்களையும் கூறி பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து தருவதாக உறுதி அளித்தார். இதனடிப்படையில் **6** மாதங்கள் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது.
- வேறு எந்த ஒப்பந்ததாரர் போலவே, இந்த ஒப்பந்ததாரரும் தன் சொந்த விருப்பத்தின் பெயரிலேயே ஒப்பந்த்தில் கலந்து கொண்டு ஒப்ப விதிகளையும், பணியின் தன்மையையும் அதில் உள்ள சிரமங்களையும் நன்றாக ஆராய்ந்து குறிப்பிட்ட அளவு பணியினை, குறிப்பிட்ட அளவு தொகையில், குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடித்து தருவதாக ஒப்ப உடன்படிக்கை நிறைவேற்றியுள்ளர்.
- **2**வது பத்தியில் குறிப்பிட்டுள்ள கருத்துகளை தவிர்த்து முதல் பத்தியில் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள காரணங்களை பணிவுடன் ஏற்று பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டபோது ஒப்பந்ததாரர் கூறிய காரணங்களை நன்றாக ஆராய்ந்து தொழில்நுட்ப ரீதியில் முடிவெடுக்கப்பட்டது.
- சென்னை மாநகராட்சி ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒப்பந்ததாரரால் மீண்டும் பழைய காரணங்கள் மற்றும் புதிய காரணங்களை சேர்த்து பணி நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது. இது ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப பற்றாக்குறையும், மிக முக்கிய நிகழ்வான மழைநீர் வடிகால் கட்டும் பணியை ஒரு பொருட்டாக கருதாத தன்மையும் வெளிப்படுகிறது.
- இதனடிப்படையில் இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். ''இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது''. மேலும், இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும்.

மேற்கூறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில், இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடியும் நிலையில் உள்ளதனால் பழைய சிறைச்சாலை பணிகள் மேற்கொள்வதற்கு காவல் துறையின் அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருவதாலும், திருவாளர்கள் ஆர்.ஏ.யூ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு **16.06.2013** முதல் இரண்டு மாத காலத்திற்கு **15.08.2013** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

- திருவாளர்கள் ஆர்.ஏ.யூ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், இராயபுரம் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் செய்து முடிப்பதற்கு **16.06.2013** முதல் **15.08.2013** வரை இரண்டு மாத காலத்திற்கு இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,
- இராயபுரம் மழைநீர் வடிகால் பணிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் நிறைவேற்றப்படாததற்காக ஒப்பந்ததாரர் மீது விதிக்க வேண்டிய (Liquidated damages) அபராதத் தொகைக்கு **15.06.2013** வரை விலக்கு அளிக்கவும், மற்றும்
- மீதமுள்ள ஒப்பப் பணிகளுக்கு ஒப்ப விதிகளில் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) **15.06.2013** தேதியில் நிர்ணயம் செய்யவும்.

இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட கால நீட்டிப்பு வழங்கி இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். “இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இவ்விவரத்தினை தமிழ்நாடு அரசு பொதுத்துறைக்கு தகவல் தெரிவிப்பதுடன், அரசு சார்ந்த துறை, அரசு சார்ந்த அமைப்புகள் மற்றும் மற்ற மாநில அரசுகளுக்கும் / மத்திய அரசுக்கும் தெரிவிக்கப்படும். மேலும், இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும்.

எனவே, மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.07.2013** அன்று தீர்மான எண். **288/2013**, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ”

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.07.2013** அன்று தீர்மான எண். **327/2013**,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.கூ.து.ந.க.எண்.பி5/2188/2009**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.478/2013 **பொருள் எண்:53**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – பணி கால நீட்டிப்புவழங்க அனுமதி**

வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பங்கள் பெறப்பட்டு 05.03.2010 அன்று திருவாளர்கள் சிவா இன்ஜீனியரிங் கம்பெனி அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு 07.05.2010 அன்று பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நடைபெறுகிறது. பணிகள் முடிக்க வேண்டிய காலம் 20 மாதங்கள் ஆகும். மேலும், மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் காரணமாக வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஆறு மாத கால நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டது. இதன்படி, 06.01.2013ற்குள் பணி முடிவடையும் காலமாகும்.

வடக்கு பக்கிங்காம் கால்வாய் மழைநீர் வடிகால்வாய் அமைப்பு பணிகளின் போது அதிகப்படியான மின்சார கம்பிவடங்கள் கம்பங்கள், மின் இணைப்பு பெட்டிகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள் இணைப்புகள், தொலைபேசி கம்பிவடங்கள் போன்ற தடங்களினாலும் போக்குவரத்து துறையினர் இரவு நேரங்களில் மட்டும் பணி செய்ய அனுமதி போன்ற காரணங்களினாலும், குறுகலான சாலைகளில் கான்கீரிட் லாரிகள் செல்ல இயலாததாலும், இப்பகுதி தாழ்வான பகுதி என்பதால், மழை காலங்களில் மழைநீர் கால்வாய் பள்ளங்களில் ஊற்று தண்ணீர் மற்றும் கழிவுநீர் அதிக அளவில் தோங்குவதாலும், மன்றத்தீர்மானத்தின்படி, மேற்கண்ட பணிக்கு, மேலும் 6 மாத கால காலத்திற்கு 06.07.2013 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் கடிதத்தில், வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மின்வாரியத்தின் கம்பிவடங்கள் மற்றும் தளவாடங்கள் தொலைபேசி கம்பிவடங்கள் மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள் மாற்றி அமைக்க வேண்டி இருப்பதாலும், போக்குவரத்து நேரிசல் உள்ள பகுதிகளில் போக்குவரத்து காவல் துறையினர் இரவு நேரங்களில் மட்டும் வேலை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும், மழைநீர் கால்வாய் அமைக்கும் இடங்களில் கழிவுநீர் அதிக அளவில் வருவதால் அதை மாற்று பாதையில் அமைத்து பணி செய்யவேண்டிய நிலை இருப்பதாலும், இப்பணியினை விரைவாக முடிக்க மேலும் ஆறு மாதங்கள் கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

- ஒப்பந்ததாரர் ஏற்கனவே இரண்டு முறை பணிக்கால நீட்டிப்பு கோரியுள்ளார். பணிக்கால நீட்டிப்பு கோரும்போது ஒப்பந்ததாரர் முன்னரே பணி தாமதத்திற்கான காரணங்களை ஆராய்ந்து அதனடிப்படையில் முதல் முறை 7 காரணங்களையும் கூறி பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து தருவதாக உறுதி அளித்தார். இதனடிப்படையில் இறுதி பணி கால நீட்டிப்பாக 6 மாதங்கள் வழங்கப்பட்டது.
- வேறு எந்த ஒப்பந்ததாரர் போலவே, இந்த ஒப்பந்ததாரரும் தன் சொந்த விருப்பத்தின் பெயரிலேயே ஒப்பந்த்தில் கலந்து கொண்டு ஒப்ப விதிகளையும் பணியின் தன்மையையும் அதில் உள்ள சிரமங்களையும் நன்றாக ஆராய்ந்து குறிப்பிட்ட அளவு பணியினை குறிப்பிட்ட அளவு தொகையில் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடித்து தருவதாக ஒப்ப உடன்படிக்கை நிறைவேற்றியுள்ளார்.
- 2வது பத்தியில் குறிப்பிட்டுள்ள கருத்துகளை தவிர்த்து முதல் பத்தியில் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள காரணங்களை பணிவுடன் ஏற்று இறுதியான பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த இறுதி நீட்டிப்பு வழங்கப்பட்டபோது ஒப்பந்ததாரர் கூறிய காரணங்களை நன்றாக ஆராய்ந்து தொழில்நுட்ப ரீதியில் முடிவெடுக்கப்பட்டது.
- சென்னை மாநகராட்சி ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒப்பந்ததாரரால் மீண்டும் பழைய காரணங்கள் மற்றும் புதிய காரணங்களை சேர்த்து பணி நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது. இது ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப பற்றாக்குறையும், மிக முக்கிய நிகழ்வான மழைநீர் வடிகால் கட்டும் பணியை ஒரு பொருட்டாக கருதாத தன்மையும் வெளிப்படுகிறது.
- இதனடிப்படையில் இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். “இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும். எனெனில் மேற்கூறிய காரணங்களே போதுமானதாகும்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் மேற்கொள்வதற்கு திருவாளர்கள் சிவா இன்ஜீனியரிங் கம்பெனி அவர்களுக்கு **07.07.2013** முதல் மூன்று மாத காலத்திற்கு **30.09.2013** வரை இறுதியாக பணி கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

- திருவாளர்கள் சிவா இன்ஜீனியரிங் கம்பெனி அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் செய்து முடிப்பதற்கு **07.07.2013** முதல் **30.09.2013** வரை மூன்று மாத காலத்திற்கு இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,
- வடக்கு பக்கிங்காம் கால்வாய் மழைநீர் வடிகால் பணிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் நிறைவேற்றப்படாததற்காக ஒப்பந்ததாரர் மீது விதிக்க வேண்டிய (Liquidated damages) அபராதத் தொகைக்கு **06.07.2013** வரை விலக்கு அளிக்கவும், மற்றும்
- மீதமுள்ள ஒப்பப் பணிகளுக்கு ஒப்ப விதிகளில் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) **06.07.2013** தேதியில் நிர்ணயம் செய்யவும்.

இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் அறிவுறுத்தலின்படி **15.07.2013** அன்று நடைபெற்ற காலந்தாய்வு கூட்டத்தில், ஒப்பந்ததாரர் **30.09.2013**க்குள் பணியினை முடித்துவிடுவதாக ஒப்புக்கொண்டதில் அடிப்படையில் **30.09.2013** வரை இறுதியாக கால நீட்டிப்பு வழங்கி இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். ‘‘இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இவ்விவரத்தினை தமிழ்நாடு அரசு பொதுத்துறைக்கு தகவல் தெரிவிப்பதுடன், அரசு சார்ந்த துறை, அரசு சார்ந்த அமைப்புகள் மற்றும் மற்ற மாநில அரசுகளுக்கும் / மத்திய அரசுக்கும் தெரிவிக்கப்படும். மேலும், இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும்.

எனவே, மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.07.2013** அன்று தீர்மான எண். **283/2013**, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.07.2013** அன்று தீர்மான எண். **323/2013**,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.கூ.து.ந.க.எண்.பி4/2190/2009</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.479/2013 **பொருள் எண்:54**

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி</u>**

தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பங்கள் பெறப்பட்டு 05.05.2010 அன்று திருவாளர்கள் ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு 10.06.2010 அன்று பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நடைபெறுகிறது. பணிகள் முடிக்க வேண்டிய காலம் 24 மாதங்கள், அதாவது 09.06.2012ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும். மேலும், மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் காரணமாக தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஆறு மாத கால நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டது. இதன்படி, 09.12.2012ற்குள் பணி முடிவடையும் காலமாகும்.

தெற்கு பக்கிங்காம் கால்வாய் மழைநீர் வடிகால்வாய் அமைப்பு பணிகளின் போது அதிகப்படியான மின்சார கம்பிவடங்கள் கம்பங்கள், மின் இணைப்பு பெட்டிகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள் இணைப்புகள், தொலைபேசி கம்பிவடங்கள் போன்ற தடங்களினாலும் போக்குவரத்து துறையினர் இரவு நேரங்களில் மட்டும் பணி செய்ய அனுமதி போன்ற காரணங்களினாலும், குறுகலான சாலைகளில் கான்கீரிட் லாரிகள் செல்ல இயலாததாலும், இப்பகுதி தாழ்வான பகுதி என்பதால், மழை காலங்களில் மழைநீர் கால்வாய் பள்ளங்களில் ஊற்று தண்ணீர் மற்றும் கழிவுநீர் அதிக அளவில் தேங்குவதாலும், மன்றத்தீர்மானத்தின்படி, மேற்கண்ட பணிக்கு, மேலும் 6 மாத கால காலத்திற்கு 30.06.2013 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது ஒப்பந்ததாரர் 84 சதவீத பணிகளை முடித்துள்ளனர்.

ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கடிதத்தில், தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க குறுகலான பாதைகளாக இருப்பதால் இப்பணிகளை 15மீ நீளத்திற்கு பகுதி பகுதியாக மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், இப்பகுகளில் அதிகப்படியான கம்பிவடங்கள் கம்பங்கள் மின் இணைப்பு பெட்டிகள் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள், தொலைபேசி கம்பிவடங்கள் இருப்பதாலும், இப்பணியினை முடிப்பதற்கு 6 மாத கால நீட்டிப்பு கோரியுள்ளார்.

- ஒப்பந்ததாரர் ஏற்கனவே ஒரு முறை பணிக்கால நீட்டிப்பு கோரியுள்ளார். பணிக்கால நீட்டிப்பு கோரும்போது ஒப்பந்ததாரர் முன்னரே பணி தாமதத்திற்கான காரணங்களை ஆராய்ந்து அதனடிப்படையில் 4 காரணங்களையும் கூறி பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து தருவதாக உறுதி அளித்தார். இதனடிப்படையில் 7 மாதங்கள் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது.
- வேறு எந்த ஒப்பந்ததாரர் போலவே, இந்த ஒப்பந்ததாரரும் தன் சொந்த விருப்பத்தின் பெயரிலேயே ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு ஒப்ப விதிகளையும், பணியின் தன்மையையும், அதில் உள்ள சிரமங்களையும் நன்றாக ஆராய்ந்து குறிப்பிட்ட அளவு பணியினை, குறிப்பிட்ட அளவு தொகையில், குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடித்து தருவதாக ஒப்ப உடன்படிக்கை நிறைவேற்றியுள்ளார்.
- 2வது பத்தியில் குறிப்பிட்டுள்ள கருத்துகளை தவிர்த்து முதல் பத்தியில் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள காரணங்களை பணிவுடன் ஏற்று பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டபோது ஒப்பந்ததாரர் கூறிய காரணங்களை நன்றாக ஆராய்ந்து தொழில்நுட்ப ரீதியில் முடிவெடுக்கப்பட்டது.
- சென்னை மாநகராட்சி ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒப்பந்ததாரரால் மீண்டும் பழைய காரணங்கள் மற்றும் புதிய காரணங்களை சேர்த்து பணி நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது. இது ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப பற்றாக்குறையும், மிக முக்கிய நிகழ்வான மழைநீர் வடிகால் கட்டும் பணியை ஒரு பொருட்டாக கருதாத தன்மையும் வெளிப்படுகிறது.
- இதனடிப்படையில் இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். “இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் மேற்கொள்வதற்கு திருவாளர்கள் ஆர்.பி.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 01.07.2013 முதல் ஐந்து மாத காலத்திற்கு 30.11.2013 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

- திருவாளர்கள் ஆர்.பி.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் செய்து முடிப்பதற்கு 01.07.2013 முதல் 30.11.2013 வரை ஐந்து மாத காலத்திற்கு இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,
- தெற்கு பக்கிங்காம் கால்வாய் மழைநீர் வடிகால் பணிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் நிறைவேற்றப்படாததற்காக ஒப்பந்ததாரர் மீது விதிக்க வேண்டிய (Liquidated damages) அபராதத் தொகைக்கு 30.06.2013 வரை விலக்கு அளிக்கவும், மற்றும்
- மீதமுள்ள ஒப்பப் பணிகளுக்கு ஒப்ப விதிகளில் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 01.07.2013 தேதியில் நிர்ணயம் செய்யவும்.

இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் அறிவுறுத்தலின்படி 15.07.2013 அன்று நடைபெற்ற காலந்தாய்வு கூட்டத்தில், ஒப்பந்ததாரர் 30.11.2013க்குள் பணியினை முடித்துவிடுவதாக ஒப்புக்கொண்டதில் அடிப்படையில் 30.11.2013 வரை இறுதியாக கால நீட்டிப்பு வழங்கி இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். ‘‘இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இவ்விவரத்தினை தமிழ்நாடு அரசு பொதுத்துறைக்கு தகவல் தெரிவிப்பதுடன், அரசு சார்ந்த துறை, அரசு சார்ந்த அமைப்புகள் மற்றும் மற்ற மாநில அரசுகளுக்கும் / மத்திய அரசுக்கும் தெரிவிக்கப்படும். மேலும், இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும்.

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 281/2013ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண்.321/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.கூ.து.ந.க.எண்.பி5/1901/2010</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.480/2013 **பொருள் எண்:55**

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம்–6 – வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. **814.88** கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி **06.07.2009** அன்று பெறப்பட்டு **12** நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.**774.60** கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு **12** நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி, சிப்பம் **6** – வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு **04.01.2011** அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பக்காலம் **24** மாதங்கள், அதாவது **03.01.2013**ற்குள் வரையாகும்.

சிப்பம் **6** – வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததாலும் இப்பணிகளுக்கு ஜுன்' **2013** வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாடு செய்வதற்கு மன்றத்தீர்மானத்தின்படி, மேற்கண்ட பணிக்கு, மேலும் **6** மாத கால காலத்திற்கு **30.06.2013** வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் கடிதத்தில், சிப்பம் **6** – வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணியிடங்களில் நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, போக்குவரத்துத்துறையின் அனுமதி, சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் கழிவுநீர் தொடர்ச்சியாக செல்வது, மற்றும் மின்சார கம்பிவடங்கள் இடையூறுகள் போன்ற காரணங்களுக்காக இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பணிக்கு கால நீட்டிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாலும், அடையாறு நீர்ப்பிடிப்பு பணிகளுக்கு டிசம்பர்' **2013** வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதாலும் மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுற்கும் கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததாலும் அடையாறு நீர்ப்பிடிப்பு பணிகளுக்கு டிசம்பர்' **2013** வரை காலநீட்டிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு **01.07.2013** முதல் **31.12.2013** வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 6 வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு 01.07.2013 முதல் 31.12.2013 வரை ஆறு மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 284/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ''

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 324/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.கூ.து.ந.க.எண்.பி4/2192/2009**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.481/2013 **பொருள் எண்:56**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதி – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி**

வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பங்கள் பெறப்பட்டு 05.03.2010 அன்று திருவாளர்கள் ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்‌ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு 26.04.2010 அன்று பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நடைபெறுகிறது. பணிகள் முடிக்க வேண்டிய காலம் 24 மாதங்கள், அதாவது 25.04.2012ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும். மேலும், மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் காரணத்திற்காக 6 மாத காலத்திற்கும், உள்ளாட்சி தேர்தல் மற்றும் 2012ம் ஆண்டு பருவமழை காரணமாக 5 மாத காலத்திற்கும் வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதிக்கு முறையாக 11 மாத கால நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டது. இதன்படி, 25.03.2013ற்குள் பணி முடிவடையும் காலமாகும்.

வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதியில் ராஜ்பவன் கால்வாயில் இருபுறமும் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிகள் நடைபெற்று வந்ததாலும், பெருங்குடி இரயில் நிலையம் அருகில் கல் குட்டையிலிருந்து பள்ளிக்கரணை சதுப்புநிலம் வரை 1500மீ நீளத்திற்கு பிரதான மழைநீர் வடிகால்வாய் அமைக்க இடம் இல்லாததால் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் இரயில்வேக்கு வழங்கப்பட்ட உள்வட்ட சாலை வழியாக கொண்டு செல்ல சர்வே செய்யப்பட்டதற்கான காலதாமதம் ஏற்பட்டதாலும், கக்கன் நகர் பிரதான சாலை மற்றும் நேதாஜி நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால்வாயில் கழிவு நீர் தொடர்ச்சியாக செல்வதால் இக்கால்வாய் பணி நிறுத்திவைக்கப்பட்டு துவங்கப்பட்டதற்கான கால தாமதமாதம் ஏற்பட்டதால் மன்றத்தீர்மானத்தின்படி, மேற்கண்ட பணிக்கு, மேலும் 3 மாத கால காலத்திற்கு 25.06.2013 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

தற்போது ஒப்பந்ததாரர் 95 சதவீத பணிகளை முடித்துள்ளார். மேலும், 1200மீ நீளம் உள்ள ராஜ்பவன் கால்வாயில் 1000மீக்கு பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 200மீ நீளத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. 1500மீ நீளமுள்ள உள்வட்ட சாலை பணிகளில் 1400மீ முடிக்கப்பட்டுள்ளது, பெருங்குடி இரயில் நிலையம் அருகில் டிரன்ஸ்பார்மர் மாற்றியமைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் பணிகள் தடைப்பட்டது, தற்போது மீதமுள்ள 100மீ நீளத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. கக்கன் நகர் பிரதான சாலையில் கழிவுநீர் தொடர்ச்சியாக செல்வதால் மீதுமுள்ள பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படுகிறது.

ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கடிதத்தில், வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பணிகளை முடிப்பதற்கு மேலும் மூன்று மாத கால நீட்டிப்பு கோரியுள்ளார்.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில்,

- ஒப்பந்ததாரர் ஏற்கனவே இரண்டு முறை பணிக்கால நீட்டிப்பு கோரியுள்ளார். பணிக்கால நீட்டிப்பு கோரும்போது ஒப்பந்ததாரர் முன்னரே பணி தாமதத்திற்கான காரணங்களை ஆராய்ந்து அதனடிப்படையில் முதல் முறை 7 காரணங்களையும் மற்றும் இரண்டாவது முறை 5 காரணங்களையும் கூறி பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து தருவதாக உறுதி அளித்தார். இதனடிப்படையில் முதல் முறை 5 மாதங்கள் மற்றும் இரண்டாவது முறை 3 மாதங்களுக்கும் பணிக்கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.
- வேறு எந்த ஒப்பந்ததாரர் போலவே, இந்த ஒப்பந்ததாரரும் தன் சொந்த விருப்பத்தின் பெயரிலேயே ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு ஒப்ப விதிகளையும், பணியின் தன்மையையும், அதில் உள்ள சிரமங்களையும் நன்றாக ஆராய்ந்து குறிப்பிட்ட அளவு பணியினை, குறிப்பிட்ட அளவு தொகையில், குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடித்து தருவதாக ஒப்ப உடன்படிக்கை நிறைவேற்றியுள்ளார்.
- 2வது பத்தியில் குறிப்பிட்டுள்ள கருத்துகளை தவிர்த்து முதல் பத்தியில் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள காரணங்களை பணிவுடன் ஏற்று பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டபோது ஒப்பந்ததாரர் கூறிய காரணங்களை நன்றாக ஆராய்ந்து தொழில்நுட்ப ரீதியில் முடிவெடுக்கப்பட்டது.
- சென்னை மாநகராட்சி ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒப்பந்ததாரரால் மீண்டும் பழைய காரணங்கள் மற்றும் புதிய காரணங்களை சேர்த்து பணி நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது. இது ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப பற்றாக்குறையும், மிக முக்கிய நிகழ்வான மழைநீர் வடிகால் கட்டும் பணியை ஒரு பொருட்டாக கருதாத தன்மையும் வெளிப்படுகிறது.

• இதனடிப்படையில் இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். ''இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் இருப்பதாலும் திருவாளர்கள் ஆர்.பி.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 26.06.2013 முதல் மூன்று மாத காலத்திற்கு 25.09.2013 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

1) திருவாளர்கள் ஆர்.பி.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், வேளச்சேரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் செய்து முடிப்பதற்கு 26.06.2013 முதல் 25.09.2013 வரை மூன்று மாத காலத்திற்கு இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,
2) வேளச்சேரி மழைநீர் வடிகால் பணிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் நிறைவேற்றப்படாததற்காக ஒப்பந்ததாரர் மீது விதிக்க வேண்டிய (Liquidated damages) அபராதத் தொகைக்கு 25.06.2013 வரை விலக்கு அளிக்கவும், மற்றும்
3) மீதமுள்ள ஒப்பப் பணிகளுக்கு ஒப்ப விதிகளில் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 25.06.2013 தேதியில் நிர்ணயம் செய்யவும்.

இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட இறுதியான கால நீட்டிப்பு வழங்கி இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். ''இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இவ்விவரத்தினை தமிழ்நாடு அரசு பொதுத்துறைக்கு தகவல் தெரிவிப்பதுடம், அரசு சார்ந்த துறை, அரசு சார்ந்த அமைப்புகள் மற்றும் மற்ற மாநில அரசுகளுக்கும் / மத்திய அரசுக்கும் தெரிவிக்கப்படும். மேலும், இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும்.

எனவே, மேற்கண்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 282/2013ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ''

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.07.2013 அன்று தீர்மான எண். 322/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2184/2009**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 23.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.482/2013 **பொருள் எண்:57**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – மாம்பலம் – நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி**

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பங்கள் பெறப்பட்டு **05.05.2010** அன்று திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது. பணிகள் முடிக்க வேண்டிய காலம் **26** மாதங்கள், அதாவது **04.07.2012**ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும்.

மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் காரணமாக பணிகள் சுமார் எட்டு மாதங்களாக தொடர்ந்து நடைபெறாததால் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு மேலும் **6** மாதங்கள் கால நீட்டிப்பு ஆணை பெறப்பட்டுள்ளது. இதன்படி, **03.01.2013**ற்குள் பணி முடிவடையும் காலமாகும்.

ஒப்பந்ததாரர் கடிதத்தில், மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் பணியில் கம்பிவடங்கள் மற்றும் போக்குவரத்து துறையினரினரால் ஏற்படும் தடைகள், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பகுதியில் ஆக்கிரமிப்புகள் அகற்ற Bio-metric பணி மேற்கொள்ளப்படுவதாலும், மேலும் **22** மாதங்கள் பணிகால நீட்டிப்பு வழங்கவும் திருத்திய மையில்கல் அமைக்கவும் கோரியுள்ளனர்.

**06.08.2011** மற்றும் **03.08.2012** தேதிகளில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வட கிழக்கு பருவ மழைக்கு முன் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நடந்த ஆய்வு கூட்டத்தில் சாலை வெட்டு மேற்கொள்ள தடைவிதிக்கப்பட்டது. மேலும், உள்ளாட்சி தேர்தல்களில் நன்நடத்தை விதிகளின்படி பணிகள் தொய்விற்கு காரணமாகின. எனவே, தாமதத்திற்கான காரணம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தாமதத்திற்கான காரணம்**

| | | |
|---|---|---|
| **2011** – உள்ளாட்சி தேர்தல் | செப்டம்பர் **2011** முதல் அக்டோபர் **2011** வரை | **2** மாதங்கள் |
| **2011** – பருவமழை | ஆகஸ்ட் **2011** முதல் டிசம்பர் **2011** வரை | **5** மாதங்கள் |
| **2012** – பருவமழை | ஆகஸ்ட் **2012** முதல் அக்டோபர் **2012** வரை | **3** மாதங்கள் |

மேலும்,

- மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைப்பு பணிகளின் போது அதிகப்படியான மின்சார கம்பிவடங்கள், கம்பங்கள், மின்இணைப்பு பெட்டிகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள் மற்றும் இணைப்புகள், தொலைபேசி கம்பிவடங்கள் போன்ற தடங்கள்களாலும் அவைகளை மாற்றி அமைப்பதிலும் பணிகளை துரிதமாக மேற்கொள்ள தாமதம் ஏற்படுகிறது.
- சாலைகளில் போக்குவரத்து நெரிசல், போக்குவரத்து துறையினர் இரவு நேரங்களில் மட்டும் பணி செய்ய அனுமதி போன்ற தடைகளாலும், பணிகள் துரிதமாக மேற்கொள்ள தாமதம் ஏற்படுகிறது
- குறுகலான தெருக்களில் கான்கீரிட் லாரிகள் செல்ல இயலாததால் பணிகள் தாமதம் ஏற்படுகிறது.
- மணல் குவாரிகளில் மணல் எடுப்பது உயர்நீதிமன்றம் மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதித்துள்ள பகுதிகளில் மட்டும் மணல் எடுக்க அனுமதித்துள்ளது. சென்னை மற்றும் சுற்றுபுற மாவட்டங்களில் மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் அனுமதி பெற நடவடிக்கையில் உள்ளதால் மணல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பணிகள் நடைபெறவில்லை.

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி தாழ்வான பகுதியாதலால், மழைக்காலங்களில் மழைநீர் கால்வாய் பள்ளங்களில் ஊற்று தண்ணீர் மற்றும் கழிவுநீர் அதிக அளவில் தேங்குவதாலும் மோட்டர் பம்ப் கொண்டு இறைத்து பணிகளை தொடர்ந்து செய்ய தாமதம் ஏற்படுகிறது.

மேற்கூறிய காரணங்களால் பணிகளை **03.01.2013**ற்குள் ஒப்ப விதியின் கீழ், பணிகள் மேற்கொள்ளப்பட முடியாததாலும், பத்து மாத காலங்கள் பணியிழப்பு ஏற்பட்டதால் திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு **03.01.2013** முதல் மூன்று மாத காலத்திற்கு **02.04.2013** வரை பணி நீட்டிப்பு வழங்க முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் **15.02.2013** அன்று ஆணை பெறப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கும் தருவாயில் வரவு மற்றும் செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெற்றதால் இப்பொருள் சமர்ப்பிக்க இயலதாதால் மன்றத்தின் பின்னேற்புக்கு அனுமதி வேண்டியும்.

ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தில், மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பணிகளுக்கு பல்வேறு இடர்பாடுகள் இருப்பது குறித்து கடிதங்கள் மூலமாகவும் தொடர் ஆய்வு கூட்டத்தில் வலியுறுத்தியும் இருப்பதாக தெரிவித்துள்ளார். எனவே, இப்பணிகள் முழுமையாக முடிக்க கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

ஒப்பந்ததாரர் ஏற்கனவே ஒரு முறை பணிக்கால நீட்டிப்பு கோரியுள்ளார். பணிக்கால நீட்டிப்பு கோரும்போது ஒப்பந்ததாரர் முன்னரே பணி தாமதத்திற்கான காரணங்களை ஆராய்ந்து அதனடிப்படையில் **3** காரணங்களையும் கூறி பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து தருவதாக உறுதி அளித்தார். இதனடிப்படையில் **6** மாதங்கள் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது.

- வேறு எந்த ஒப்பந்ததாரர் போலவே, இந்த ஒப்பந்ததாரரும் தன் சொந்த விருப்பத்தின் பெயரிலேயே ஒப்பந்த்தில் கலந்து கொண்டு ஒப்ப விதிகளையும், பணியின் தன்மையையும், அதில் உள்ள சிரமங்களையும் நன்றாக ஆராய்ந்து குறிப்பிட்ட அளவு பணியினை, குறிப்பிட்ட அளவு தொகையில், குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடித்து தருவதாக ஒப்ப உடன்படிக்கை நிறைவேற்றியுள்ளர்.
- **2**வது பத்தியில் குறிப்பிட்டுள்ள கருத்துகளை தவிர்த்து முதல் பத்தியில் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள காரணங்களை பணிவுடன் ஏற்று பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டபோது ஒப்பந்ததாரர் கூறிய காரணங்களை நன்றாக ஆராய்ந்து தொழில்நுட்ப ரீதியில் முடிவெடுக்கப்பட்டது.
- சென்னை மாநகராட்சி ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒப்பந்ததாரரால் மீண்டும் பழைய காரணங்கள் மற்றும் புதிய காரணங்களை சேர்த்து பணி நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது. இது ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப பற்றாக்குறையும், மிக முக்கிய நிகழ்வான மழைநீர் வடிகால் கட்டும் பணியை ஒரு பொருட்டாக கருதாத தன்மையும் வெளிப்படுகிறது.
- இதனடிப்படையில் இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். ‘‘இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், மாம்பலம் மற்றும் நந்தனம் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் மேற்கொள்வதற்கு திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு **03.04.2013** முதல் பதினாங்கு மாத காலத்திற்கு **31.03.2014** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

- திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், மாம்பலம் மற்றும் நந்தனம் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய் அமைக்கும் பணிகள் செய்து முடிப்பதற்கு **03.01.2013** முதல் **02.04.2013** வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
- திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், மாம்பலம் மற்றும் நந்தனம் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய் அமைக்கும் பணிகள் செய்து முடிப்பதற்கு **03.04.2013** முதல் **31.03.2014** வரை பதினாங்கு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்க அனுமதியும்,

- மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் கால்வாய் பணிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் நிறைவேற்றப்படாததற்காக ஒப்பந்ததாரர் மீது விதிக்க வேண்டிய (Liquidated damages) அபராதத் தொகைக்கு 02.04.2013 வரை விலக்கு அளிக்கவும், மற்றும்
- மீதமுள்ள ஒப்பப் பணிகளுக்கு ஒப்ப விதிகளில் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 03.04.2013 தேதியிலிருந்து நிர்ணயம் செய்யவும்.

எனவே. மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 300 /2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 343/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/1672/2013**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23–7–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**483/2013** **பொருள் எண். 58**

**சென்னை மாநகராட்சி – சென்னை பெருநகர் வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Develoment Mission) – சென்னை மாநகரின் விரிவாக்கப்பகுதிகளில் – ஒருங்கிணைந்த சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் உள் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.386.61 கோடியிலான திட்ட மதிப்பீட்டிற்கும் மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு வாகனங்கள் / உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு 13.70 கோடியிலான திட்ட மதிப்பீட்டிற்கும் அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டது – அரசாணையை நடைமுறைப்படுத்த அனுமதி .**

சென்னை மாநகர் மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக “சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்” என்னும் முன்னோடி திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழை நீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்தவதற்காக **2011–2012**ம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துவருகிறது. இதில் சென்னை நகரிலும், அதன் விரிவாக்க பகுதிகளிலும், ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் மற்றும் ஒருங்கிணைந்த சாலைகள் மேம்படுத்தும் திட்டங்களும் **2011–12** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

சென்னைப் பெருநகர வளர்ச்சித்திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழை நீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு முதற்கட்டமாக ரூ.**333.27** கோடியில் **175.36** கி.மீ. நீளமுள்ள **360** சாலைகளை **8** விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் மேற்கொள்ள அனுமதித்து, அரசாணை பெறப்பட்டது. மேற்கூறிய பணிகளை **36** சிப்பங்களாக பிரித்து ஒப்பம் இறுதி செய்து பணி ஆணை வழங்கப்பட்டு **314** சாலைகளில் ரூ.**209.54** கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன

இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அடிப்படை வசதிகளை கருத்தில் கொண்டு, **2012–13** ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் விரிவாக்கப்பகுதிகளிலும் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்மூலம் **1** முதல் **15** மண்டலங்களில் ரூ.**366.23** கோடியில் **280.83** கி.மீ. நீளமுள்ள **1189** சாலைகளை ஒருங்கிணைந்த சாலைகளாக மேம்படுத்தவும், மேலும் விரிவாக்கப்பகுதி மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கென **180** எண்ணிக்கையிலான உபகரணங்கள் / வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.**42.08** கோடியிலும், **6** இடங்களில் புதிய குப்பை மாற்று நிலையங்கள் கட்டுவதற்காக ரூ.**18.70** கோடியிலும் ஆகமொத்தம் ரூ.**427.01** கோடியில் பணிகள் மேற்கொள்ள அனுமதித்து, அரசாணை பெறப்பட்டது. ஒருங்கிணைந்த சாலைப்பணிகள் திட்டத்தின்கீழ் **1189** சாலைகளை **40** சிப்பங்களாக பிரிக்கப்பட்டு **35** சிப்பங்களுக்கு ஒப்பம் இறுதி செய்து பணி ஆணை வழங்கப்பட்டது. அவற்றில் **684** சாலைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு **489** சாலைகள் முடிவடைந்தன. திடக்கழிவு மேலாண்மைதிட்டத்திற்கென இதுவரை **147** வாகனங்கள் / உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, துப்புரவு பணிகளுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது **2013–14**ம் ஆண்டில் சென்னை விரிவாக்கப்பகுதிகளில் ஒருங்கிணைந்த சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள திட்டம் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கும் குழுவின் ஒப்புதல் பெற அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றில் சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள் தெருவிளக்குகள், நடைபாதைகள், தெருக்கலன்கள் மற்றும் சேவைத்துறையின் வடங்கள் கொண்டு செல்ல (DUCT) அமைப்புகள் ஆகியவை அடங்கும் இதில் மண்டலம் **1,2,3,7,11,12**, மற்றும் **14**, ஆகிய ஆறு மண்டல்ங்களில் (மண்டலம் **15**, சோழிங்கநல்லூர் பகுதியில் சென்னைப்பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றம் கழிவுநீரகற்று வாரியத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை) ரூ.**386.61** கோடியில் **331.37**கி.மீ. நீளமுள்ள **1565** சாலைகள் மேம்படுத்தவும், மேலும் விரிவாக்கப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்திற்கென **50** எண்ணிக்கையிலான காம்பேக்டர் வாகனங்களும், **750** எண்ணிக்கையிலான காம்பேக்டர் தொட்டிகளும், **2** எண்ணிக்கையிலான புல்டோசர்களும் கொள்முதல் செய்ய ரூ.**13.70** கோடியிலும் ஆக மொத்தம் ரூ.**400.31** கோடியில் பணிகள் மேற்கொள்ள அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.**400.31** கோடிக்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் பெறப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சாலைகள் திட்டத்தின் சுருக்கம்.

| வ. எண் | மண்டலம் எண் | மண்டலத்தின் பெயர் | சிப்பங்களின் எண்ணிக்கை | சாலைகளின் எண்ணிக்கை | நீளம் (கீமீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) சாலைகள் | மழைநீர் வடிகால்வாய் | நடைபாதை | மின்வட கால்வாய் (Cable Duct) | தெரு விளக்கு | சாலை சாலைக் கலன்கள் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் கோடியில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | I | திருவொற்றியூர் | 2 | 114 | 27.96 | 1536.70 | _ | _ | 351.57 | _ | 65.27 | 1953.54 |
| 2 | II | மணலி | 5 | 121 | 30.17 | 2052.66 | 564.39 | 294.24 | 365.83 | 359.96 | 52.58 | 3689.66 |
| 3 | III | மாதவரம் | 4 | 154 | 43.03 | 3207.69 | 82.59 | _ | 88.93 | _ | 154.39 | 3533.60 |
| 4 | VII | அம்பத்தூர் | 16 | 753 | 152.46 | 8744.84 | 4037.75 | 1152.03 | 144.77 | _ | 421.39 | 14500.78 |
| 5 | XI | வளசரவாக்கம் | 3 | 51 | 11.35 | 791.85 | 1222.73 | 542.91 | 156.97 | 173.89 | 19.95 | 2908.30 |
| 6 | XII | ஆலந்தூர் | 3 | 105 | 15.08 | 1641.92 | 852.14 | 242.86 | சாலை பணிகளின் மதிப்பீட்டுத் தொகை அடங்கியுள்ளது | _ | சாலை பணிகளின் மதிப்பீட்டுத் தொகை அடங்கியுள்ளது | 2736.92 |
| 7 | XIV | பெருங்குடி | 11 | 267 | 51.12 | 4047.41 | 1862.82 | 1862.70 | 1184.13 | 183.53 | 197.02 | 9337.61 |
| | | மொத்தம் | 44 | 1565 | 331.17 | 22023.07 | 8322.42 | 4094.74 | 2292.20 | 717.38 | 910.60 | 38660.41 |

விரிவாக்கப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கான வாகனங்கள்/உபகரணங்கள் கொள்முதல் சுருக்கம்.

| வ.எண் | பணியின் விவரம் | வாகனங்கள் / உபகாரணங்கள் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ரூ.கோடியில் |
|---|---|---|---|
| **1.** | சிறிய காம்பேக்டர்கள் **6** கன மீ கொள்ளளவு | **50** | **10.00** |
| **2.** | காம்பேக்டர் தொட்டிகள் **1100** லிட்டர் கொள்ளளவு | **750** | **1.50** |
| **3** | புல் டோசர்கள் (Bull Dozers) (கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சேரும் குப்பைகளை சமன்படுத்த) | **2** | **2.20** |
| | மொத்தம் | | **13.70** |

ஆக மொத்தம் ரூ.**400.31** கோடிக்கு ஒப்புதல் அளித்து அரசாணை பெறப்பட்டுள்ளது. அதற்கான விவரம் பின்வருமாறு.

| வ.எண் | திட்டங்கள் | மதிப்பீட்டுத்தொகை ரூ.கோடியில் |
|---|---|---|
| **1.** | ஒருங்கிணைந்த சாலைகள் | **386.61** |
| **2.** | வாகனங்கள்/உபகரணங்கள் கொள்முதல் | **13.70** |
| | மொத்தம் | **400.31** |

**21.05.2013** அன்று நடத்த திட்ட ஒப்புதல் குழு கூட்டத்தில் **2013–14**ம் ஆண்டிற்கான பணிகளை மேற்கொள்ள தற்போது உள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்ப தகுதிகளை ஆராய்ந்தும் மேலும் அதிக எண்ணிக்கையில் ஒப்பந்ததாரர்களை நியமித்தால் பணிகள் குறித்த நேரத்தில் முடிக்க ஏதுவாகும் என கருதி ரூ.**3.00** கோடிக்கு குறையாமல் சிப்பங்களாக ஒப்பங்கள் கோரலாம் என முடிவு செய்யப்பட்டது.

மேலும் இந்த அரசாணையில் சில நிபந்தனைகள் விதித்துள்ளது.

இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில் **75** விழுக்காடு தொகையான ரூ.300.23 கோடியை **2013–14**ம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் மூலம் ஒதுக்கியும் மீதமுள்ள **25** விழுக்காடு தொகையான ரூ.**100.08** கோடியை சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியில் அல்லது நிதி நிறுவனங்களில் கடன் பெற்று மேற்கொள்ளலாம் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான சாலை பணிகளின் தன்மைக்கேற்ப ஒப்பங்களை சிப்பங்களாக பிரித்து அப்பணிகள் முடிப்பதற்கான கால அவகாசத்தையும் சென்னை மாநகராட்சியே தாமாக முடிவு செய்து ஒப்பம் கோரலாம் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை துறைக்கு கொள்முதல் செய்யப்படும் வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியை 7 வருடம் காலத்திற்கு சம்பந்தப்பட்ட ஒப்பந்தாரர் மூலம் மேற்கொள்ளவும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித்திட்ட பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை கருத்தில் கொண்டும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பணிகளுக்காக, தேவைப்படும் நிதியை கருத்தில்கொண்டும் சென்னை மாநகராட்சிக்கு 2011–12 ஆண்டிற்கு அனுமதித்த திட்டமதிப்பீட்டில் கண்டறியப்பட்ட சேமிப்பு தொகையில் ஒப்புதல் அளிக்கப்பட்டதிட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் மாற்றுச்சாலைகளில் இப்பணிகளை மேற்கொள்ள அனுமதியும் அளித்து அரசு ஆணையில் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணை (பல்வகை) எண் 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.07.2013யை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தி பணி மேற்கொள்ள ஒப்பங்கள் கோரவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 301 /2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ''

ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 338/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.உ.செ.பொ./வ.பி./914/2007**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.484/2013 பொருள் எண். 59

**சென்னை மாநகராட்சியால் கட்டப்படும் கட்டடங்களின் தோற்றம் பொலிவு பெறவும் வடிவமைக்கவும் புதிதாக கட்டிடக் கலைஞர்களை தெரிவு செய்யவும், புதிய பட்டியல் தெரிவு செய்யப்படும்வரை ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட கட்டடக் கலைஞர்களைக் கொண்டு கட்டட வடிவமைப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி.**

சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2013-14ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. இதற்கு கட்டப்படும் கட்டடங்களின் பயன்பாடு மேன்மையுறவும் தோற்றம் பொலிவு பெறும் வகையில் கட்டடங்களை வடிவமைக்க கட்டடக் கலைஞர்களின் சேவை தேவைப்படுகிறது. இதற்காக ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் இப்பணிகளுக்காக 2007-08ஆம் ஆண்டில் 10 கட்டடக் கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு கட்டடக் கலைஞர்களுக்கான பணிகளை செய்து வருகின்றனர்.

கட்டிடக்கலைஞர்களின் விவரம் கீழ்வருமாறு

1. கிரியேடிவ் ஆர்கிடெக்ட்ஸ் மற்றும் இன்டேரியர்
2. கே.அமுதா
3. இராஜேந்திரன் அசோசியேட்ஸ்
4. ருக்சா கன்சார்ட்டியா
5. டிசைன் போரம்
6. கிரியாலீஸர் ஆர்க்கிடேக்சர்
7. செல்வராஜ் ஆர்க்கிடேக்ட்ஸ்
8. சேரலாதன் அசோசியேட்ஸ்
9. ஜி.ஏ.ஆர்க்கிடேக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
10. ஆர்ச்–இ–ஸ்டுடியோ (பி) லிமிடெட்

கட்டட கலைஞர்களுக்கு அவர்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கு பணியின் மதிப்பீட்டுத் தொகை அடிப்படையில் ரூ.40.00 இலட்சம் வரை 2% சதவிகிதமும், ரூ.40.00 இலட்சம் முதல் ரூ.50.00 இலட்சம் வரை 1.75% சதவிகிதமும் மற்றும் ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் 1.50% சதவிகிதமும் கலந்தறிக்கட்டணமாக வழங்கவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 2007-2008 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 10 கட்டட கலைஞர்களில் கட்டிட பணிகளுக்கான வடிவமைப்பு பணிகளை சிலர் மட்டுமே பணிகளை செய்து வருகின்றனர். புதிதாக கட்டிடக்கலைஞர்கள் சென்னை மாநகராட்சியின் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகளை மேற்கொள்ள முன் வருவார்கள் என கருதப்படுகிறது. எனவே, புதிதாக கட்டிடக்கலைஞர்களை தேர்வு செய்ய செய்தித்தாள்களில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு தேர்வுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதை செயல்படுத்த கால அவகாசம் தேவைப்படும் என்ற காரணத்தினால் தற்போதுள்ள கட்டிடக்கலைஞர்களை கொண்டு பணி மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, புதிய பட்டியல் தெரிவு செய்யப்படும்வரை மேற்குறிப்பிட்ட நடப்பில் உள்ள கட்டட கலைஞர்களின் தேர்வு பட்டியலில் உள்ள கட்டட கலைஞர்களைக் கொண்டு வடிவமைப்பு பணிகளை மேற்கொள்ள நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.07.2013** அன்று தீர்மான எண். **306 /2013,** –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ”

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.07.2013** அன்று தீர்மான எண். **344/2013,**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1635/2012**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23–7–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.485/2013 **பொருள் எண்.60**

**ஒப்பம்– 9 K.L. கன அளவு கொண்ட கனரக தண்ணீர் லாரிகள் (HCV Water Tankers) 10 எண்ணிக்கைகள் கொள்முதல் செய்தல் –ஒப்பம் கோரி திறக்கப்பட்டது– குறைந்த விலை அளித்த திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2013–2014ம் நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் இயந்திரப்பொறியியல் துறை என்னும் தலைப்பின் கீழ் பத்தி எண். 43 வரிசை எண். 5–ல் 10 எண்ணிக்கையில் புதியதாக கனரக தண்ணீர் லாரிகள் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார்கள்.

தற்போது 20 எண்ணிக்கையில் கனரக தண்ணீர் லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சி எல்லைகள் விரிவாக்கப்பட்டதால் இவை போதுமானதாக இல்லை. மேலும் இவற்றில் 3 வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

சென்னை மாநகராட்சியின் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதால் அதிகமான பூங்காக்கள் மற்றும் மைய தடுப்பு சுவரில் அமைக்கப்பட்டுள்ள செடிகளை பராமரிக்க இவ்வகை வாகனங்கள் கூடுதலாக தேவைப்படுகின்றன. தற்போது பராமரிக்கப்பட்டு வரும் பூங்காக்களை மேலும் செம்மையாக பராமரித்திட கூடுதலாக 10 புதிய கனரக தண்ணீர் லாரிகள் கொள்முதல் செய்வது அவசியமாகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் புதிய வாகனங்களில் பயன்படுத்தபடும் தண்ணீர் அதிகஅளவில் வீணாகாமல் தடுக்கும் வகையில் அதற்கேற்ற உபகரணங்கள் பொருத்தப்பட்டும் மற்றும் தேங்கிய நீரை உறிஞ்சி லாரியில் வடிவமைக்கப்பட்டுள்ள தொட்டியில் சேகரிக்கும் திறன் கொண்ட மோட்டர்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

இதன் அடிப்படையில் மன்றத் தீர்மான எண். 264/2013 நாள். 26.04.2013–ல் 10 எண்ணிக்கையில் கனரக தண்ணீர் லாரிகள் ரூ. 1.75 கோடி திட்ட மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து ஒப்பம் குறித்த அறிவிப்பு சென்னை மாநகராட்சி செய்தி மலர் மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் ஆகியவற்றில் வெளியிடப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது. ஒப்பத் திறப்பு நாளான 31.05.2013 அன்று 5 ஒப்பந்காரர்கள் ஒப்பத்தை சமர்ப்பித்திருந்தனர். அவர்களுடைய விவரம் பின்வருமாறு:

1. திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ்
2. திருவாளர்கள். A.C.T. இந்தியா லிமிடெட்,
3. திருவாளாகள். அசோக் லேலண்ட் லிமிடெட்,
4. திருவாளர்கள். T.V. சுந்தரம் ஐயங்கார் அன் சன்ஸ்.,
5. திருவாளர்கள். சக்தி பாடி பில்டர்ஸ்.,

இவர்களுடைய தொழில் நுட்ப ஒப்பத்தை கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு:

ஒப்ப நிபந்தனைப்படி வாகனம் வழங்கும் ஒப்பந்ததாரர் வாகனத்தை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஆணையர், சென்னை மாநகராட்சி பெயரில் நிரந்தர பதிவு செய்து வழங்க வேண்டும் என்பதாகும். மத்திய அரசின் வழி காட்டுதலின்படி, சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட போக்குவரத்து அலுவலகத்தில் BS-IV Emission norms கொண்ட வாகனங்களை மட்டுமே பதிவு செய்யப்படும். இதன்படி, BS-III வாகனங்களை வழங்குவதற்கு ஒப்பம் அளித்திருந்த திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார் மற்றும் திருவாளர்கள். T.V. சுந்தரம் ஐயங்கார் அன் சன்ஸ்.,நிறுவனத்தாரரின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

ஒப்ப நிபந்தனைப்படி, வாகன தயாரிப்பாளர்கள் மற்றும் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மட்டுமே இவ்வொப்பத்தில் கலந்துக் கொள்ள தகுதியுடையவர்கள் ஆவார்கள் . எனவே, திருவாளர்கள். சக்தி பாடி பில்டர்ஸ் நிறுவனத்தார் வாகனங்கள் உற்பத்தியாளரோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் இல்லாத காரணத்தால் ஒப்பத்தில் கலந்துக்கொள்ள தகுதியற்றவராக கருதப்பட்டு இவர்களின் ஒப்பமும் நிராகரிக்கப்பட்டது.

எனவே, BS IV தரம் கொண்ட வாகனங்களை வழங்குவதற்கு ஒப்பம் சமர்ப்பித்த திருவாளர்கள். அசோக்லேலாண்ட் நிறுவனத்தார் மற்றும் திருவாளர்கள். ACT இந்தியா ஆகிய இருவர் மட்டுமே தகுதியானவர்களாக கருதப்பட்டு மேற்கண்ட இருநிறுவனங்களின் விலைப்புள்ளி ஒப்பம் 20.06.2013 அன்று திறக்க முடிவு செய்யப்பட்டது.

விலைப்புள்ளி ஒப்பதிறப்பு நாளான **20.06.2013** அன்று ஒப்ப திறப்பிற்கு முன் திருவாளர்கள்.ACT இந்தியா நிறுவனத்தார் தாங்கள் மேற்கண்ட ஒப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள **10** வாகனங்களை ஒப்ப நிபந்தனையின்படி பணியாணை பெற்ற நாளிலிருந்து **45** நாட்களுக்குள் **10** வாகனங்களை வழங்க இயலாத நிலையில் உள்ளதால் தாங்கள் இவ்வொப்பத்திலிருந்து விலகுவதாக கடிதம் சமர்ப்பித்தனர். எனவே திருவாளர்கள். அசோக்லேலண்ட் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி ஒப்பம் **20.06.2013** அன்று திறக்கப்பட்டது. அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு.

| வ.எண் | விவரம் | மொத்த எண்ணிக்கை | திருவாளர்கள் அசோக்லேலண்ட | |
|---|---|---|---|---|
| | | | வாகனம் ஒன்றின் விலை (ரூ) | 10 எண்ணிக்கையிலான கனரக தண்ணீர் லாரிகளின் மொத்த விலை (ரூ) |
| 1. | கனரக சேசிஸ் U 1619 – 4700 MM WB – BS IV மேல் வடிவமைக்கப்பட்ட **9** கி. லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் லாரிகள், ( inclusive of all Tasxes, Entry tax, Levies, Transit Insurance, Transportation charges with temporary registration) | 10 | 19,02,849.00 | 1,90,28,490.00 |

மேற்கண்ட அட்டவணையின் படி திருவாளர்கள். அசோக்லேலாண்ட் நிறுவனத்தார் **9** கனலிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தண்ணீர் லாரியின் விலை ரூ. **19,02,849/–** எனவும் **10** எண்ணிக்கையிலான தண்ணீர் லாரிகளின் மொத்த விலை ரூ. **1,90,28,490/–** எனவும் தெரிவித்து விலைப்புள்ளி அளித்துள்ளன. திருவாளர்கள். அசோக்லேலாண்ட் நிறுவனத்தாரை விலை குறைக்கக்கோரி **21.06.2013** நாளிட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதில் திருவாளர்கள் அசோக்லேலாண்ட் நிறுவனத்தார் தங்களது **24.06.2013** நாளிட்ட கடிதத்தில் தாங்கள் மிகக்குறைந்த விலையே அளித்துள்ளதாகவும் மேலும் விலை குறைக்க இயலாத நிலையில் உள்ளதாகவும் கடிதம் சமர்ப்பித்துள்ளனர். எனவே, திருவாளர்கள். அசோக்லேலாண்ட் நிறுவனத்தார் மேலும் விலை குறைப்பு அளிக்கக்கோரப்பட்டதில் திருவாளர்கள்.அசோக்லேலாண்ட் நிறுவனத்தார் தங்களது **09.07.2013** நாளிட்ட கடிதத்தில் BS IV வகை வாகனங்களின் இன்ஜின் மற்றும் அதைச்சார்ந்த பாகங்களின் தயாரிப்பு செலவு BS-III தரம் கொண்ட வாகன பாகங்களின் விலையை காட்டிலும் ரூ. **5.00** இலட்சங்கள் அதிகமாக இருப்பதால் ஏற்கனவே தங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட BS III வகை வாகனங்களுக்கான விலையுடன் ஒப்பிடுகையில் BS IV வகை வாகனத்தின் விலை ரூ. **3.17** இலட்சங்கள் மட்டுமே கூடுதலாக உள்ளதாகவும் எனவே தங்களால் மேலும் விலைக்குறைப்பு அளிக்க இயலாத சூழ்நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதே வகை தண்ணீர் லாரிகள் BS-III தரத்தில் கடந்த **2012**ல் ஒரு வாகனத்தின் விலை ரூ.**15,85,264/–** என்ற வீதத்தில் **5** வாகனங்கள் திருவாளர்கள். அசோக் லேலண்ட் நிறுவனத்தாரரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. வாகனத்தின் தரத்தை BS-III லிருந்து BS-IV -க்கு மேம்படுத்த இன்ஜினில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ளதால் தரம் மேம்படுத்தப்பட்ட BS IV வாகனத்தின் விலையை கடந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட BS III தரச்சான்று பெற்ற வாகனத்தின் விலையோடு ஒப்பிடும் போது ரூ. **3,17,585/–**அதிகமாக உள்ளது.

திருவாளர்கள். அசோக்லேலாண்ட் நிறுவனத்தார் **10** வாகனங்களுக்கு வழங்குவதற்கு கோரியுள்ள மொத்த தொகையானது **(** ரூ.**1,90,28,490/– )** அலுவலக திட்ட மதிப்பீட்டை விட **8.73%** (ரூ. 3,17,585/-) கூடுதலாக உள்ளது.

ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் ஒப்பக் குழுமத்தின் **18.07.2013** நாளிட்ட கூட்டத்தில் இந்த ஒப்பம் சம்மந்தமாக விரிவான விவாதத்திற்குப்பின் ஒரு வாகனத்தின் விலை ரூ. **19,02,849/–** வீதம் **10** எண்ணிக்கையில் கனரக தண்ணீர் லாரிகள் ரூ. **1,90,28,490/–** மதிப்பீட்டில் திருவாளர்கள். அசோக் லேலண்ட் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய பரிந்துரை செய்துள்ளார்கள்.

ஆகவே, 9 K.L. கன அளவு கொண்ட கனரக தண்ணீர் லாரி ஒன்றின் விலை ரூ.19,02,849/– வீதம் 10 எண்ணிக்கை தண்ணீர் லாரிகளின் மொத்த தொகை ரூ.1,90,28,490/– ஆகும். இச்செலவினத்தை இயந்திர பொறியியல் துறை–2013–2014 க்கு ஒதுக்கப்படும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இவ்வொப்பத்தின் செல்லத்தக்க காலம் 31.08.2013 வரை ஆகும்.

மேற்கண்ட குறிப்பு ஏற்கப்படின், ஒப்பக் குழுமத்தின் பரிந்துரையை ஏற்று திருவாளர்கள். அசோக் லேலண்ட் நிறுவனத்திடமிருந்து ரூ. 1,90,28,490/– மதிப்பீட்டில் 10 எண்ணிக்கையில் கனரக தண்ணீர் லாரிகள் கொள்முதல் செய்ய கீழ்கண்ட இனங்களின் மேல் முதன்மை செயலர் /ஆணையரின் ஆணை வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இவ்வொப்பத்தில் ஒப்ப நிபந்தனைகளின்படி தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்த ஒரே ஒரு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் (கேபின் + சேசிஸ்) Chassis Model U 1619 – 4700 MM WB – BS IV சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட 9 K.L. கனஅளவு கொண்ட கனரக தண்ணீர் டேங்கர் வாகனம் ஒன்றுக்கு ரூ.19,02,849/– வீதம் 10 எண்ணிக்கைகள் வழங்க குறிப்பிட்டிருந்த மொத்த தொகையான ரூ.1,90,28,490/– க்கு கொள்முதல் செய்யவும்,
2. முதல் இனம் ஏற்கப்படின், திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனத்தினருக்கு பணியாணை வழங்கவும்,
3. திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,
4. வாகனங்கள் நிரந்தர பதிவு செய்து ஆணையர் அவர்களின் பெயரில் விலைப்பட்டி அளித்து சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட பின் மொத்த கொள்முதல் விலையில் 90 சதவிகிதம் காசோலையாக வழங்கவும்,
5. எஞ்சியுள்ள வாகன மொத்த தொகையின் 10 சதவிகித தொகையை, வாகனம் இயக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு வாகன செயல்திறன் திருப்திகர சான்றிதழ் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டபின் வழங்கவும்,
6. வாகனங்களின் நிரந்தரப் பதிவு, தகுதி சான்றிதழ், சாலை வரி, மற்றும் காப்பீடு ஆகியவைகளை மேற்கொண்டபின், இவைகளுக்கான உரிய செலவு சீட்டுகள் திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டபின், அத்தொகையை திருப்பி வழங்கவும்,
7. மேற்கண்ட இச்செலவினத் தொகையை இயந்திர பொறியியல் துறை–2013–2014–க்கு ஒதுக்கப்பட்ட மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,

எனவே, மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு ( வரிவிதிப்பு (ம) நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண்.303/2013ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண்.340/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.எண்.பி3/2135/2013**

**முதன்மை செயலர் /ஆணையாளர் அவர்களின் 23–7–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.486/2013 **பொருள் எண். 61**

**ஒப்பம் – 2013–14 – சிப்பம்–1 – மண்டலம்–1 மற்றும் 3ல் உள்ள பேருந்து தட சாலைகளில் 24 எண்ணிக்கைகள் துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணி (Modern Stainless Steel Bus Shelters) ஒப்பந்த புள்ளிகள் கோர அனுமதி.**

பொது மக்கள் நலன் கருதி, 108 எண்ணிக்கையிலான துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இப்பணிக்கான மொத்த மதிப்பீடுகள் ரூ.12.90 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, ஐந்து சிப்பங்களாக பிரித்து, தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் 17.06.2013 நாளிட்ட அனுமதியின்படி குறுகிய கால ஒப்பங்கள் கோரப்பட்டது. இப்பணிக்கான மதிப்பீடுகளுக்கு முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கோரப்பட்டுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு.

| சிப்பம் எண். | மண்டலம் | பணிகள் விவரம் | பணியின் மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 மற்றும் 3 | 24 எண்ணிக்கையிலான துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) | **286.98** |
| 2 | 4 மற்றும் 5 | 24 எண்ணிக்கையிலான துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) | **286.98** |
| 3 | 7 | 12 எண்ணிக்கையிலான துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) | **143.34** |
| 4 | 11 மற்றும் 12 | 24 எண்ணிக்கையிலான துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) | **286.50** |
| 5 | 14 மற்றும் 15 | 24 எண்ணிக்கையிலான துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) | **286.50** |

ஒப்பந்த அறிவிப்பு 20.06.2013 அன்று ஆங்கில நாளிதழ் – நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், தமிழ் நாளிதழ் – மக்கள் குரல், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது மற்றும் தகவல் தொழில்நுட்ப முறையில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு வழிவகை செயப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் மூன்று மாதங்களாகும் (25.09.2013 வரை).

ஒப்ப நாளான 28.06.2013 அன்று கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து சிப்பம்–1க்கான ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு:

**சிப்பம்–1:**

(1) திருவாளர்கள். ஸ்ரீவட்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்
(2) திருவாளர்கள். சைன் டி சைன்.
(3) திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ்
(4) திருவாளர்கள்.ஓம் டி சைன்
(5) திருவாளர்கள்.டிஸ்ஸா என்டர்பிரைசஸ்

தொழில்நுட்ப ஒப்பம் மதிப்பாய்வு செய்யப்பட்டதில், திருவாளர்கள்.டிஸ்ஸா என்டர்பிரைசஸ் அவர்கள் முன்வைப்புத் தொகைக்கான வங்கி காப்புறுதி பத்திரம் முறையான படிவத்தில் பூர்த்தி செய்து இணைக்கப்படாததால் ஒப்பம் ஏற்கப்படவில்லை. மேலும் கலந்து கொண்ட மற்ற நான்கு ஒப்பந்ததாரர்களும் தகுதி பெற்றனர். அதன்படி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 02.07.2013 அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி விவரம் கீழ்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத்தொகை **2012-2013** ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஸ்ரீவட்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 24740484.00 | 26755284.00 | (+)8.14% அதிகம் |
| 2 | திருவாளர்கள். சைன் டி சைன் | 24740484.00 | 26755284.00 | (+)8.14% அதிகம் |
| 3 | திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் | 24740484.00 | 26599788.00 | (+)7.52% அதிகம் |
| 4 | திருவாளர்கள். ஓம் டி சைன் | 24740484.00 | 27218484.00 | (+)10.02% அதிகம் |

சிப்பம்–1க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் ஆவார். அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பத்தொகை ரூ.2,65,99,788.00 ஆகும். இவ்வொப்பத் தொகையானது **2012–2013** ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட (+)**7.52**% அதிகம் ஆகும்.

குறைந்த ஒப்பந்ததாரருடன் உடனடியாக விலைக்குறைப்பு கோரப்பட்டது. முதற்கட்ட பேச்சுவார்த்தைக்குப்பின், குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்கள் குறிப்பிட்ட ஒப்பத் தொகை ரூ.2,65,99,788.00 லிருந்து ரூ.2,62,56,496.80க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்கள். மேலும் விலைக்குறைப்பு வேண்டி **08.07.2013** நாளிட்ட கடிதத்தின் வாயிலாக **2**வது பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டது. அதன்படி **2**வது பேச்சுவார்த்தைக்குப்பின் திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்கள் முதலாவது பேச்சுவார்த்தையில் அளித்த ஒப்பத் தொகையான ரூ.2,62,56,496.80லிருந்து ரூ.2,53,48,192.80க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்கள். அதன்படி திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்கள் அளித்த இறுதி ஒப்பத் தொகையான ரூ.2,53,48,192.80 ஆனது **2012–2013**ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) **2.46**% அதிகமாகும். 15.06.2013 நாளிட்ட சந்தை விலையான ரூ.2,53,52,490.24 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை **(–) 0.02**% குறைவாகும்.

கீழ்காணும் விவரங்கள் மேற்பார்வை பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) பொது மக்கள் நலன் கருதி, சென்னை மாநகராட்சி பேருந்து தட சாலைகளில் துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) அமைக்க வேண்டிய அவசிய நிலையில் உள்ளது. இவ்வொப்பந்தப்புள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.2,53,48,192.80 ஆகும். குறைந்த பணிக்காலமான **180** நாட்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பத்தொகையானது ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.
2) இப்பணி மேற்கொள்ள மூலப் பொருட்களான துருப்பிடிக்காத குழாய்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகியுள்ளதாலும் ஒப்ப விலை அலுவலக விலைக்கு அதிகமாக உள்ளது.
3) இவ்வொப்பத் தொகையானது **2012–13**ம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகையைவிட (+) **2.46**% அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-) 0.02% குறைவாகும்.

மேற்கூறப்பட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்களுக்கு **2012–13**ம் ஆண்டு அலுவலக விலைவிவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) **2.46**% அதிகமான

ஒப்பத்தொகை ரூ.2,53,48,192.80க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

1) பொது மக்கள் நலன் கருதி, சென்னை மாநகராட்சி பேருந்து தட சாலைகளில் துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) அமைக்க வேண்டிய அவசிய நிலையில் உள்ளது. இவ்வொப்பந்தப்புள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.2,53,48,192.80 ஆகும். குறைந்த பணிக்காலமான 180 நாட்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பத்தொகையானது ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.
2) இப்பணி மேற்கொள்ள மூலப் பொருட்களான துருப்பிடிக்காத குழாய்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகியுள்ளதாலும் ஒப்ப விலை அலுவலக விலைக்கு அதிகமாக உள்ளது.
3) இவ்வொப்பத் தொகையானது 2012–13ம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகையைவிட (+) 2.46% அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-) 0.02% குறைவாகும்.

மேலும், இவ்பொப்பமானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பப்புள்ளி ரூ.2,53,48,192.80 ஆனது 2012–13ம் ஆண்டு அலுவலக விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+)2.46% அதிகமாகும் மற்றும் சந்தை விலையைவிட (-) 0.02% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பம் குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம் –1க்கு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத் தொகையான ரூ.2,53,48,192.80க்கு பணியினை வழங்க ஒப்பம் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, சிப்பம்–1ற்கான ஒப்பத்தினை திருவாளர்கள். ஸ்ரீ ராயப்பாஸ் பேப்ரிகேசன்ஸ் அவர்களுக்கு 2012 –13ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையைவிட (+) 2.46% அதிகமான ஒப்பத்தொகை ரூ.2,53,48,192.80க்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி பணியை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 295/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 333/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.எண்.பி3/2136/2013**
**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23–7–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.487/2013 **பொருள் எண். 62**

**ஒப்பம் – 2013–14 – சிப்பம்–2 – மண்டலம்–4 மற்றும் 5ல் உள்ள பேருந்து தட சாலைகளில் 24 எண்ணிக்கைகள் துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணி (Modern Stainless Steel Bus Shelters) – – ஒப்பந்த புள்ளிகள் கோர அனுமதி**

பொது மக்கள் நலன் கருதி, 108 எண்ணிக்கையிலான துருபிடிக்காத குழாய்கள் மூலம் நவீன பேருந்து நிழற்குடைகள் (Modern Stainless Steel Bus Shelters) அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இப்பணிக்கான மொத்த மதிப்பீடுகள் ரூ.12.90 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, ஐந்து சிப்பங்களாக பிரித்து, தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் 17.06.2013 நாளிட்ட அனுமதியின்படி குறுகிய கால ஒப்பங்கள் கோரப்பட்டது. இப்பணிக்கான மதிப்பீடுகளுக்கு முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கோரப்பட்டுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு.

- வேறு எந்த ஒப்பந்ததாரர் போலவே, இந்த ஒப்பந்ததாரரும் தன் சொந்த விருப்பத்தின் பெயரிலேயே ஒப்பந்த்தில் கலந்து கொண்டு ஒப்ப விதிகளையும் பணியின் தன்மையையும் அதில் உள்ள சிரமங்களையும் நன்றாக ஆராய்ந்து குறிப்பிட்ட அளவு பணியினை குறிப்பிட்ட அளவு தொகையில் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடித்து தருவதாக ஒப்ப உடன்படிக்கை நிறைவேற்றியுள்ளர்.
- 2வது பத்தியில் குறிப்பிட்டுள்ள கருத்துகளை தவிர்த்து முதல் பத்தியில் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள காரணங்களை பணிவுடன் ஏற்று இறுதியான பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த இறுதி நீட்டிப்பு வழங்கப்பட்டபோது ஒப்பந்ததாரர் கூறிய காரணங்களை நன்றாக ஆராய்ந்து தொழில்நுட்ப ரீதியில் முடிவெடுக்கப்பட்டது.

- சென்னை மாநகராட்சி ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒப்பந்ததாரரால் மீண்டும் பழைய காரணங்கள் மற்றும் புதிய காரணங்களை சேர்த்து பணி நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது. இது ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப பற்றாக்குறையும், மிக முக்கிய நிகழ்வான மழைநீர் வடிகால் கட்டும் பணியை ஒரு பொருட்டாக கருதாத தன்மையும் வெளிப்படுகிறது.
- இதனடிப்படையில் இத்திட்டத்தை மேலும் காலதாமதப்படுத்தாத வகையில் ஒப்பந்ததாரர் கோரியுள்ள கால நீட்டிப்பை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இறுதியாக வழங்கலாம். ‘‘இதற்கு மேல் கால நீட்டிப்பு கோரிக்கை ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்பொழுது வழங்கப்படும் கால நீட்டிப்பிற்குள் பணியை முடிக்கவில்லை என்றால் ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாரரை தவறிழைத்தோர் பட்டியலில் (Black- list) சேர்த்து, இவ்விவரத்தினை தமிழ்நாடு அரசு பொதுத்துறைக்கு தகவல் தெரிவிப்பதுடம், அரசு சார்ந்த துறை, அரசு சார்ந்த அமைப்புகள் மற்றும் மற்ற மாநில அரசுகளுக்கும் / மத்திய அரசுக்கும் தெரிவிக்கப்படும். இப்பணிக்கு செலவிடப்படும் அனைத்து செலவினங்களையும் எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்படும். எனெனில் மேற்கூறிய காரணங்களே போதுமானதாகும்.

எனவே, திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை மன்ற தீர்மானத்தின்படி நிராகரித்த ஒப்பத்தினை மேற்குறிப்பிட்ட காரணங்களினால் மறு பரிசீலனை செய்து விலக்களிக்கலாம் எனவும், இவ்வாறு விலக்களிக்கும் பட்சத்தில் ஒப்பந்ததாரரிடமிருந்து பெறப்பட்ட பிணை வைப்புத் தொகை (Security Deposit) கையகப்படுத்தவதிலிருந்து விலக்களிக்களித்து மேற்கண்ட மன்ற தீர்மான எண்.272/2013ஐ மறு பரிசீலனை செய்து நிராகரிப்பு தீர்மானத்திலிருந்து விலக்களிக்கவும் மற்றும் ஒப்பந்ததாரருக்கு இப்பணியினை முடிப்பதற்கு 05.05.2013 முதல் 04.03.2014 வரை பத்து மாத காலத்திற்கு மேலும் இறுதியான ஒப்ப கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

- திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை மீண்டும் செல்லுபடியாக்கவும்,
- மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத்தை நிராகரித்து பெறப்பட்ட மன்ற தீர்மான எண்.272/2013, நாள்.26.04.2013யை மறு பரிசீலனை செய்து நிராகரிப்பு தீர்மானத்திலிருந்து விலக்களிக்கவும்,
- திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பிணை வைப்புத் தொகை (Security Deposit) கையகப்படுத்தவதிலிருந்து விலக்களிக்கவும்,
- இப்பணிக்கு இறுதியாக 05.05.2013 முதல் 04.03.2014 வரை பத்து மாதம் ஒப்பந்த கால நீட்டிப்பு வழங்கவும்

எனவே, மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 305 /2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 342/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>சு.து.ந.க.எண்.சி4/259/2013</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 25.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**493/2013** **பொருள் எண்.68**

**<u>தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

திருமதி.எஸ்.கற்பகம், மருத்துவ அலுவலர் சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை அவர்கள் தன்னுடைய உடல்நிலை மற்றும் குடும்ப சூழ்நிலையின் காரணமாக பணிக்கு தொடர்ந்து வரஇயலாத காரணத்தால் தன்னை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கும்படி **01.03.2013** நாளிட்ட கடிதத்தில் கோரியிருந்தார். இக்கடிதத்தையே **3** மாத அறிவிப்பாக (3 Months Notice) கருதும்படியும் கேட்டுக்கொண்டிருந்தார்.

திருமதி.எஸ்.கற்பகம், மருத்துவ அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் **22.9.1988** முதல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். சென்னை மாநகராட்சி பணியில் சேருவதற்கு முன் தனியர் திருச்சி நகராட்சியில் **16.4.1986** அன்று பணியில் சேர்ந்து ஒரு வழி (பணியிடமாற்றம் செய்யப்பட்டு **22–9–1988** அன்று சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்தார்.

இவருடைய பிறந்த தேதி **20–3–1957** ஆகும். வயது முதிர்வு நாள்.**31.03.2015** தனியர் **56** வயது பூர்த்தி செய்துள்ளார். தன் விருப்ப ஓய்வில் செல்ல **20** வருடங்கள் தகுதியுள்ள பணிக்காலம் முடிவத்தவராக அல்லது **50** வயதை முடித்திருக்க வேண்டும். தனியர் **27** வருடங்கள் பணிக்காலம் நிறைவு செய்துள்ளார்.

தனியரின் தன் விருப்ப ஓய்வு தொடர்பாக விழிப்பு குழுமம் மற்றும் தணிக்கைத் துறையின் கருத்துரை கோரப்பட்டது. தனியர் மீது துறை பூர்வமான ஒழுங்கு நடவடிக்கை குறித்து விழிப்பு குழுமத்தில் விசாரணையோ ஏதும் நிலுவையில் இல்லை என **02.05.2013** நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதுமில்லை தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை ஏதும்மில்லை தன் விருப்ப ஓய்வு தொடர்பான அரசாணைகளில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார்.

விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையின் கடிதத்தில் தனியர் மீது எவ்வித விசாரணைகளும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் இதுவரை பணிபுரிந்த துறை மண்டலங்களில் தனியர் மீது எவ்விதி விசாரணைகளோ/ ஒழுங்கு நடவடிக்கைளோ ஏதும் இல்லை என இன்மை அறிக்கை பெறப்பட்டது.

தனியர் திருச்சி நகராட்சியில் **1986** முதல் **1988** வரை பணிபுரிந்த காலத்திற்கான அறிக்கை வர பெறவில்லை என்பதாலும் மேலும், தனியரை **2007–2008** மற்றும் **2008 –2009**ம் கல்வியாண்டில் பொது சுகாதாரத்தில் பட்டய மேற்படிப்பு பயிலுவதற்கு, தனியர் மேற்படிப்பு முடித்து சென்னை மாநகராட்சியில் மீண்டும் பணியில் சேர்ந்து குறைந்தது **15** ஆண்டுகள் அல்லது வயது முதிர்வு ஓய்வு பெறும் வரை பணிபுரிந்திட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும். இந்நிகழ்வில், தனியர் பட்டய மேற்படிப்பு முடித்து மீண்டும் பணியில் சேர்ந்து **15** ஆண்டுகள் முடியாத நிலை இருந்ததால், தனியரை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கவில்லை.

இதன் பின்னர் திருச்சிராப்பள்ளி, நகராட்சியில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கையோ/தனியர் பணிபுரிந்த துறை மண்டலங்களில் தனியர் மீது எவ்வித விசாரணைளோ ஏதும் இல்லை என இன்மை சான்றிதழ் பெற நிகரி தந்தி மூலம் **31.5.2013** அன்று பெறப்பட்டது.

திருச்சிராப்பள்ளி நகராட்சி தனியர் பணிபுரிந்த துறை மண்டலங்களில் தனியர் மீது எவ்வித விசாரணைகளோ தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கையோ ஏதும் இல்லை என இன்மை சான்றிதழ் சி**2/5002/2013** மையம் **7.6.2013** அன்று பெறப்பட்டது. தனியர் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் **5.6.2013** அன்று மீண்டும் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நேர்வில் தணிக்கை துறையின் கருத்துரை கோரியதில் தணிக்கைத்துறை கடிதத்தில் தனியர் தன் விருப்ப ஓய்வு அறிவிக்கை காலமான **90** நாட்களில் ஊதியமில்லா விடுப்பில் செல்ல கூடாதென்றும் தன் விருப்ப ஓய்விற்கு பணியாளரின் பணிக்காலத்தில் **20** வருடங்கள் நிகரபணிக்காலம் இருக்க வேண்டும் அல்லது **50** வயதினை பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனவும் தெரிவித்து நியமனக்குழுவின் ஆணை பணிப்பதிவேட்டில் இடம் பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. தனியர் தன் விருப்ப ஓய்விற்கான அறிவிக்கை காலம் **90** நாட்கள் இருந்ததால் தன் விருப்ப அனைத்து நிபந்தனைக்குட்பட்டு பணியாளரை **10.6.2013** அன்று பிற்பகல் முதல் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிப்பட்டார்.

வகுப்பு **2**ஐ சார்ந்த அலுவலர்களுக்கு தன் விருப்ப ஓய்வு அனுமதி அளிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. நியமனக்குழுவின் அனுமதி பெற கால அவகாசம் இல்லாத காாணத்தால் தனியரை நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், தணிக்கைத்தடைகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதற்கு பொறுப்பாக்கியும் தனியர் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய இதர முன்பண நிலுவைகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரின் ஓய்வூதிய பணிக்கொடைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் தனியர் மேற்படிப்பு முடித்து மீண்டும் பணியில் சேர்ந்து **15** ஆண்டுகள் பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையை தளர்வு செய்தும் **10–6–2013** பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருமதி.எஸ்.கற்பகம், மருத்துவ அலுவலர் பொது சுகாதாரத்துறை அவர்களை **10.6.2013** அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்தமைக்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும்அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.6. ந.க.எண். 5384 /2013**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23–7–13 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.494/2013 **பொருள் எண். 69**

**பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ள குப்பை வீடு இடிப்பதற்கு அனுமதி**

| எண் | வார்டு எண்.78 | மண்டலம்–6 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | அங்காளம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள குப்பைவீடு பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ள கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | தோராயமாக 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 10.00 சதுர மீட்டர் |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 10.00 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 2893/– |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | சாலையோர பூங்கா அமைக்கும் பணிக்காக |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்துள்ளது சாலை விரிவாக்கம் |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–6 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.14 நாள்.09.11.2012<br>6வது மண்டல வார்டு குழு திருத்த தீர்மான எண்125 நாள்:14.6.2013 |

எனவே, மண்டலம்–6, பகுதி–17, வார்டு–78ல் அங்காளம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ள குப்பை வீடு இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 309/2013ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>மி.து.ந.க.எண்.பி.மே.2/7438/2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.495/2013 பொருள் எண்.70

**<u>சாலையில் நிறுவப்பட்டுள்ள தெரு விளக்கு கம்பங்களில் தொலைக்காட்சி வடக்கயிறு (Cable TV Wire) கடத்த சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படும் வாடகைத் தொகை உயர்த்த அனுமதி அளித்த மன்றத் தீர்மானத்தில் திருத்தம் வேண்டி</u>**

சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மான எண்.492/2012, நாள்.29.10.2012ன்படி சாலையில் நிறுவப்பட்டுள்ள தெருவிளக்கு கம்பங்களினூடே செல்லும் தொலைக்காட்சி வடக்கயிறு (Cable TV Wire) கடத்த சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படும் தட வாடகை (Track Rent) தொகையை 2000 ஆண்டு முதல் ஆண்டுக்கு 10% உயர்த்துவதற்கும் மற்றும் நிலுவைத் தொகையை முன் தேதியிட்டு வசூலிப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி பெற்று மின்துறையில் இருந்து 26.03.2013 அன்று அரசிற்கு ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு துணைச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் க.எண்.2434/MC1/2013–2, நாள்.10.4.2013 கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி, தொலைக்காட்சி வடக்கயிறு (Cable TV wire) கடத்த சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படும் தட வாடகை (Track Rent) தொகையை 2000 ஆண்டு முதல் ஆண்டுக்கு 10 % உயர்த்திடவும், தடவாடகையை முன் தேதியிட்டு நிலுவை தொகையை வசூலிக்கவும் சட்டப்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதா என்றும் ஆண்டு தோறும் இத்தொகையினை உயர்த்த இதற்கு முந்தைய அரசாணையின் நிபந்தனைகள் ஏதும் உள்ளதா எனக் கோரப்பட்டுள்ளது.

அரசாணை எண்.58, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.05.2000ல் எந்தவிதமான நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி மாமன்ற தீர்மானத்திலும் (எண்.492/2012, நாள்.2.9.2012) உரிய நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்படவில்லை. எனவே, மேற்படி அரசாணையின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள 1 கி.மீ. நீளத்திற்கு தட வாடகையாக ரூ.9400/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இன்றைய காலக்கட்டத்தில் இது மிகவும் குறைவான தொகை என மாமன்றம் கருதியதால் 2000ம் ஆண்டு முதல் ஆண்டிற்கு 10 % உயர்த்தி தட வாடகை நிர்ணயம் செய்ய அரசின் அனுமதி வேண்டி ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு துணை செயலர் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி, கணக்கிடப்பட்ட முந்தைய ஆண்டுகளின் தொகையினை வசூலிக்க சட்டப்படி செல்லத்தக்கது என்பதனை உறுதி செய்து கொண்ட பின்னர் அரசின் அனுமதி பெற்று பின்னர் வசூலிக்கலாம் என கருதப்படுகிறது.

சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானம்.376/2013, நாள்.26.06.2013ன்படி 2000ம் ஆண்டின் தடவாடகை தொகை கி.மீ. ஒன்றுக்கு ரூ.9400/–ல் இருந்து வருடத்திற்கு 10 % உயர்த்தி, 2013–2014 நிதியாண்டின் கேபிள் தட வாடகை கி.மீ. 1க்கு ரூ.32450/– என நிர்ணயிக்கவும், இனி வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் கேபிள்தட வாடகை 10 % உயர்த்தி அதன் வீதத்தில் கேபிள் டி.வி. விநியோகஸ்தரிடமிருந்து தட வாடகை வசூலிக்க அரசின் ஒப்புதல் பெற கீழ்கண்டவாறு தீர்மானம் நிறைவேறப்பட்டுள்ளது.

1) சென்னை மாநகராட்சியில் கேபிள் டி.வி. தடவாடகை கட்டணத்தை 2000ம் ஆண்டிலிருந்து 10 % உயர்த்தி 2013–14 நிதியாண்டிற்கான கேபிள் டி.வி. தடவாடகை கிலோ மீட்டர் 1க்கு ரூ.32450/– என நிர்ணயிக்கவும், இனிவரும் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் கேபிள் தட வாடகை 10 % வீதம் உயர்த்தி அதன் வீதத்தில் கேபிள் டி.வி. விநியோகஸ்தரிடமிருந்து தடவாடகை வசூலிக்க அரசின் அனுமதி பெறவும்,
2) ஒவ்வொரு வருடமும் 10% ஊக உயர்வு அளிப்பது குறித்து ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்படாததால் 2000 ஆம் ஆண்டு முதல் ஊக உயர்வினை கணக்கிட்டு அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் வசூலித்துக்கொள்ளவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி தீர்மானத்தில் கீழ்கண்டவாறு சில திருத்தங்கள் செய்ய மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1) சென்னை மாநகராட்சியில் கேபிள் டி.வி. தடவாடகை கட்டணத்தை **2000**ம் ஆண்டிலிருந்து **10**% உயர்த்தி **2013–14** நிதியாண்டிற்கான கேபிள் டி.வி. தடவாடகை ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.**32450/–** என நிர்ணயித்து வசூலிக்கவும், இனிவரும் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் கேபிள் டி.வி. விநியோகஸ்தரிடமிருந்து தடவாடகை வசூலிக்க அரசின் அனுமதி பெறவும்,

2) ஒவ்வொரு வருடமும் **10**% ஊக உயர்வு உயர்த்தி அளிப்பது குறித்து ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு நகராட்சிகள் தொலைக்காட்சி வடம் அமைத்தல் கட்டுப்பாடு விதிகள் **2000**ல் நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்படாததால், மேற்படி விதிகளில் ஒவ்வொரு ஆண்டும் **10**% ஊக உயர்வினை கணக்கிட்டு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கலாம் என்றும் இதனால் நகராட்சிகளுக்கு கூடுதல் வருவாய் ஈட்டப்படுவது அல்லாமல் கேபிள் டி.வி. விநியோகஸ்தர்களின் தவறான நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும்.

எனவே, **2000** ஆம் ஆண்டின் தமிழ்நாடு நகராட்சிகள் தொலைகாட்சி வடம் அமைத்தல் கட்டுப்பாடு விதிகளில், கேபிள் டி.வி. தடவாடகை ஆண்டிற்கு அதன் முந்தைய ஆண்டைவிட **10** % உயர்த்தி ஒவ்வொரு ஆண்டும் தட வாடகை வசூலிக்கும் வகையில் மாற்றிட மன்றத்தின் ஒப்புதலுக்காக நேரடியாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண்.தொ.வ.எண்/1420 /2012**

**முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் 25.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.496/2013 **பொருள் எண். 71**

**வருவாய்த் துறை – தொழில் வரிப் பிரிவு – நிறுவன வரி (Company Tax) – அரையாண்டு நிறுமம் வரி விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் வரி விதித்து வசூலிக்க ஏதுவாக தமிழ்நாடு அரசிதழ் மற்றும் உள்ளூர் செய்தித் தாள்களில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் பிரிவு–110 ன்படி சென்னை மாநகராட்சி எல்லைக்குள் எந்த ஒரு அரையாண்டிலும் 60 நாட்களுக்குக் குறையாமல் அட்டவணை 4ல் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி தொழிலை செய்யும் நிறுவனங்கள் தொழில் வரியுடன் ஓராயிரம் ரூபாய்க்கு மிகாமல் நிறுமம் வரியையும் செலுத்தப்பட வேண்டும்.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919, பிரிவு எண் 110ன்படி சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இயங்கும் நிறுவனங்களின் முதலீட்டுத் தொகையின் (Paid up Capital) அடிப்படையில் நிறுமம் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது நடைமுறையிலுள்ள வழிமுறையின்படி நிறுவனத்தின் அரையாண்டு நிறுமம் வரியானது கீழ்காணும் அட்டவணையின்படி வசூலிக்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை**

| வ.எண். | ஆண்டு முதலீடு தொகை (இலட்சங்களில்) | அரையாண்டு நிறுமம் வரி |
|---|---|---|
| 1. | ஒரு இலட்சத்திற்கு குறைவாக (ரூ.99,999க்குள்) | ரூ.100/– |
| 2. | ரூபாய் 1,00,000 முதல் ரூபாய் 1,99,999 க்குள் | ரூ.200/– |
| 3. | ரூபாய் 2,00,000 முதல் ரூபாய் 2,99,999 க்குள் | ரூ.300/– |
| 4. | ரூபாய் 3,00,000 முதல் ரூபாய் 4,99,999 க்குள் | ரூ.400/– |
| 5. | ரூபாய் 5,00,000 முதல் ரூபாய் 9,99,999 க்குள் | ரூ.500/– |
| 6. | ரூபாய் 10,00,000 க்கு மேல் | ரூ.1,000/– |

இருப்பினும், ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது முதன்மை அலுவலகம் சென்னை மாநகரத்தில் இல்லாமல் இருந்தால் அந்நிறுவனம் ஈட்டும் மொத்த வருமானம் அல்லது சென்னை மாநகரில் இயங்கும் கிளை நிறுவனத்திலிருந்து ஈட்டப்படும் முந்தைய நிதியாண்டின் மொத்த வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிறுமம் வரி செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண். | நிறுவனத்தின் மொத்த வருமானம் | அரையாண்டுக்கு செலுத்த வேண்டிய நிறுமம் வரி |
|---|---|---|
| அ. | ரூ.5,000/–க்கு மிகாமல் | ரூ.25/– |
| ஆ. | ரூ.5,001/– முதல் ரூ.10,000/– வரை | ரூ.50/– |
| இ. | ரூ.10,001 /– முதல் ரூ.20,000/– வரை | ரூ.100/– |
| ஈ. | ரூ.20,000/–க்கு மேல் | ரூ.100/– மற்றும் 20,000க்கு மேல் கூடுதலாக உள்ள தொகைக்கும ஒவ்வொரு 5,000/–க்கும் ரூ.25/– வீதம் அதிக பட்சம் ரூ.1000/– |

இருப்பினும் ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது முதன்மை அலுவலகம் சென்னை மாநகரில் இல்லாமல் இருந்தாலும் சென்னை நகரில் இயங்கும் கிளை நிறுவனத்திற்கு முதல் ஆண்டிற்கு நிறுமம் வரி ரூ.25/– செலுத்தப்பட வேண்டும். ஆனால் அந்நிறுவனத்தின் மொத்த வருமானம் அந்த ஆண்டில் ரூ.5000/–க்கு மிகையாக இருப்பதாகக் கண்டறியப்பட்டால் அந்நிறுவனம் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விகிதத்தின்படி முதலில் செலுத்திய ரூ.25/–ஐ கழித்து மீதமுள்ள தொகை செலுத்த வேண்டும்.

மன்றத் தீர்மான எண்.94/2012, நாள் 18.04.2012ன்படி விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளிலும் நிறுமம் வரி வசூலிக்க மன்ற அனுமதி பெறப்பட்டு, மன்றத் தீர்மான விவரங்களை அரசுக்கு அனுப்பி ஆணை வழங்கக் கோரியதில் அரசு கீழ்காணும் அறிவுரைகள் வழங்கியுள்ளது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, பிரிவு–98ன்படி ஏதேனும் ஒரு வரியினை முதன் முறையாக வரி விதிப்பதற்கான அறிவிக்கையினை முதலில் அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும், இந்த வரிவிதிப்பதின் நோக்கத்தினை உள்ளூர் செய்தித் தாள்களின் அறிவிப்புக் கொடுத்து அதன் தொடர்பாக பிரிவு–110 ன்படி ஏதேனும் ஆட்சேபனை பெறும் பட்சத்தில் அதனை கருத்தில் கொண்ட பின்னரே மாமன்றம் இந்த வரியை விதிக்க முடியும் என்றும் மேலும் பிரிவு 110–ன்படி இந்த வரியை முன் தேதியிட்டு விதிப்பதற்கான வழிவகை செய்யப்படவில்லை என்றும், எதிர்வரும் தேதியை கருத்திற் கொண்டு மட்டுமே வரி விதிக்க முடியும் என அரசுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்குள் ஏதேனும் ஆட்சேபணைகள் பெறப்பட்டால் அவற்றை பரிசீலித்து மன்றத் தீர்மானத்தின் மூலம் வரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அத்தீர்மானத்தில் வரி விகிதங்கள் மற்றும் வரி விதிப்பு ஆகியவை போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

பின்னர் இதுகுறித்து அரசின் அனுமதி பெற்று குறிப்பிட்ட தேதியில் அமல்படுத்தி நிறுமம் வரி விதிப்பினை மேற்கொள்ளலாம்.

எனவே, விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நிறுமன வரியை வசூல் செய்வதற்கு ஏதுவாக சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு–98Aன்படி மன்றத் தீர்மான பிரேரணைகளை தமிழ் நாடு அரசிதழ் மற்றும் உள்ளூர் செய்தித் தாள் வெளியிடவும் மேலும் இது குறித்து ஆட்சேபனை ஏதும் இருப்பின் அவற்றை தெரிவிப்பதற்காக 1 மாத கால அவகாசம் அளித்து அறிவிப்பு வெளியிட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 349/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/2808/2013**
**முதன்மை செயலர் / ஆணையர் 25.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.497/2013 **பொருள் எண். 72**

**இயந்திரப் பொறியியல் துறை – 41 எண்ணிக்கை – 3 சக்கர அல்லது அதற்கு இணையான வாகனத்தில் பொருத்தப்பட்ட புகைபரப்பும் இயந்திரங்கள் மூலம் புகைபரப்பும் பணியை மேற்கொள்ள – வாகனங்கள் வாடகைக்கு அமர்த்த ஒப்பம் கோரி திறக்கப்பட்டது – குறைந்த விலையளித்த ஒப்பதாரர் திருவாளர்கள். தாமோதரன் என்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு பணியினை வழங்க அனுமதி**

திறந்த வெளிக் கால்வாய்கள், மூடப்படாத கிணறு, திறந்த நிலை நீர்த்தொட்டிகள், சாலைகளில் தேங்கும் மழை நீர், உபயோகப்படுத்தாத திறந்த வெளி நிலங்கள், சரியாக உபயோகப்படுத்தப்படாத பொது கழிவறைகள், குப்பை சேகரிக்கும் இடங்கள், மழைநீர் மற்றும் கழிவு நீர் அடைப்பு ஆகியவற்றினால் நாளுக்கு நாள் கொசுக்களின் பெருக்கம் அதிகமாகி கொண்டே வருகிறது. இதனால் எல்லாராலும் அஞ்சப்படுகின்ற நோய்களான மலேரியா, டெங்கு, யானைக்கால் ஆகியவை உண்டாகின்றன.

இந்நோய்களை தடுக்கும் பொருட்டு 41 எண்ணிக்கைகளில் கொசு மருந்து மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பான்களை கொண்டு இயங்கும் சிறிய வகை புகை பரப்பும் இயந்திரங்கள் குடிசை பகுதிகள், இதர சாலை மற்றும் சந்துகளில் மூன்று சக்கர வாகனங்களின் மீது பொருத்தி உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணி திருப்திகரமாக உள்ளதால் மக்கள் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த மூன்று சக்கர வாகனங்களின் வாடகை காலம் தற்போது முடிவடைந்த நிலையில் உள்ளதால் தற்காலிகமாக அந்தந்த மண்டல அலுவலர்கள் தனது தேவைக்கேற்ப தின வாடகையாக வாகனங்கள் அமர்த்தி பணி மேற்கொண்டு வருகிறார்கள்.

எனவே, 15 மண்டல அலுவலர்களுக்கு 41 சிறிய வகை புகை பரப்பும் இயந்திரங்களை பொருத்தி உபயோகப்படுத்துவதற்காக மூன்று சக்கர அல்லது அதற்கு இணையான வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தும் பொருட்டு ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு வருகின்ற மழைகாலங்களை எதிர்நோக்கிய நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பம் கோரியதற்கும் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டும் தமிழ் நாளிதழ்களிலும், சென்னை மாநகராட்சி செய்தி மலரிலும், பிரசுரம் செய்யப்பட்டன. மேலும், ஒப்பப் படிவங்கள் இலவசமாக இறக்கம் செய்து கொள்ளும் பொருட்டு இணைய தளத்தில் ஏற்றம் செய்யப்பட்டன.

இவ்வொப்பம் 12.7.2013 அன்று திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் 1) திருவாளர்கள். தாமோதரன் இன்ஜினியரிங் எண்டர்பிரைஸஸ் மற்றும் 2) திருவாளர்கள். கிரேஸ் டிரான்ஸபோர்ட் மற்றும் திருவாளர்கள். ஜெம் டிராவல்ஸ் ஆகிய மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இவர்கள் சமர்ப்பித்த ஒப்பப் படிவங்கள் ஆய்வு செய்யப்பட்டு தகுதி பெற்றதாக ஒப்பங்கள் ஆய்வுக் குழுமம் அறிவித்த பின், ஒப்பதாரர்கள் முன்னிலையில் அவர்கள் குறிப்பிட்டிருந்த விலை விவரங்கள் படிக்கப்பட்டன. இவ்விலை விவரங்கள் பின்வருமாறு:

| S. No | Description | Rate quoted by | | |
|---|---|---|---|---|
| | | **M/s.தமோதரன் இன்ஜினியரிங் எண்டர்பிரைஸஸ்.** | M/s. கிரேஸ் டிரான்ஸ் போர்ட் | M/s. ஜெம் டிராவல்ஸ் |
| 1. | Hire charges for 4 hours | **520/-** | 625/- | 675/- |
| 2. | Hire charges for every extra hour beyond 4 hours | **100/-** | 145/- | 175/- |
| 3. | Hire charges per KM run | **5.50** | 7.00 | 8.00 |
| 4. | Evaluations amount ( 25 kms & 4 hours operator) | **657.50** | 800/- | 875/- |

மேற்குறிப்பிட்ட விலை விவர அட்டவணைப்படி, திருவாளர்கள். தாமோதரன் என்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் நிறுவனம் குறைந்த விலையளித்துள்ளது எனத் தெரிய வருகிறது.

மேலும் விலைக்குறைப்பு செய்ய வேண்டி திருவாளர்கள். தாமோதரன் என்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது. அந்நிறுவனம் தனது **18.7.2013** நாளிட்ட கடிதத்தில் ஒப்பத்தில் கண்டுள்ள வாடகை பணிக்குண்டான விலைப்புள்ளியாக 4 மணி நேர ஆட்டோ வாடகையாக ரூ. **520/–** ம் ஒரு மணி நேர வாடகையாக ரூ. **100/–** ( iii) ஒரு கிலோ மீட்டர் வாடகையாக ரூ. **5.50** என குறைந்த விலைப்புள்ளியாக நிர்ணயம் செய்திருந்தார். இந்நிலையில் மேலும் விலை குறைக்க இயலாது எனவும் தற்போது சூழ்நிலையில் டீசல் விலை ஏற்றம் காரணமாக ஒப்ப விலை கண்டிப்பாக குறைக்க வாய்ப்பே இல்லை என தெரிவித்துள்ளார்கள்.

திருவாளர்கள். தாமோதரன் என்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் அளித்துள்ள விலை விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 01 | 4 மணி நேர வாடகை மட்டும் | ரூ.520.00/– |
| 02 | 4 மணி நேரத்திற்குமேல் கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு | ரூ. 100.00/– |
| 03 | ஒவ்வொரு கிலோ மீட்டர் துாரத்திற்கான செலவினம் ரூ.5.50 வீதம் குறைந்த துாரமான 25 கி.மீட்டருக்கு | 25x 5.50 = ரூ. 137.50/– |
| 04 | ஒரு நாளைக்கு ஒரு வாகனத்திற்கு மட்டும் (4மணி நேர வாடகை ரூ, 520+25கி.மீ ஓடும் துாரம் ரூ. 137.50) | **ரூ. 657.50** |
| 05 | ஒரு வாகனத்திற்கு ரூ.657.50 வீதம் 41 வாகனத்திற்கு ஒரு நாளைக்கு ஆகும் செலவு | ரூ.26,958/– |
| | **ஒரு ஆண்டிற்கு ஆகும் செலவு** | **ரூ. 98,39,670/–** |

மேற்குறிப்பிட்ட பட்டியலில், 4 மணி நேர வாகன உபயோகிப்பு என்பது சராசரியாக 25 கி.மீ., வரை ஓடும் துாரத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு இதே பயன்பாட்டிற்கு கடைசியாக தீர்வு செய்யப்பட்ட ஒப்பத்தில் ஒரு வாகனத்திற்கு நாளொன்றுக்கான வாடகை விலை ரூ. 770/– ஆகும். தற்போது உள்ள ஒப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலைப்படி நாளொன்றுக்கு ஒரு வாகனத்திற்கு ஆகும் தொகை ரூ. 657.50 ஆகும்.

எனவே, மேற்கூறிய பணிக்காக 41 எண்ணிக்கைகள் மூன்று சக்கர அல்லது அதற்கு இணையான வாகனங்கள் வாடகைக்கு அமர்த்த இவ்வொப்பத்தில், குறைந்த விலையளித்த ஒப்பதாரர் திருவாளர்கள். தாமோதரன் இன்ஜினியரிங் எண்டர்பிரைஸேஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ள விலைகளை சென்ற வருடம் வழங்கிய விலையுடன் ஒப்பிடுகையில் இவ்விலை குறைவாகவும், நியாயமானதாகக் கருதி பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இப்பணிக்கு ஆகும் தோராய குறைந்த செலவான ரூ.98,39,670/–ஐ சுகாதாரத்துறை மூலமாக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வொப்பத்தின் செல்லத்தக்க காலம் 9.10.2013 வரை ஆகும்.

1) வருகின்ற மழைக்காலங்களை கருத்தில் கொண்டு பணியின் அவசர அவசியம் கருதி 41 எண்ணிக்கைகளில் கொசு மருந்து தெளிப்பான்கள் கொண்டு இயங்கும் சிறியவகை புகைபரப்பும் இயந்திரங்கள் பொருத்தி 3 சக்கர அல்லது அதற்கு இணையான வாகனங்கள் வாடகைக்கு வழங்க ஒப்பங்கள் கோரியதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2) குறைந்த விலையளித்த திருவாளர்கள். தாமோதரன் இன்ஜினியரிங் எண்டர்பிரைஸேஸ் நிறுவனம் வழங்கிய 4 மணி நேர பயன்பாட்டிற்கு ஒரு வாகனத்திற்கு நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.520/–ம், அதற்கு மேல் ஒவ்வொரு மணி நேர பயன்பாட்டிற்கும் வாடகை ரூ.100/–ம், ஒரு கி.மீ. வாகன ஓட்ட வாடகை ரூ.5.50 விதம் 25 கீ.மீக்கு ரூ.137.50 சேர்த்து மொத்தம் ரூ.657.50/– அங்கீகரிக்கவும், பட்டுவாடா செய்யப்படும் தொகை ஒவ்வொரு மண்டலத்திலும், வாகனம் உபயோகிக்கும் நேர அவகாசம் மற்றும் கி.மீ துார ஓட்டம் ஆகியவை கணக்கிடப்பட்டு அதன்படி வழங்கவும்,
3) திருவாளர்கள். தாமோதரன் இன்ஜினியரிங் எண்டர்பிரைஸேஸ் நிறுவனத்தை ஒரு வருட தோராய மொத்த செலவீனமான ரூ.98,39,670/–ல் 2% தொகையை பாதுகாப்புத் தொகையாக பெற்று உடன்படியாக மேற்கொள்ளவும்,

4) 41 வாகனங்கள் வாடகைக்கு அமர்த்த 1 வருட தோராய செலவீனமான ரூ.98,39,670/– {(ரூ.520/– for 4 hrs + 25 கி.மீ. x 5.50) x 41 வாகனங்கள் x 300 நாட்கள்}–ஐ சுகாதாரத்துறை மூலமாக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

5) உள்ளபடியான பயண தூரம் மற்றும் அதற்கான வாகன உபயோக வாடகை ஆகியன பூச்சியியல் வல்லுநர்/ மண்டல உதவி சுகாதார அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து சான்றிதழ் பெறப்பட்டு, இறுதியில் சுகாதாரத்துறையிடம் அனுமதி பெற்று, அதன்படி ஆகும் செலவினை பகுதி கணக்கு குழுமம் (சுகாதாரத் துறை) மூலமாக வழங்கவும்,

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு ( வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 15.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 69 /2013, –ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 309 /2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு ( வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 350/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>மா.கு.ந(ம) ம.கு.ந.க.எண் எப் 17/2004/09</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 25.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.498/2013 பொருள் எண்.73

**<u>மாநகராட்சி மருத்துவ மனைகளில் பிறந்த குழந்தைகளுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் 65வது பிறந்த நாளை முன்னிட்டு 1065 குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை வழங்க அனுமதி</u>**

மாமன்றத் தீர்மானத்தின்படியும், மேலும் **2009—10**ஆம் ஆண்டின் நிதிநிலை அறிவிப்பின்படியும், சென்னை மாநகராட்சியின் மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தை களுக்கு, செந்தமிழில் பெயரிடப்பட்டால், ஒரு கிராம் எடையுள்ள தங்க மோதிரம் பரிசாக வழங்க, தங்க மோதிரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, கடந்த **03.06.09** முதல் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.

திட்டத்தின் தொடக்கத்தில் **750** தங்க மோதிரங்கள் மூன்று கட்டமாக **(250** மோதிரங்கள் ஒவ்வொரு முறையும்**)** கொள்முதல் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு **(750** குழந்தைகளுக்கு**)** வழங்கப் பட்டது. அதனையடுத்து **900** தங்க மோதிரங்கள் இரண்டு கட்டமாக **(400** மற்றும் **500** மோதிரங்கள் முறையே**)** கொள்முதல் செய்யப்பட்டு மார்ச் **2011**ல் அனைத்து **(10)** மண்டலங்களிலும், தமிழ்ப் பெயரிடப் பட்டு கோரப்பட்டிருந்த பயனாளிகளுக்கு வழங்குவதாக ஏற்பாடு செய்யப்பட்டு, முதலில் சைதாப் பேட்டை மண்டலத்தைச் சார்ந்த **41** குழந்தைகளுக்கு மட்டும் தங்க மோதிரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தேர்தல் அறிவிப்பு வெளியிட்டதன் காரணமாக, மீதமிருந்த 859 (900-41) தங்க மோதிரங்களை நிர்வாக காரணங்களால் பயனாளிகளுக்கு விநியோகிக்க இயலாததினால், பாதுகாப்பாக மாநகராட்சியின் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட **859** தங்க மோதிரங்களையும் விற்று பணமாக்கி கருவூலத்தில் செலுத்தலாம் என அறிவுறுத்தப்பட்டது. இதன்பொருட்டு எந்தவகையில் தங்கமோதிரங்களை விற்பனை செய்வது என்பது குறித்து மேல் நடவடிக்கையில் உள்ளது. தற்சமயம் தங்க மோதிரங்களை முறையாக குழு அமைத்து விற்பனை செய்யும் பட்சத்தில், மாநகராட்சிக்கு எந்த அளவிற்கு சாதகமான விலை கிடைக்கும் என்று தெரியாத நிலையிலும், மேலும் மார்ச் **2011** ஆம் ஆண்டின் தமிழில் பெயரிடப்பட்ட அதே குழந்தைகளுக்கு வழங்கலாம் என்ற நிலை ஏற்படின், அந்த குழந்தைகளுக்கு தற்சமயம் வயது சுமார் இரண்டிற்கு மேல் இருக்கும் நிலையில், இந்த அளவிலான மோதிரங்கள் விரல்களுக்கு பொருந்தாத நிலையிலும், இது குறித்து , **15.02.13** அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுடன், மாவட்ட குடும்பநல மருத்துவ அலுவலர் மற்றும் துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களும் கலந்தாலோசித்த சமயத்தில், **859** தங்க மோதிரங்களை விற்பனை செய்து பணமாக்கி கருவூலத்தில் செலுத்துவதை விடவும், மேலும் பழைய கணக்கீட்டின்படி தமிழ் பெயரிடப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கினாலும் அவர்களின் வயதின் காரணமாக விரல்களுக்கு பொருந்தாத நிலையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் **65**வது பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் **1065** குழந்தைகளுக்கு ( பிப்ரவரி **2013** முதல் தேதியிலிருந்து மாநகராட்சி மருத்துவமனையில் பிறந்த **1065** குழந்தைகளை வரிசை கிரமமாக கணக்கிட்டு) தங்க மோதிரங்களை வழங்கலாம் என ஆலோசிக்கப்பட்டது. மேலும் இந்த அளவில் வழங்க, கருவூலத்தில் உள்ள **859** தங்க மோதிரங்களை பயன்படுத்திக் கொண்டும் , மேலும் கூடுதலாக தேவைப்படும் **206** தங்க மோதிரங்களை (ஒவ்வொன்றும் ஒரு கிராம் அளவில்) கொள்முதல் செய்தும், மொத்தமாக **1065** குழந்தைகளுக்கு வழங்கலாம், என கருத்துரை வழங்கினார்.

மேலும், மாநகராட்சி கருவூலத்திலுள்ள **859** தங்க மோதிரங்களை (ஒவ்வொன்றும் ஒரு கிராம்) பணமாக்கி கருவூலத்தில் செலுத்தப்படவேண்டும் என்ற ஆணையினை இரத்து செய்துவிட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் **65**வது பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் **1065** குழந்தைகளுக்கு (பிப்ரவரி **2013** முதல் தேதியிலிருந்து அனைத்து மாநகராட்சி மருத்துவ மனையில் பிறந்த **1065** குழந்தைகளை வரிசை கிரமமாக கணக்கிட்டு) தங்க மோதிரங்களை வழங்கும் வகையில், கருவூலத்தில் உள்ள **859** தங்க மோதிரங்களை பயன்படுத்திக் கொண்டும், மேலும் கூடுதலாக தேவைப்படும் **206** தங்க மோதிரங்களை (செ.மா) எனபெயர் பொறித்து **(859 + 206 = 1065)** (ஒவ்வொன்றும் ஒரு கிராம் அளவில்) கொள்முதல் செய்ய மேற்கூறிய வகையில், **206** தங்க மோதிரங்களை ஒவ்வொன்றும் ஒரு கிராம் அளவில் கொள்முதல் செய்ய

தோராயமாக ஒரு கிராமின் விலை ரூ **2,600/–** வீதம் மொத்தம் **206** தங்க மோதிரங்களை கொள்முதல் செய்ய தோராயமாக ரூ **5,35,600/–** (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பத் தைந்தாயிரத்து அறுநூறு மட்டும்) செலவாகலாம். இதற்கான செலவினங்களை பிரிவுக் கணக்கு **30–34–02** மற்றும் கணக்குப் பிரிவு **230–20–07–00** ல் மேற்கொள்ளலாம்.

எனவே,

1. மாநகராட்சியின் கருவூலத்தில் கொள்முதல் செய்யப்பட்டு பாதுகாப்பாக உள்ள **859** தங்க மோதிரங்களை விற்பனை செய்து பணமாக்கி கருவூலத்தில் செலுத்தும் நடவடிக்கையினை இரத்து செய்ய அனுமதியும்,
2. **1065** தங்க மோதிரங்களை வழங்கும் பொருட்டு, கொள்முதல் செய்யப்பட்டு மாநகராட்சி கருவூலத்தில் உள்ள **859** தங்க மோதிரங்களை பயன்படுத்திக் கொள்ள அனுமதியும்,
3. மேலும் கூடுதலாக வழங்க தேவைப்படும் **206** தங்க மோதிரங்களை (செ.மா) என பெயர் பொறித்து (ஒவ்வொன்றும் ஒரு கிராம் அளவில்) ஒரு கிராமின் விலை ரூ **2600/–** வீதம், மொத்தமாக **206** தங்க மோதிரங்களை தோராயமாக ரூ **5,35,600/–** ( ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பத்தைந் தாயிரத்து அறுநூறு மட்டும்) செலவில் கொள்முதல் செய்து வழங்க அனுமதியும்,
4. இதற்கான செலவினங்களை பிரிவுக் கணக்கு **30–34–02** மற்றும் கணக்குப் பிரிவு **230–20–07–00** ல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட **1** முதல் **4** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் **15.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.07.2013** அன்று தீர்மான எண். **70/2013**–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.07.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.07.2013** அன்று தீர்மான எண். **351/2013**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**த.பொ.(பொது).ந.க.எண்.அ1/1071/2013**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 25.07.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.499/2013 பொருள் எண்.74

**தென்கொரிய தலைநகர் சீயோலில் நடைபெறவுள்ள சர்வதேச கருத்தரங்கில் இரண்டு மூத்த அதிகாரிகள் கலந்துகொள்ள அனுமதி**

கொரிய அரசின் அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி நிறுவனமான "The Korea Transport Institute" 7 நாட்கள் கொண்ட சர்வதேச கருத்தரங்கினை அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை கொரிய தலைநகர் சீயோலில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளும் அதிகாரிகளின் பயணச் செலவுகளை இந்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் ஏற்றுக்கொள்கிறது.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய சாலைகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் சர்வதேச அளவில் நடைபெறும் கருத்தரங்கில் பெறப்படும் தொழில்நுட்ப அறிவுகள், அனுபவங்கள் அவசியமாகிறது. எனவே, இரண்டு மூத்த அதிகாரிகள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, கீழ்க்கண்ட இரண்டு மூத்த அதிகாரிகள், தென்கொரிய தலைநகர் சீயோலில் அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை நடைபெறும் சர்வதேச கருத்தரங்கில் கலந்துகொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. Thiru. Leslic Joseph Sureshkumar. C.E.,
2. Thiru. Puhazhendi. S.E (BRR)

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.07.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.07.2013 அன்று தீர்மான எண். 348/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/21762/2013</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 25.07.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.500/2013 பொருள் எண்.75

**<u>பணியமைப்பு</u>**

விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியின் வழக்குகளை நன்முறையில் கையாண்டு விரைவில் முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு, அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் (Additional Advocate General) அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகராட்சிக்கு ஒரு முதுநிலை சட்ட அலுவலர் (Senior Law Officer) பணியமர்த்தப்பட வேண்டியுள்ளதால், மேற்படி முதுநிலை சட்ட அலுவலர் ஒருவருக்கான பணியிடத்தை சென்னை மாநகராட்சியில் உருவாக்கி, அப்பணிக்கு தமிழக அரசுப் பணியிலிருந்து மாற்றுப்பணி அடிப்படையில் (On deputation basis) ஒரு முதுநிலை சட்ட அலுவலரை நியமிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சி சட்டக் குழுமத்தில் உள்ள வகுப்பு–1B மற்றும் வகுப்பு–2ஐ சேர்ந்த அனுமதிக்கப்பட்ட பதவிகள் மற்றும் இப்பதவிகளுக்காக அரசாணை எண்.129, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:22.05.1985ல் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகள் பின்வருமாறு:

| **Posts** | **Methods of Recruitment** | **Qualifications** |
|---|---|---|
| **01** | **02** | **03** |
| Law Officer (Class-IB) (15600-39100+ Gp 6600) | By Direct Recruitment | 1. Must be an Advocate enrolled on the rolls of the Bar Council of Tamil Nadu: or any other Bar Council in India<br>2. Must have an experience of not less than ten years practice in the Bar: and<br>3. Must possess adequate knowledge of Tamil |
| | By Promotion from Assistant Law Officer | 1. Must have served as Assistant Law Officer in the Legal Cell of the Corporation of Madras: and<br>2. Must have a total experience of not less than ten years as a practicing Advocate and as an Assistant Law Officer in the Legal Cell of the Corporation of Madras. |
| Assistant Law Officer (Class-2) (9300-34800+ Gp 4600) | By Direct Recruitment | 1. Must be an Advocate enrolled on the rolls of the Bar Council of Tamil Nadu or any other Bar Council in India;<br>2. Must have an experience of not less than five years practice in the Bar:<br>3. Must possess adequate knowledge of Tamil. |

சென்னை மாநகராட்சி சட்டக் குழுமத்தில் முதுநிலை சட்ட அலுவலர் பதவியில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் ஏதும் கிடையாது. சென்னை மாநகராட்சி சட்ட குழுமத்திற்கு இப்பதவியை புதியதாக தோற்றுவிக்கவும், இப்பதவிக்கான பணிவிதிகளை உருவாக்கவும் மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு முன்மொழிவு அனுப்பி ஆணை பெற வேண்டும்.

சென்னை மாநகராட்சி சட்ட குழுமத்திற்கு முதுநிலை சட்ட அலுவலர் பதவி தோற்றுவிக்கவும், இப்பதவிக்கு கீழ்கண்டவாறு பணிவிதிகளை உருவாக்கவும் அரசின் ஆணை பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் முதுநிலை சட்ட அலுவலர் பதவிக்கான பணிவிதிகளை தெரிவிக்குமாறு கோரியதில், உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் 22.07.2013 நாளிட்ட கடிதத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் முதுநிலை சட்ட அலுவலர் பதவிக்கு கீழ்கண்டவாறு பணிவிதிகள் உருவாக்க அரசின் ஆணை வேண்டி முன்மொழிவு அனுப்பட்டு ஆணை எதிர்நோக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Posts | Methods of Recruitment | Qualifications/Experience |
|---|---|---|
| Senior Law Officer<br><br>(15600-39100+Gp7600) | Direct Recruitment | Must be a Law Graduate and must have bar experience for a period of five years in High Court. |
| | By Promotion from Law Officer Grade-I | Must have served as Law Officer, Grade-I for a period of not less than 5 years in CMDA. |

எனவே சென்னை மாநகராட்சி சட்டக்குழுமத்திற்கு முதுநிலை சட்ட அலுவலர் பதவி தோற்றுவிப்பதற்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பணிவிதிகளை அடிப்படையாக கொண்டு சென்னை மாநகராட்சியிலும் முதுநிலை சட்ட அலுவலர் பதவிக்கு கீழ்கண்ட பணிவிதிகளை இயற்றிட அரசின் ஆணை வேண்டி மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Posts | Methods of Recruitment | Qualifications |
|---|---|---|
| **01** | **02** | **03** |
| Senior Law Officer (Class-IB) (15600-39100+Gp7600) | Direct Recruitment | 1. Must be a Law Graduate and must have bar experience for a period of not less than ten years in High Court and must be less than 40 years of age. |
| | By Promotion from Law Officer | 1. Must have served as Law Officer, for a period of not less than 10 years in Corporation of Chennai. |
| | By Deputation from the Law Department of Government of Tamil Nadu | 2. B.L.Degree from any recognized University in the State of Tamil Nadu or an equivalent degree of any other University in the Union of India.<br>3. Must be in the rank not below Deputy Secretary in the Law Department of Government of Tamil Nadu. |

“இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும்அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******